# தமிழரசு

ஜூலை 1 - 31, 2001 ரூ. 10/-



# இந்த இதழில்.....


- தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக்குவோம் ........ 2
- ஓய்வூதியம் பெறுவோர் தகவல் வழிகாட்டி இணையம் ........ 5
- நில அளவைப் பதிவேடுகள் அலுவலகக் கட்டடங்கள் ........ 6
- அரசு ஊழியர் என்றால் மக்கள் சேவகர் என்று பொருள் ........ 7
- கால்பந்து வீராங்கனைக்கு அரசு பணி ........ 13
- பெருந்தலைவர் காமராசர் ........ 15
- கல்வி உதவி ........ 17
- போக்குவரத்து சீரமைப்பு ........ 19
- ஆலோசனை அழைப்பு ஒரு சரித்திர சாதனை ........ 21
- விடுதலைப் போராட்ட வீரர்க்கு ஓய்வூதியம் ........ 22
- தாய்ப்பால் கொடுப்பதால் ஏற்படும் நன்மைகள் ........ 23
- இருதய மாற்று சிகிச்சைக்கு நிதியுதவி ........ 27
- இளைஞனே நில் ........ 28
- தொழில்நுட்பப் பட்டப் பிரிவில் சேர ஒதுக்கீடு ........ 29
- வளர்ச்சிப் பாதையில் சுற்றுலாத் தொழில் ........ 31
- உயர்கல்வி பயில உதவி ........ 35
- கலப்புத் திருமண உதவி ........ 37
- அண்ணா விருது பெற்றவருக்கு பணி ........ 41
- குஜராத் நில நடுக்கத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு உதவி ........ 43
- கம்ப்யூட்டர் உலகில் இந்தியா ........ 44
- தமிழகக் காட்டுயிர்கள் ........ 47
- ஊனமுற்ற பெண்களுக்கு உதவி ........ 53
- சவகர் சிறுவர் மன்றம் ........ 55
- கால்நடை உற்பத்திப் பொருட்களின் விற்பனை ........ 61
- பெரிய வீரன், சின்ன வீரன் ........ 67
- மல்லிகை மோகினி ........ 70
- தமிழ் வளர்த்த சங்கம் ........ 77
- புற்று நோயைத் தடுக்கும் காய்கறிகள் ........ 83
- தரிசு நிலங்கள் பண்ணைத் தோட்டங்களாக மாற்றம் ........ 85
- டிட்கோ இணையதளம் ........ 86
- முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு உதவுங்கள் ........ 88



## தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2032

ஆனி – ஆடி

ஜூலை 1 – 31, 2001

மலர் : 33 இதழ் : 1 & 2

விலை ரூ.10


**முதல் பக்க அட்டையில் :**

நில அளவைப் பதிவேடுகள் அலுவலகக் கட்டடம் திறப்புவிழா

**இரண்டாம் பக்க அட்டையில் :**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கக் கட்டடத் திறப்பு விழா

**கடைசிப் பக்க அட்டையில் :**

ஓய்வூதியம் பெறுவோர் தகவல் வழிகாட்டி இணையம்

# தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக்குவோம்

□ மாண்புமிகு முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா




இந்தியா முழுவதுமுள்ள முக்கியத்துவம் வாய்ந்த தொழில்களின் தலைமை நிர்வாகிகள் அடங்கிய இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசியக்குழு கூட்டத்தில் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்திய தொழில் கூட்டமைப்பு தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் இந்தியாவின் தொழில் நிலைமை பற்றி சரியான முறையில் சித்தரிப்பைக் கொடுப்பதில் மிக முக்கியப் பங்காற்றி வந்துள்ளது. வரிவிதிப்பு, நிதி, ஏற்றுமதி,சர்வதேச வணிகம், பொதுத்துறை சீர்திருத்தம், தொழில் கொள்கை, அயல்நாட்டு முதலீடு போன்ற பலவிதமான பிரச்சினைகளில் கொள்கை வகுப்பதில் இந்திய தொழில் கூட்டமைப்பு முக்கியத்துவம் வாய்ந்த பங்காற்றி இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதில் நான் மகிழ்ச்சி யடைகிறேன்.

இத்தகைய மிகப் பெருமை வாய்ந்த கூட்டத்தில் கலந்து கொள்வதில் நான் மிக மிக மகிழ்ச்சி அடைகிறேன். உங்களுடைய ஒட்டுமொத்தமான உழைப்பில் இந்தியத் தொழில் மாபெரும் வளர்ச்சியை ஈட்டும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இந்தக் கூட்டத்திற்கு என்னை அழைத்தவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கலந்துரையாடல் தமிழ்நாட்டில் துரித தொழில் போக்கிற்கு வழிவகுக்கும் வகையில் இந்திய தொழில் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும், தமிழக அரசிற்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

உலகில் மிகப் பெரிய ஜனநாயக நாடும், ஐந்தாவது மிகப் பெரிய பொருளாதாரத்தைக் கொண்டதுமான இந்தியா துரிதமான பொருளாதார மாற்றுப் பாதையில் இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். இன்று இந்தியா புதிய தொழில் பொருளாதார நாடுகளில் மொத்த உற்பத்தித் திறன்கொண்ட இரண்டாவது பெரிய நாடாக இருக்கிறது. சீர்திருத்தத்தின் முதல் கட்டம் முடிவடைந்து இந்தியா தற்போது இரண்டாவது கட்டத்தில் குறிப்பாக நிதித்துறை, காப்பீட்டுத்துறை, கட்டுமானத்துறை ஆகியவற்றில் அடியெடுத்து வைத்துள்ளது. இறக்குமதி வரிகள் குறைக்கப்பட்ட பிறகு இரட்டை வரிவிதிப்பு, தவிர்ப்பு ஒப்பந்தத்தின் கீழ் வரிச்சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த சீர்திருத்தத்தின் விளைவாக இந்திய மற்றும் அயல்நாட்டு முதலீட்டாளர்களுக்குப் பலவிதமான சாதகங்கள் ஏற்பட்டுள்ளன.

தொழில் மயமாவதைப் பொறுத்தமட்டில் இந்தியாவிலுள்ள மாநிலங்கள் தமிழ்நாட்டின் நிலைமை பொறாமைக்கு இடமானதாக உள்ளது என்று கூறுவதில் நான் பெருமைப்படுகிறேன். வளர்ச்சிப் பாதையில்

மாநிலத்தை மேலும் முன்னெடுத்துச் செல்லும் வகையில் என்னுடைய அரசு துரிதமான வளர்ச்சி, வேலைவாய்ப்பு, சமத்துவம் ஆகிய கொள்கைகளை உள்ளடக்கிய பரவலான தத்துவத்தையும் உள்ளடக்கி உள்ளது. பொருளாதார வளர்ச்சியின் பலன்கள் அனைத்துப் பகுதியினருக்கும் சென்றடைய வேண்டும் என்பது எங்களது அரசின் கொள்கையாகும். குறிப்பாக வசதியின்மையாலும், சமூகக் கட்டமைப்பு இன்மையாலும், பாதிக்கப்படுபவர்களுக்கு இந்த ஆதாயங்கள் சென்றடைய வேண்டும். சமுதாயத்தின்




அனைத்துப் பிரிவினரும் குறிப்பாக கிராமப்புற மக்கள் பொருளாதார வளர்ச்சியின் பயன்களைப் பெறவேண்டும் என்பது எங்கள் அரசின் கொள்கை ஆகும். பொருளாதார வளர்ச்சியின் பலன்களைச் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும், குறிப்பாக கிராமப்புற மக்கள் பெறவேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

தமிழ்நாட்டில் வாகனங்கள் முதல் ஜவுளி,தோல், பெட்ரோ கெமிக்கல், தகவல் தொழில் நுட்பம் வரை பல்வேறு விதமான தொழில்கள் உள்ளன என்று உங்களிடையே பகிர்ந்துகொள்வதில் பெருமைப் படுகிறேன். எங்களது கட்டமைப்பு மேம்பாடு இந்தியாவிலுள்ள பல மாநிலங்களை விட உயர்ந்ததாக கருதப்படுகிறது. மின்துறையில் ஏராளமான முதலீடுகள் வந்து விடுவதால், இன்னும் ஓராண்டுக்குள் தமிழ்நாடு மின்சாரம் கிடைப்பதில் சுயசார்பை அடைந்துவிடும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.இந்தியாவில் தமிழ்நாட்டில் கல்வி அறிவு பெற்றவர்கள் மிக அதிகம். தமிழ்நாட்டில் மனிதவள மேம்பாடும் மிக வலுவானது. இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் ஏராளமான பொறியாளர்களை உருவாக்கி வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள தொழில்நுட்பக் கல்வி நிலையங்கள் மூலமாக ஆண்டுதோறும் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பத்தில் 25,000 பேர் உட்பட 45,000 பேர் பொறியியல் பட்டம் பெறுகின்றனர். சென்னையிலுள்ள தகவல் தொழில் நுட்பத்தில் நிபுணத்துவம் பெற்ற மிகப்பெரும்பாலானோர் உள்ளனர். இந்தியாவிலேயே தகவல் தொழில் நுட்பத்திற்குத் திட்டங்களை ஏற்படுத்த சிறந்த இடம் சென்னை என்பதை பல ஆய்வுகள் தெளிவுபடுத்தியுள்ளன. தற்போது தமிழ்நாட்டில் 770 தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உள்ளன. அவற்றின் ஏற்றுமதி 660 பில்லியன் அமெரிக்க டாலர்களாகும்.

தகவல் தொழில்நுட்பத்தைத் தவிர தமிழ்நாடு உயிரியல் தொழில்நுட்பம் போன்ற இதர தொழில்களிலும் முன்னணியாக இருக்கிறது. உயிரியல் தொழில்நுட்பம் குறித்த தனிக்கொள்கையே உள்ளது. தற்போது தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ஆறு உயிரியல் ஆய்வுமையங்களை உருவாக்கும் முயற்சியில் ஒரு அமெரிக்க நிறுவனத்துடன் சேர்ந்து ஈடுபட்டுள்ளது. சென்னையில் உயிரியல் பூங்கா ஒன்றை நிறுவ அமெரிக்காவின் கார்லைல் பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளோம். இத்தகைய மனித ஆற்றல் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு அழுத்தம் கொடுத்து வருவதால் தமிழ்நாடு வெகுவிரைவில் அறிவு சார்ந்த பொருளாதாரத்தின் முன்னோடியாக உருவாகும்.

முதலீட்டுக்கு இந்தியாவிலேயே மிகவும் கவர்ச்சிகரமான மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க எனது அரசு உறுதி பூண்டுள்ளது. இதை அடைய நாங்கள் பல்வேறு விதமான வணிகக் கொள்கைகளை உருவாக்கி உள்ளோம். அவையாவன :

- முதலீட்டாளர்கள் நட்பு ரீதியிலான வெளிப்படையான முடிவு எடுத்தல்.

- கட்டுமானத் துறை வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம்
- மனித ஆற்றல் மேம்பாடு
- மின்சார உற்பத்திக்கு தொடர் முயற்சி

வளர்ச்சிக்கான எங்களது முனைப்பில் ஒரு திடமான கொள்கையை உருவாக்கி அரசின் துடிப்பான தலைமையுடன் தனியார் துறையின் ஆற்றலையும், உள்ளாட்சி ஜனநாயக அமைப்புகள் மூலமாக மக்களை உற்சாகமாகப் பங்கேற்க வைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். பொருளாதாரத்தில் மேலும் அதிகமான முதலீடுகளைப் பெறும்வகையில் சீர்திருத்தங்களை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். எங்களுடைய தொழில்களின் போட்டிகரத்தன்மையை உயர்த்தியும், தனியார் துறையின் பங்கினை வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதேசமயத்தில் மனித நேயத்துடன் கூடிய சீர்திருத்தங்களை அமலாக்கும் எங்களது அணுகுமுறை தொடரும்.

சமூகநீதி மற்றும் சமத்துவம் ஆகியவற்றுடன் பொருளாதார வளர்ச்சி ஒன்றியிருக்க வேண்டும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அவற்றைப் பிரித்துப் பார்க்க முடியாது. சமீபத்தில் தமிழ்நாட்டு மக்கள் அளித்த சகாப்தத்தை உருவாக்கிய தீர்ப்பு என் தலைமையிலான ஒரு அரசால்தான் இந்த இரண்டு சாதனைகளையும் ஆற்ற முடியும் என்பதைக் காட்டியது. நாட்டிலேயே முதல் மாநிலமாக தமிழகத்தை மாற்ற அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். தொழில்,வர்த்தகம், தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் மேலும் முதலீடுகளைப் பெறும் வகையில் தமிழ்நாடு உருவாக்கப்படும். வெகுவிரைவில் தமிழ்நாடு மின்துறையில் சுயதேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் சகலவிதமான மின் திட்டங்களும் நிறைவேற்றப்படும்.

இந்தக் கூட்டம் வழியாக தொழில் வளர்ச்சிக்குத் தமிழ்நாட்டின் ஆற்றலை நீங்கள் தெரிந்து கொள்வதுடன் இந்தியாவிலேயே மிகவும் தொழில் வளர்ச்சி அடைந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குவதில் நீங்களும் உங்களது பங்களிப்பை அளிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

உங்களது வெற்றிக்கும், வளமைக்கும், அமைதிக்கும் எனது வாழ்த்துக்கள்.

உங்கள் கூட்டமைப்பின் தலைவர் சஞ்சீவ் கோயங்கா தமிழக அரசுக்கு சில வேண்டுகோள்களை விடுத்தார். அரசின் பரிசீலனைக்காக சில முக்கியமான பிரச்சினைகளை எடுத்துக் கூறினார். அவற்றில் ஒன்று தனியான உற்பத்தித் துறை கொள்கை– மற்றொன்று இந்திய தொழில் கூட்டமைப்பும், தமிழக அரசும் இணைந்து கூட்டு நடவடிக்கைக்குழு அமைப்பதுமாகும். இவை உண்மையிலேயே நல்ல ஆலோசனைகளாகும். எனது அரசு இந்தக் கோரிக்கைகளைத் தீவிரமாகப் பரிசீலிக்கும் என்று உறுதி கூறுகிறேன். விவசாயத் துறையிலும் நீங்கள் ஒத்துழைப்பதாகக் கூறியது வரவேற்கத்தக்கது. இதை எப்படி அமல்படுத்துவது என்பது குறித்து விவாதிப்போம். மின்துறையில் சீர்திருத்தம் பற்றியும் கூறப்பட்டது. மின்துறையில் சீர்திருத்தம் குறித்து அரசு ஆலோசித்து வருகிறது. அடுத்த ஆண்டு இது அமலாகும்.

நான் இங்கே வரும்போது வெளியில் சில கைவினைப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தேன். கைவினைப் பொருட்களுக்கும் இந்திய தொழில் கூட்டமைப்புக்கும் என்ன தொடர்பு என்று வியந்தேன்.

சமூக நடவடிக்கைகளில் இந்திய தொழில் கூட்டமைப்பு ஈடுபட்டு கைவினைப் பொருட்களை உருவாக்க சில குழுவினருக்கு ஆதரவு அளித்து வருவது குறித்து அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன். இதைத்தான் நான் தொழில் வளர்ச்சியும் சமூக சமத்துவமும் பிரித்துப் பார்க்க முடியாதவை என்று கூறினேன். இம்மாதிரியான உன்னதமான இலட்சியங்களை இந்திய தொழில் கூட்டமைப்பு அமலாக்கி வருவது கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். உங்களுடனான இந்தக் கலந்துரையாடல் உண்மையிலேயே பலனளிக்கிறது.

13.7.2001 அன்று நடைபெற்ற
இந்திய தொழில் கூட்டமைப்பில் கலந்து கொண்டு
தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
ஆற்றிய உரை.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 19.7.2001 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்களுக்குரிய பல்வேறு பயன்கள் குறித்த தகவல் அடங்கிய வழிகாட்டி இணைய தளத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

www.tn.gov.in/dop என்னும் இந்த இணைய தளத்தின் மூலம் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான பல்வேறு பயன்கள் குறித்த முக்கிய தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், முன்னர் ஆட்சிப் பொறுப்பிலிருந்த 1993–ஆம் ஆண்டே ஓய்வூதியர்கள் மீது தனி அக்கறை கொண்டு, அவர்களுக்கு அரசு வழங்கிடும் பல்வேறு பயன்கள் குறித்து வழிகாட்டி ஏட்டினை வெளியிட்டார். தற்போது மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றதும், இம் முயற்சியினைத் திரும்பவும் மேற்கொண்டு, ஓய்வூதியர்கள் பயன்பெறும் வகையில் மின்னணு சாதனங்களின் நவீன முன்னேற்றத்திற்கு ஏற்ப மேம்படுத்தி, ஓய்வூதியர்களுக்கான இப்புதிய இணைய தளத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.

இந்த இணைய தளத்தில் ஓய்வு பெறுபவர்களுக்கான பயன்களும், பணியில் இருக்கும்போது இறந்துபோன அரசு ஊழியர்கள் குடும்பத்திற்கான பயன்களும், ஓய்வூதியர்கள் இறந்தபின் அவர்கள் வாரிசுதார்களுக்கான பயன்களும் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், ஓய்வூதியக் கருத்துருக்கள் அனுப்புவதற்குரிய பல்வேறு படிவங்களும் உள்ளன.

இந்த இணைய தளத்தின் மூலமாக, அரசுப் பணி முடித்து ஓய்வூதியம் பெறுகின்ற 2.71 இலட்சம் ஓய்வூதியர்களும் மற்றும் வாரிசுதாரர்களாக ஓய்வூதியம் பெறும் 1.27 இலட்சம் குடும்ப ஓய்வூதியர்களும் ஓய்வூதிய அலுவலகத்திற்குச் செல்லாமலேயே, அவர்களுக்கு உரிய பயன்கள் குறித்த விவரங்களை எளிதில் அறிந்து கொள்ளலாம்.



உலகின் எந்தப் பகுதியிலிருந்தும், தமிழ்நாடு அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கான பயன்கள் குறித்த விவரங்களைத் தெரிந்து கொள்ள வகை செய்யும் இந்த இணைய தளத்தின் தொடக்கம், முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசு, அரசின் திட்டங்களை மக்கள் விரிவாக அறிந்து பயன்பெற, தகவல் தொழில்நுட்பத்தை முழுமையாக உபயோகப்படுத்த உறுதி பூண்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டுகிறது. •

# ஓய்வூதியம் பெறுவோர் தகவல் வழிகாட்டி இணையம்






2



நிலஅளவைப் பதிவேடுகள் துறை 150 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பாட்டில் இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் கடாஸ்டிரல் நில அளவை செய்வது இத்துறையின் பொறுப்பாகும். மாநிலத்தில் கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கான புலப்படங்களைத் தயாரித்து பராமரிப்பதும் இத்துறையின் கடமையாகும். மேலும் நிலஅளவை கட்டுமானங்களைப் பேணிக் காத்து சரிவர பராமரிப்பதும் இத்துறையின் பொறுப்பில் உள்ளது. பொது மக்கள் தங்கள் நில உடைமைகள் குறித்த புல எல்லைகளைத் தெரிந்துகொள்ளச் செய்வது, அவ்வுடைமை களை வருவாய் கணக்குகளில் பதிவுகள் செய்து கொடுப்பது, நில உடைமைகளில் மாற்றங்கள் ஏற்படும்போது அதற்கேற்ப கிராமம் மற்றும் வட்டக் கணக்குகளில் பதிவு மாறுதல்களைப் பதிந்து கொள்வது, மற்றும் புலப்பட நகல்கள் வழங்குவது



## நில அளவைப் பதிவேடுகள் அலுவலகக் கட்டடங்கள்

போன்ற பணிகளும் இத் துறையினால் செய்யப்பட்டு வருகின்றன. இத்துறை பலவகைப்பட்ட நிலப்படங்களைப் பல்வேறு அளவுகளில் தயாரித்து மாவட்ட நில அளவை அலுவலகங்கள் மற்றும் சென்னை மத்திய நிலஅளவை அலுவலகத்தில் உள்ள விற்பனைக்கூடம் மூலம் பொது மக்களுக்கு கிடைக்கச் செய்கிறது.

நிலப்பதிவுருக்கள் நிர்வாகத்தின் ஒரு முக்கியமான பகுதியாக இருப்பதால் அவைகள் நீண்ட காலமாக அவ்வப்போது பலவகைப்பட்ட நிறுவனங்களுக்குத் தேவைப் பட்டு வருகிறது. இதனால் நிலப்பதிவு ருக்கள் மேம்பாட்டை முன்னேற்றம் செய்ய வேண்டும் என அரசு உணர்ந்தது. எனவே நில அளவைப் பதிவேடுகள் துறை அதன் அலுவல கங்களுக்கும், ஆவணங்கள் பாதுகாப்பிற்கும் ஒரு தகுதியான கட்டடத்தைத் தேர்வு செய்ய வேண்டிய நிலையில் இருந்தது. மேற்கண்ட முடிவு களினால் நிலஅளவைப் பதிவேடுகள் துறை 10–வது நிதிக் குழுவின் முன் தனது கோரிக் கைகளை வைத்தது. பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மைய அரசு ஆவணங்கள் மேம்பாடு மானியம் திட்டத்தின்கீழ் பதிவுருக்கள் அறை நிர்மானித்தல், கூடுதலாக கட்டுதல் மற்றும் மேம்படுத்து தலுக்காக ரூ.630.52 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தது. மேற்கண்ட நிதியைப் பயன்படுத்தி மாவட்ட மையங்களில் 33 கட்டடங்களும், சென்னையில் மத்திய பகுதியில் ஒரு கட்டடமும் கட்ட நிலஅளவைப் பதிவேடுகள் துறை செயற்குறிப்புகள் தயாரித்தது. அச்செயற் குறிப்பினை அரசு தனது உத்தரவு எண்.518 வருவாய் (நி.அ.ll(2)துறை நாள் 29.9.99ல் அங்கீகரித்துள்ளது. மேற்கண்ட உத்தரவின் அடிப்படையில் ரூ.330 இலட்சத்தில் மாவட்ட மையங்களில் 32 கட்டடங்களும், சென்னையில் ரூ.300.52 இலட்சத்தில் ஒரு மத்திய ஆவண அலுவலகமும் கட்டப்பட்டுள்ளன.

★ ★ ★



# அரசு ஊழியர் என்றால் மக்கள் சேவகர் என்றுதான் பொருள்

□ முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா**

இன்றைய தினம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சொந்தமாக ஒரு கட்டடத்தினைப் பெறுகின்ற நல்ல நாளாகும். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு ஊழியர்களுக்காக சிறப்பான சேவையைப் புரிந்து வருகின்றது. அரசு ஊழியர்களின் உரிமைகளைப் பெற்றுத் தருவதற்காக தமிழ்நாடு அரச ஊழியர் சங்கம் எடுத்து வருகின்ற முயற்சிகளை நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இருப்பினும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் அவர்கள்எந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஒன்றை மனதில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சமுதாயத்தில் பல இலட்சக்கணக்கான மக்கள் இன்னும் அடிப்படை வசதிகளான உண்ண உணவு, உடுக்க உடை இருக்க வீடு ஆகியவை இன்றி ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவுகூட கிடைக்க வழியில்லாமல் மிகவும் பரிதாபமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். இவ்வாறு துன்பத்திலும் வறுமையிலும் வாடுகின்ற சமுாயத்தின் அடித்தளத்து மக்களை



உயர்த்துகின்ற மாபெரும் பொறுப்பும், கடமையும் அரசு ஊழியர்களுக்கு உள்ளது என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்த நேரத்தில் உங்களை எல்லாம் ஒன்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

அரசுக்குக் கிடைக்கின்ற வரி வருவாயில் பெரும் பகுதி அரசு ஊழியர்களுக்கான ஊதியம் மற்றும் ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கான ஓய்வூதியம் ஆகியவற்றுக்காக செலவு செய்யப்பட்டு மிகச்சிறிய வருவாய் மட்டுமே வளர்ச்சித் திட்டங்களுக்குச் செலவு செய்யக்கூடிய நிலையில் அரசு இருப்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அரசுக்குக்கிடைக்கின்ற மொத்த வரி வருவாயில் 70 சதவிகிதம் ஊதியத்திற்கும், 24 சதவிகிதம் பென்ஷனுக்கும் செலவிடப்படுகிறது. ஆகமொத்தம் 94 சதவிகிதம் அரசு ஊழியர்களுக்கே போய்விடுகிறது. வெறும் 6 சதவிகிதம் தான் வளர்ச்சித் திட்டங்களுக்கு மிஞ்சுகிறது. இதுமட்டுமின்றி கடந்த தி.மு.க. அரசு ஆரோக்கியமான நிதி நிலையை விட்டுச் செல்லாத காரணத்தினால் அரசு ஊழியர்களுக்கு உதவுகின்ற வகையில் நிறைய நலத்திட்டங்களைச் செயல்படுத்த இந்த அரசு விருப்பம் கொண்டிருந்தாலும் அவைகளை உடனடியாக செயல்படுத்த இயலாத நிலை உள்ளதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.






ஏற்கெனவே நல்ல நிலையிலுள்ள அரசு ஊழியர்கள், எதுவுமே இல்லாமல் வாழுகின்ற இலட்சக்கணக்கான மக்கள் இருக்கின்ற சூழ்நிலைகளை எல்லாம் கருத்தில் கொண்டு, ஏழை எளியோர், சமுதாயத்தின் அடித்தளத்து மக்கள் ஆகியோரது நலன்களை மேம்படுத்தும் வகையில், அரசு ஊழியர்கள் தாங்கள் ஏற்கெனவே நல்ல முறையில் ஆற்றிக் கொண்டிருக்கின்ற கடமையைத் தொடர்ந்து இன்னும் சிறப்பாகச் செயலாற்ற வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் உங்கள் முன் வைக்க விரும்புகின்றேன்.

அரசு ஊழியர் சங்கம் என்றாலே அரசு ஊழியர்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவதற்கான சங்கம் என்று பலரும் கருதுகிறார்கள். அது உண்மைதான் என்றாலும்கூட அரசு ஊழியர் என்றால் அதற்கு என்ன பொருள் என்பதை அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். அரசாங்கத்திற்கு ஊழியம் புரிபவர் அரசு ஊழியர் அல்ல, மக்களுக்குத்தொண்டாற்றுபவர்தான் அரசு ஊழியர். அரசு ஊழியர் என்றால் மக்கள் சேவகர்கள் என்றுதான் பொருள். அதனால்தான் உங்களை நான் அதிகார தோரணையோடு கேட்டுக்கொள்ளவில்லை. நான்

உங்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். சிந்தித்துப் பாருங்கள்.

அரசு ஊழியர்கள் கொடுத்து வைத்தவர்கள். உங்களுக்குப் பணிப்பாதுகாப்பு உள்ளது. உங்களுக்கு உடல்நலம் குன்றினால் அதற்கான மருத்துவச் சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் தரப்படுகின்றன. நீங்கள் பணிக்காலம் முடிந்து ஓய்வு பெற்றால் உங்களுக்குப் பென்ஷன் தரப்படுகிறது. இன்னும் எத்தனையோ சலுகைகள் உங்களுக்குத் தரப்படுகின்றது. ஆனால் நம் சமுதாயத்தில் வாழ்கின்ற அடித்தளத்து மக்களுக்கு அத்தகைய எந்தவிதமான ஒரு பாதுகாப்பும் இல்லை. தினசரி வேலை கிடைக்கும் என்ற உத்தரவாதமும் இல்லை. அப்படி வேலைகிடைத்தால்கூட அவர்களுக்கு மிஞ்சுவது ஒன்றும் இல்லை. ஒரு நாளைக்கு உணவு கிடைத்தாலே அது பெரிய விஷயம் என்று கருதுகின்ற அளவில் தான் பலரும் வாழ்க்கிறார்கள். அதனால் அரசு ஊழியர்கள் உண்மையில் சொல்லவேண்டுமானால் கொடுத்து வைத்தவர்கள் என்றே சொல்லவேண்டும். ஆகவே, உங்களைப் போன்ற எந்தச் சலுகையும் பெறாத ஏழை எளிய அடித்தளத்து மக்களைச் சிந்தித்துப் பாருங்கள். அந்த மக்களை மேம்படுத்துவதற்கு அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நீங்கள் பாடுபடுங்கள். அதை நீங்கள் சிரத்தையோடு செய்தால் உங்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகளை இந்த அரசே முன்வந்து வழங்கும் என்ற உத்தரவாதத்தை இந்தநேரத்தில் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்கெல்லாம் தெரியும். இந்த ஆட்சி இப்பொழுது தான் புதிதாக அமைந்துள்ளது. அரசு ஊழியர்களுக்காக எவ்வளவோ செய்ய வேண்டுமென்ற ஆசை இருக்கிறது. உங்கள் கோரிக்கைகளை எல்லாம் உடனடியாக ஏற்றுக்கொண்டு நிறைவேற்ற வேண்டுமென்ற விருப்பம் எங்களுக்கு இருக்கிறது. ஆனால் கஜானா காலியாக இருக்கிறது. ஆகவே இன்னும் சிறிது காலம் நீங்கள் பொறுத்திருந்தால்உங்கள் கோரிக்கைகளை ஒவ்வொன்றாக நிறைவேற்ற இந்த அரசு உத்தரவாதம் அளிக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.



மிகவும் சீரிய முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற இவ்விழாவில் கலந்து கொண்டு உங்கள் அனைவரையும் சந்தித்துப் பேசுகின்ற வாய்ப்பை வழங்கியதற்காக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தசங்கத்தின் பணி மென்மேலும் சிறக்க எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டு, அண்ணா நாமம் வாழ்க, புரட்சித்தலைவர் நாமம் வாழ்க எனக் கூறி விடை பெறுகிறேன்.

*சென்னையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கக் கட்டிடத்தைத் திறந்து வைத்து 24.7. 2001 அன்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை.*

**Hotel GEETHA International**

Phone : 346174, 345974, 346974
Fax : +91+461+346014
E-mail : hotelgeetha@hotmail.com

*1/9, Polpettai, Thoothukudi - 628 002. Thoothukudi Dist.*

- *Very close to New Bus Stand & Railway Station*
- *Centralised Cable TV Network with about 40 channels*
- *Phones in Rooms with STD & ISD facility*
- *Lift*
- *Bar A/c*
- *A/c. Vegetarian Restaurant & Non-Veg Restaurant at Roof Garden*
- *Conference Hall*

*Customer satisfaction is our Motto*

## அதிக அறிவு இருந்தால் நீண்ட நாள் வாழலாம்

அதிக அறிவு கூர்மை இருந்தால் நீண்ட நாள் வாழலாம் என்று பிரிட்டிஷ் மருத்துவ அறிக்கை ஒன்று கூறுகிறது. 1932–ம் ஆண்டு 11 வயது நிரம்பிய சிறுவர்கள் தங்களது அறிவு கூர்மை குறித்த சோதனையில் (ஐ.கியூ) பங்கேற்றுக் கொண்ட 2,200 பேர் பற்றிய சமீபத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பள்ளியில் அறிவு கூர்மை தேர்வுகளை சந்தித்த மாணவ–மாணவிகளில் அதிக மதிப்பெண்களை பெற்றவர்கள் 76 வயதிலும் ஆரோக்கியமாக இருந்தனர். இந்த அறிவு கூர்மை தேர்வில் 115 மதிப்பெண் பெற்ற ஒரு பெண் 85 மதிப்பெண் பெற்ற பெண்ணைவிட இருமடங்கு வருடங்கள் கூடுதலாக வாழ்ந்தது தெரிய வந்தது. ஆடவர்களின் மதிப்பெண்கள் கூடுதலாக பெற்றவர்கள் 32 சதவீதம் மற்றவர்களைவிட அதிகம் வாழ்கிறார்கள். இளம் வயதில் நாம் வாழும் முறைகளின் தாக்கம் முதுமையில் நமது ஆரோக்கியத்தை பிரதிபலிக்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். பிறக்கும் போது எடை குறைவாக பிறப்பவர்களுக்கு இரத்த அழுத்தம், சிறுநீரக கோளாறு மற்றும் இருதய கோளாறு ஆகியவை வளர்ந்தபின் ஏற்படும் என்று தெரிய வந்துள்ளது. இளம் வயது புத்திக்கூர்மை மரபணு மற்றும் வாழ்க்கைமுறை பழக்க வழக்கம் உள்ளிட்ட பல அம்சங்களை தெரிவிக்கிறது. 11 வயது குழந்தைக்கு அறிவு அதிகம் இருப்பது அந்த குழந்தை பிறப்பதற்குமுன் ஏற்பட்ட வளர்ச்சி, குழந்தை பிராயத்தில் வழங்கப்பட்ட சத்துணவு போன்றவை காரணமாக இருக்கலாம். இளம் வயதில் அறிவு கூர்மையாக உள்ள குழந்தைகள் உடற்பயிற்சி, ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கங்கள் கடைப்பிடித்தல், புகைப்பதை தவிர்த்தல், குடிப்பழக்கத்திற்கு அடிமையாகாதிருத்தல் போன்ற பிற சுகாதாரம் பாதிக்கப்படாமல் இருப்பது தெரிய வந்துள்ளது.

நன்றி: சைனிக் சமாச்சார்

• • •

# மகளிர் சுயவேலை வாய்ப்புத் திட்டம்

தமிழ்நாடு சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் 25.5.2001 அன்று ஆற்றிய உரையில், 5 இலட்சம் பெண்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி அளித்து சுயவேலைவாய்ப்பினை உருவாக்கும் பெரும் திட்டம் ஒன்று செயல் படுத்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது. அதன்படி, இத்திட்டத்தினை வரையறை செய்து செயல் பாட்டினை கண்காணிக்கும் பொறுப்பாளராக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த இலட்சியத்தினை 2001–2006–ஆம் ஆண்டுகளில் அடைந்திட ஏதுவாக, நல்ல தரமான, ஒரேமாதிரியான செயல்பாட்டினை உறுதிசெய்திட ஒருமுனைப்புடன் செயல்படுவது அவசியம். பல்வேறு துறைகளிடமுள்ள நிதியாதாரங்களை ஒன்றிணைத்து, ஒருங்கிணைந்த தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சியினை செயல் படுத்திட ஏதுவாக துறைத்தலைவர்கள், வங்கியாளர்கள் பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழில் முனைவோர் பயிற்சியளிக்கும் பிற நிறுவனங்களின் கருத்துப்பட்டரை ஒன்று 20.7.2001 அன்று தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் நடத்தப்பட்டது.

இந்த கருத்துப்பட்டரையில், ஒரு பொதுவான செயல் திட்டமும், பயிற்சிக்கான பாடத்திட்டமும் எட்டப்பட்டது. அதன் அடிப்படையில், தெளிவான நெறிமுறைகளும் செயல்திட்டமும் வகுத்திட ஏதுவாக வல்லுநர்கள் கொண்ட ஒரு அடிப்படைக் குழு அமைக்கப்பட்டது.

அக்குழு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் மற்றும் செயல் இயக்குநர் ஆகியோரது முன்னிலையில் 26.7.2001 அன்று கூடி, இவ்வாண்டு அக்டோபர் 2–ஆம் தேதி தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சியினை தொடங்கிட, விரிவான செயல்திட்டம் ஒன்றினை உருவாக்கி அரசின் ஒப்புதலுக்கு அனுப்பிட பரிந்துரை செய்துள்ளது.

★ ★ ★

# கதிரியக்கத்தினால் உயிர் நீத்த முதல் நபர்

மேடம் க்யூரி கதிரியக்கத்தை வெளிப்படுத்தும் ரேடியம் என்ற மூலப் பொருளைக் கண்டுபிடித்தார்.

இந்த மூலப் பொருளிலிருந்து வெளிப்படும் கதிர்கள் லுகேமியா போன்ற கொடிய நோய்களை உருவாக்கி மனித உயிரைப் பறிக்கும் சக்தியைக் கொண்டுள்ளன.

இந்தக் காலத்தில் ரேடியத்தை பயன்படுத்தி வருபவர்கள் நிறைய தற்காப்பு வழிமுறைகளைக் கடைப்பிடித்து தங்களுடைய உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளுகிறார்கள்.

மேடம் க்யூரி காலத்தில் இப்படிப்பட்ட தற்காப்பு வழிமுறைகள் பின்பற்றப்படவில்லை. மேடம் க்யூரி 35 வருட காலம் ரேடியத்தைப் பற்றி நிறைய ஆராய்ச்சிகள் செய்து வந்தார். ரேடியம் வெளிப்படுத்தும் கதிரியக்கத்தினால் தொடர்ந்து தாக்கப்பட்டு வந்தார். ஒரு சாதாரண காய்ச்சலினால் தாக்கப்பட்ட அவர் உடனடியாக இறந்து போனார். கதிரியக்கத்தினால் தாக்கப்பட்டு இறந்துபோன முதல் நபர், இரண்டு முறைகள் நோபல் பதக்கம் பெற்ற மேடம் க்யூரிதான் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

–பிரமிப்பூட்டும் அரிய தகவல்கள் நூலிலிருந்து



# கால்பந்து வீராங்கனைக்கு அரசு பணி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, தலைமைச் செயலகத்தில் நாள்தோறும் திரளான மக்கள் சந்தித்து தங்கள் கோரிக்கை மனுக்களை நேரில் வழங்கி வருகின்றனர். முதலமைச்சர் அவர்களது அறிவுரைக்கு இணங்க இக்கோரிக்கை மனுக்கள் அனைத்தும் முதலமைச்சரின் தனிப் பிரிவின் மூலம் தக்க ஆய்வு செய்யப்பட்டு உரிய நடவடிக்கைகள் உடனுக்குடன் எடுக்கப்பட்டு, உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**கால்பந்து விளையாட்டுப் பயிற்றுநர் பணி**

இவ்வகையில் சென்னை வடபழனியைச் சேர்ந்த நோயலின் ஜான் என்பவர், தான் ஆறுமுறை தமிழகத்தின் சார்பாக தென் மண்டல மற்றும் தேசிய அளவிலான கால்பந்துப் போட்டிகளில் பங்கேற்றுள்ளதாகவும், விளையாட்டுப் பயிற்றுநராக NIS பயிற்சி பெற்றுள்ளதாகவும் தெரிவித்து, தனக்குக் கால்பந்து விளையாட்டுப் பயிற்றுநர் பணி அளிக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களிடம் மனு கொடுத்தார்.

**முதல்வர் ஆணை**

தமிழகத்தில் விளையாட்டில் தனிக் கவனம் செலுத்தி, உலகமே பாராட்டும் வகையில் தெற்காசிய கூட்டமைப்பு நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளைச் சென்னை மாநகரில் நடத்தியும், உலகத் தரத்துடன் பல்வேறு விளையாட்டு அரங்குகளை நிறுவியும் சென்னைக்குப் பெருமை சேர்த்த முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மகளிரை அதிக அளவில் விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுத்திட விழைந்தும், விளையாட்டுகளில் பங்கேற்பதன் மூலம் பெண்களும், வேலைவாய்ப்புப் பெற முடியும் என்பதை உணர்த்தும் நோக்கிலும், ஒரு முன்னோடி முயற்சியாக நோயலின் ஜான் அவர்களது கல்வித் தகுதி மற்றும் விளையாட்டுத் தகுதி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, அவருக்குத் தமிழகத்தின் முதல் பெண் கால்பந்து பயிற்றுநராகத் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பணி நியமனம் அளிக்க ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நோயலின் ஜான் அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில், காஞ்சிபுரம் மாவட்டத்திற்கான கால்பந்து பயிற்றுநராக ரூ.5,300–150–8,300 என்னும் ஊதிய விகிதத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளார்.

**பணி நியமன உத்தரவு**

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 10.7.2001 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழகத்தின் முதல் பெண் கால்பந்து பயிற்றுநருக்கான பணி நியமன ஆணையை திருமதி. நோயலின் ஜான் அவர்களிடம் வழங்கினார்கள். ஆணையைப் பெற்றுக் கொண்ட திருமதி நோயலின் ஜான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தனது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.



## பார்வையற்றோர் இசைக்குழுவிற்கு நிதியுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பார்வையற்றவர்களால் நடத்தப்பட்டு வரும் "சோனா சங்கீத்" என்ற இசைக்குழுவிற்கு இசைக்கருவிகள் வாங்க முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.75 ஆயிரமும், ஊனமுற்றோர் நல நிதியிலிருந்து ரூ.25 ஆயிரமும், ஆக மொத்தம் ரூபாய் ஒரு இலட்சத்தினை 19.7.2001 அன்று தலைமைச் செயலகத்தில் இசைக் குழுவினரிடம் நேரில் வழங்கினார்.

"சோனா சங்கீத்" என்ற இசைக்குழு 20 பார்வையற்ற நபர்களைக் கொண்டு இசை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. இதில் வரும் வருமானத்தை மட்டுமே நம்பி இந்த இசைக்குழுவினர் இருப்பதால் அவர்களது வாழ்க்கை நிலை குறித்து முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அவர்களது சிரமத்தைக் கருத்திற்கொண்டு, அக்குழுவிற்குச் சொந்தமாக இசைக்கருவிகள் வாங்க முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.75 ஆயிரமும், ஊனமுற்றோர் நல நிதியிலிருந்து ரூ.25 ஆயிரமும் தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

கண் பார்வையற்று வாழ்க்கைக்குப் போராடிக் கொண்டிருந்த இந்த 20 நபர்களுக்கு மறுவாழ்வு அளித்திடும் வகையில் இசைக்கருவிகள் வாங்க நிதியுதவி அளித்த முதலமைச்சர் அவர்களை இக்குழுவினர் நெஞ்சார வாழ்த்தி நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.


# S.U.S. பேங்கேர்ஸ்

☐ மணவாளக்குறிச்சி ☐ தக்கலை ☐ திங்கள் சந்தை ☐ சுவாமியார்மடம் ☐ குளச்சல், நாகர்கோவில் ☐ கருங்கல் மீனாட்சிபுரம் ☐ குலசேகரம் ☐ மண்டைக்காடு ☐ மார்த்தாண்டம்

**S.U.S. Rm. K.S.A. திருமண அரங்கம்**

தக்கலை ☎ 650378

**S.U.S. திருமால் திருமண அரங்கம்**

மண்டைக்காடு ☎ 523107

**S.U.S. FIBRE INDUSTRIES**

Thiruvithancode ☎ 650138

**S.U.S. பொன்னம்மாள் ஜுவல்லரி**

மண்டைக்காடு ☎ 523107, 521209 *உரிமை :* A. திருமால்

S.U.S. பேங்கேர்ஸ் அறிவிப்பு

அன்புடையீர்!

எங்களது எஸ்.யு.எஸ். பேங்கேர்ஸ் அனைத்து கிளைகளிலும் தங்க நகைகளின் பேரில் குறைந்த வட்டியில் 10 நிமிடங்களில் கடன் வழங்குகிறோம். மண்டைக்காடு எஸ்.யு.எஸ். பொன்னம்மாள் ஜுவல்லர்ஸ் தரமான தங்க நகைகள் செய்கூலி, சேதாரம், கல்விலை இல்லாமல் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகிறது.



இவண்

A. திருமால், S. சரோஜா திருமால், B.A.L.L.B.

உரிமையாளர் : S.U.S. நிறுவனங்கள்

போன் 521200, 523107 Cell: 9843111232

மண்டைக்காடு

# பெருந்தலைவர்
# காமராசர்

**1903** – விருதுபட்டி என்னும் விருதுநகரில் குமாரசாமி நாடார் சிவகாமி அம்மாள் தம்பதிக்கு **1903** ஜூலை **15** அன்று மகனாகப் பிறந்தார். **1907**–இல் தங்கை நாகம்மாள் பிறப்பு.

**1908** – காமராசர் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் சேர்க்கப் பெற்றார். ஏனாதி நாயனார் வித்யாசாலாவிலும், சத்திரிய வித்தியாசாலாவிலும் சேர்ந்து படித்தார்.

**1909** – தந்தை மறைவு. தாய்மாமன் கருப்பையா நாடார் காமராசர் குடும்பத்திற்கு உதவியாக இருந்தார்.

**1914** – ஆறாவது வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது, பள்ளி செல்வதை நிறுத்திக் கொண்டார்.



**1919** – ஏப்ரல் – ரௌலட் சட்டத்தை எதிர்த்துக் காந்தியடிகள் விடுத்த அழைப்பை ஏற்று, காங்கிரசின் முழு நேர ஊழியரானார்.

**1920** – ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டார்.

**1921** – தமிழ்நாடு காங்கிரஸ் செயலராக இருந்த பெரியாரை முதன் முதலாக விருதுநகரில் சந்தித்து, அவரது உறுதி மிக்க பேச்சுத் திறனைப் போற்றினார்.

**1923** – நாகபுரி கொடிப் போராட்டத்தில் பங்கு கொண்டார். மதுரையில் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார்.

**1925** – கடலூரிலிருந்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1926** – சத்தியமூர்த்தி – சீனிவாச அய்யங்கார் ஆகியோருடன் தேர்தல் பணிபுரிந்தார்.

**1927** – சென்னையில் கர்னல் நீல் சிலையை அகற்றும் போராட்டத்தை நடத்த அண்ணல் காந்தியிடம் அனுமதி பெற்றார். போராட்டம் நடைபெறுவதற்குள் அரசாங்கமே நீல் சிலையை அகற்றிவிட்டது.

மதுரைக்கு வருகை புரிந்த சைமன் குழுவை எதிர்த்தார்.

**1930** – வேதாரண்யத்தில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டதால், இரண்டாண்டு அலிபூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

**1931** – காந்தி – இர்வின் ஒப்பந்தம் காரணமாகக் காமராசர் விடுதலை செய்யப்பட்டார். இராமநாதபுரத்திலிருந்து சென்னை மாகாணக் காங்கிரஸ் செயற்குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1933** – சதி வழக்கில் காமராசர் சிறைக்கனுப்பப்பட்டு, குற்றம் நிரூபிக்கப்படாததால் விடுதலை செய்யப்பட்டார்.

**1934** – காமராசர் உழைப்பால் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் பெருவாரியான வாக்குகள் பெற்று வென்றது.

**1936** – காரைக்குடியில் நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டித் தேர்தலில் சத்தியமூர்த்தி தலைவராகவும், காமராசர் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**1937** – சட்டமன்றப் பொதுத் தேர்தலில் விருதுநகர் தொகுதியில் வென்றார். விருதுநகர் நகராட்சி மன்றத் தேர்தலில் 7–வது வார்டில் போட்டியிட்டு வென்றார்.

**1940** – தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தலில் வென்றார்.

**1941** – யுத்தநிதிக்கு எதிர்ப்புப் பிரச்சாரம் செய்ததால், கைது செய்யப்பட்டு, வேலூர் சிறையில் அடைக்கப் பட்டார்.

சிறையில் இருக்கும்போதே 1941–மே 31இல் விருதுநகர் நகராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

**1942** – மார்ச் – சிறையிலிருந்து விடுதலையானதும், ஒருநாள் மட்டும் நகராட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிறகு, தீவிர கட்சிப் பணிக்காக நகராட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார்.

ஆகஸ்டு போராட்டத்தில் கைது செய்யப்பட்டு, அமராவதி சிறைச்சாலையில் இரண்டு ஆண்டுகள் கழித்த பிறகு, வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டார். 1945–இல் விடுதலை ஆனார்.

**1946** – மே 16 – தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்றார். அதே ஆண்டு சென்னை சட்டமன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1947** – ஆகஸ்டு 15 – இந்தியா விடுதலை பெற்றது. பண்டித நேருவின் தலைமையில் இடைக்கால அரசு உருவானது. அண்ணல் காந்தியடிகளைப் போற்றி அறிக்கை வெளியிட்டார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் ஆனார்.

**1948** – மூன்றாவது முறையாகத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரானார்.

**1949** – இலங்கையில் சுற்றுப் பயணம்.

**1950** – நான்காவது முறையாக தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஆனார். 1952 – தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக டாக்டர் சுப்பராயன் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வழிவகுத்தார்.

**1952** – நாடாளுமன்ற உறுப்பினர் – சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் பெரும்பான்மை பெறமுடியவில்லை. இராஜாஜி முதலமைச்சர் ஆவதற்குக் காமராசர் ஒத்துழைப்பு நல்கினார். 1952 டிசம்பரில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1953** – இலங்கையில் சுற்றுப் பயணம் செய்தார்.

**1954** – பிப்ரவரியில் மலாய் நாட்டில் சுற்றுப்பயணம்.

**1954** – ஏப்ரல்–13 – சென்னை மாநிலத்தின் முதலமைச்சர் ஆனார். குடியாத்தம் தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிட்டு வென்றார்.

**1955** – ஆவடி காங்கிரஸ் மாநாடு வெற்றிகரமாக நடைபெற காமராசர் அரும்பணி ஆற்றினார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் புயலாலும் பேய் மழையாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்த்து, நிவாரண உதவிகளைச் செய்தார்.

**1956** – மொழிவழி மாநிலம் என்ற திட்டத்தின்படி புதிய தமிழகம் உருவாவதற்கு ஆதரவு தெரிவித்தார். பள்ளிகளில் இலவச மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

**1957** – பொதுத் தேர்தலில் போட்டியிட்டு, வென்று, இரண்டாவது முறையாக முதலமைச்சர் ஆனார்.

**1960** – ஏழைப் பிள்ளைகள் அனைவருக்கும் 11–ஆம் வகுப்பு வரை இலவசக் கல்வி அளித்தார்.

**1961** – அக்டோபர் 9 – சென்னை மாநகராட்சி உருவாக்கிய காமராசர் திருஉருவச் சிலையைப் பிரதமர் நேரு திறந்துவைத்தார்.

**1962** – பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று, மூன்றாவது முறையாக முதலமைச்சர் ஆனார்.

**1963** – எல்லாருக்கும் இலவசக் கல்வித் திட்டத்தை அமல்படுத்தினார். அக்டோபர் 2 – காமராசர் திட்டத்தின்படி முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்.

**1964** – அகில இந்திய தேசிய காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மே 27–இல் நேரு அவர்கள் மறைந்த பிறகு, லால் பகதூர் சாஸ்திரி பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட காமராசர் ஆவன செய்தார்.

**1965** – இந்தியா – பாகிஸ்தான் போர் ஏற்பட்டபோது பஞ்சாப் போர்முனைப் பகுதிகளுக்குக் காமராசர் சென்று வீரர்களை உற்சாகப்படுத்தினார்.

**1966** – தாஷ்கண்ட் சென்று லால் பகதூர் மறைவு எய்தியதால், இந்திராகாந்தி பிரதமராவதற்குக் காமராசர் ஆவன செய்தார். சோவியத் நாட்டிற்கும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் காமராசர் சென்று வந்தார்.

**1969** – நாகர்கோயில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு

காமராசர் அவர்களின் தாயார் மறைவு.

**1971** – நாடாளுமன்ற உறுப்பினராக காமராசர் தேர்வு

**1972** – தாமிரபத்திர விருது பெற்றார்.

**மறைவு**

**1975** – எளிய குடும்பத்தில் பிறந்து, விடுதலைப் போராட்டத் தொண்டனாக வாழ்வைத் துவக்கி, தன்னலமற்ற உழைப்பால், தியாகத்தால், மக்கள் தலைவராக உயர்ந்து, கோடிக்கணக்கான இதயங்களில் குடிகொண்டிருக்கும் பெருந்தலைவர் காமராசர் 1975 அக்டோபர் 2 அன்று அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாளில் நம்மை விட்டு உடலால் பிரிந்தார். நினைவாக நம் நெஞ்சில் நிறைந்திருக்கிறார்.

• • •

# கல்வி உதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 30.7.2001 அன்று தலைமைச் செயலகத்தில் பொறியியல் பட்டப்படிப்பு மற்றும் பி.பி.ஏ. பட்டப் படிப்புக்கு சேர இடம் கிடைத்தும் ஆரம்ப நிலைக் கட்டணம்கூட கட்ட இயலாத ஏழ்மை நிலையிலுள்ள ஐந்து மாணவர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.1.25 இலட்சம் உதவித் தொகையினை வழங்கினார்கள்.

பொன்னேரி திரு.எஸ்.கிரிதரன், அரவக்குறிச்சி திரு. முத்துகுமார், மதுரையைச் சேர்ந்த திரு. எம்.இராஜா, திரு. பி.பழனிமுருகன் ஆகியோருக்கு, தமிழகத்திலுள்ள பொறியியல் கல்லூரிகளில் பி.இ. பயில, திருக்கோயிலூர் திரு.வெங்கடேஷ் அவர்களுக்கு திருக்கோயிலூர் கலை அறிவியல் கல்லூரியில் மேலாண்மை நிர்வாகப் பட்டப்படிப்பு பயில இடம் கிடைத்தும், போதிய நிதிவசதி இல்லாத காரணத்தால் ஆரம்ப நிலைக் கட்டணத்தைக் கூட கட்ட முடியாமல் தவிக்கின்ற நிலை அறிந்து, இவர்கள் 5 பேர்களும் தாங்கள் சேர அனுமதி பெற்ற கல்லூரிகளில் சேர்ந்து இந்த உயர்கல்வி பயில "முதலமைச்சர் பொது நிவாரண நிதி"யிலிருந்து நிதியுதவி செய்ய தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள். இதனைத் தொடர்ந்து இம்மாணவர்கள் 5 பேர்களுக்கும் தலா ரூ.25 ஆயிரம் நிதியுதவியினை அளிக்க முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள்.

இதன்படி மாணவர்கள் எஸ்.கிரிதரன், பி.முத்துக்குமார், எம். இராஜா, பி.பழனிமுருகன் மற்றும் வெங்கடேஷ் ஆகியோருக்கு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.25 ஆயிரத்திற்கான தொகையினை 30.7.2001 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

நிதியுதவியைப் பெற்றுக் கொண்ட இந்த மாணவர்கள் தங்களது குடும்ப சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு தகுந்த நேரத்தில் நிதியுதவி அளித்த முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தங்களது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

★ ★ ★

# நிலநடுக்கம் குறித்த விளக்கங்கள்

நிலநடுக்கம் என்ற பெயர் பூமியில் ஏற்படும் அதிர்ச்சி மற்றும் தொடர் அதிர்வுகளால் ஏற்படும் நடுக்கம் எரிமலை குமுறுதல் அல்லது பூமியின் மேல் தட்டில் ஏற்படும் நகர்வு காரணமாக ஏற்பட்டது. இதன் காரணமாக கட்டடங்கள் இடிந்து விழுகின்றன.

**நிலநடுக்கத்தின் போது என்ன செய்ய வேண்டும் ?**

லிப்ட்களில் நாம் சென்றால் உடனடியாக அதிலிருந்து வெளியேற வேண்டும். படிக்கட்டுகள் மற்றும் பால்கனிகளைப் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். குறுகிய சந்து, பழைய கட்டடங்களுக்கு அருகாமையில் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

**அவசர தேவைகளுக்காக பையில் என்ன இருக்க வேண்டும் ?**



(1) ஒரு நபருக்கு 3 லிட்டர் என்ற அளவில் தண்ணீர் (2) டார்ச்லைட், மெழுகுவர்த்தி, பேட்டரி, பிஸ்கட்டுகள், அடிப்படை மருந்துகள், போர்வை, கத்தி மற்றும் கொஞ்சம் ரொக்கம் (3) உடைகள் (4) முதலுதவிப் பொருட்கள்.

**நிலநடுக்கத்திற்குப்பின் தன்னார்வலர் என்ன செய்யலாம் ?**

சுத்தியல், ரம்பம், மண்வெட்டி போன்றவற்றை எற்பாடு செய்யலாம். மற்ற சேவகர்களை உடனடியாகத் தொடர்பு கொள்ள வேண்டும்.

நன்றி : சைனிக் சமாச்சார்

• • •


**JAI JAGADHAMBIGA TEXTILE MILLS LIMITED**

*Manufacturers of :*

**10s, 16s, O.E. Cotton Yarn**

Registered Office : 51, Pillaimar Street,
Aruppukottai Taluk,
Virudhunagar District.

Factory at : 137, Sankaralingapuram,
Vilathikulam Taluk,
Thoothukudi District.

# போக்குவரத்துத்துறை சீரமைப்பு

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 28.6.2001 அன்று போக்குவரத்துத்துறையை ஆய்வு செய்து, நலிந்துள்ள போக்குவரத்துக் கழகங்களை முன்பிருந்த சிறப்பான நிலைக்கு மீட்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு, நிர்வாகத்தைச் சீரமைக்கும்படி உத்தரவிட்டார்கள். அதற்கேற்ப போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை பயணிகளுக்கு சிறப்பான சேவையளிக்கும் வகையில் பராமரிப்புத் திறனை உயர்த்தும் பொருட்டு ஒவ்வொரு வாரமும் ஒரு குறிப்பிட்ட இலக்கை நிர்ணயித்து நடவடிக்கை எடுக்கும்படி அனைத்து மேலாண்மை இயக்குநர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு நயினார் நாகேந்திரன் அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

இந்த வகையில், அடுத்து வரும் வாரங்களில் கீழ்க்கண்ட பராமரிப்பு மற்றும் செயல்திறனுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒவ்வொரு போக்குவரத்துக் கழகமும் நடவடிக்கை எடுக்க உள்ளது. அன்றாட பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வதுடன், கீழ்க்கண்ட திட்டங்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுத்தப்படும். அதன்படி அனுசரிக்கப்பட இருக்கும் வாரங்களின் நோக்கமும், எடுக்கப்பட இருக்கும் நடவடிக்கைகளும் வருமாறு:–



### அதிரடி பயணச்சீட்டு சோதனை

பயணிகளை முறையாக பயணச்சீட்டு வாங்க அறிவுறுத்துவதே இதன் நோக்கமாகும். முதல் நடவடிக்கையாக 'அதிரடி பயணச்சீட்டு சோதனை' 25.7.2001 அன்று நடத்தப்பட்டது. அன்றைய தினம்

4,647 அலுவலர்கள் 80,313 சோதனைகள் நடத்தி 3,746 பயணிகள் பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்தது கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களிடமிருந்து ரூ.1,11,564 அபராதமாக வசூலிக்கப்பட்டது. மாணவர்கள் இலவச பஸ் பாஸ் தவறாக உபயோகிக்கப்பட்ட நிகழ்வுகள் 59–ம், பயணிகள் பஸ் பாஸ் தவறாக உபயோகிக்கப்பட்ட நிகழ்வுகள் 19–ம், நடத்துநர் பணம் பெற்று பயணச்சீட்டு வழங்காத நிகழ்வுகள் 12–ம் கண்டுபிடிக்கப்பட்டன.

பராமரிப்பு வாரம்

(1) 30.7.2001 முதல் 5.8.2001 வரை

பேருந்துகளின் தோற்றத்தைச் சீர்படுத்துதல், பேருந்தில் பழுதடைந்துள்ள கிரில்கள், தகடுகளைச் சரிசெய்தல், தேவைப்படும் இடங்களில் பெயிண்ட் அடித்தல், கண்ணாடிகளைச் சரிசெய்து பொருத்துதல், மின் விளக்குகள், மின் இணைப்புகளைச் சரி செய்தல், பேருந்துகளில் உள்ள பிளாட்பாரம் மற்றும் ஃபுட்போர்டுகளைச் சரிசெய்தல், பேருந்துகளின் உள்ளேயும் வெளியேயும் சுத்தம் செய்தல் போன்ற பணிகள் இந்த வாரத்தில் மேற்கொள்ளப்படும்.

பராமரிப்பு வாரம் 2–வது கட்டமாக 6.8.2001 முதல் 12.8.2001 வரை தொடர்ந்து நடைபெறும். அதுசமயம் பராமரிப்பு, எண்ணெய் கசிவுகள், டயர்களின் தேய்மானத்தைப் பரிசோதித்து மாற்றிப் பொருத்துதல், டீசல் மற்றும் எஞ்சின் ஆயில் உபயோகிப்பதில் சிக்கனத்தைக் கடைபிடித்தல், தேவைப்படும் இடங்களில் கிரீஸ் போடுதல், பிரேக் மற்றும் ஓட்டுநர்கள் லாக் சீட்டுகளில் குறிப்பிட்டுள்ள குறைகளை நிவர்த்தி செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

மூன்றாவது கட்டமாக, பேருந்துகள் வழிகளில் பழுதடையாமல் பயணிகளின் நம்பிக்கையினைப் பெறும்வகையில், 13.8.2001 முதல் 19.8.2001 வரை ஒரு வார காலத்திற்கு 'பயணத்தடை தவிர்ப்பு வாரமாக'



அனுசரிக்கப்படுகிறது. அதுசமயம், எந்தப் பேருந்தும் நடுவழியில் பழுதடையாமல், பராமரிப்பை மேம்படுத்துதல், முன் தடுப்பு பராமரிப்பு அட்டவணையை தவறாமல் நடவடிக்கை எடுத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

நான்காவது கட்டமாக, பேருந்துகளை ஓட்டுநர்கள் கவனமாக ஓட்டி விபத்துக்களைத் தவிர்க்கும் வகையில், 'பாதுகாப்பு வாரம்' 20.8.2001–லிருந்து, 26.8.2001 வரை ஒரு வார காலத்திற்கு நடைபெறும். அதுசமயம், ஓட்டுநர்கள் போக்குவரத்து விதிகளைக் கடைபிடிக்க அறிவுறுத்துதல் மற்றும் பயணிகள் பேருந்துகளில் ஏறும்போதும், இறங்கும்போதும் விபத்துக்களைத் தவிர்க்கும் முறைகள் நடத்துநர்களுக்கு அறிவுறுத்தப்படும்.

ஐந்தாவது கட்டமாக, போக்குவரத்துக் கழகங்கள் பயணிகளின் நன்மதிப்பைப் பெறும் வகையில், 27.8.2001 முதல் 2.9.2001 வரை 'மரியாதை வாரம்' கடைபிடிக்கப்படும். அதுசமயம் ஓட்டுநர்கள், நடத்துநர்கள் பயணிகளிடம் மரியாதையாக நடந்துகொள்வது பற்றியும், பொது மக்களின் நற்பெயரைப் பெறுவது பற்றியும் அறிவுறுத்தப்படும். பேருந்துகளை கால அட்டவணைப்படி இயக்குதல், பயணிகள் எளிதாக ஏறுவதற்கும், இறங்குவதற்கும் ஏற்ற வகையில் சரியான இடத்தில் பேருந்துகளை நிறுத்துதல் ஆகியவை முக்கிய நோக்கங்களாக இருக்கும். ★

# ஆலோசனை அழைப்பு ஒரு சரித்திர சாதனை

- ஆசிரியர் மாறுதலுக்கு
ஆலோசனை அழைப்பு
மேதினி போற்றும்
மேலான திட்டம்.

- கீழான கையூட்டு
கெஞ்சும் பரிந்துரைகள்
நஞ்சென விளங்கி
நாசம் செய்ததால்
ஆசிரியர் மாறுதலுக்கு
ஆலோசனை அழைப்பு
அவசரமானது
அவசியமானது

- சரித்திர சாதனை
சரிந்திராக் கோபுரம்
காலியிடப் பட்டியல்
வேலியில்லாத விளைச்சல்
மாறுதல் கேட்டவர்
பெயரப் பட்டியல்
பேட்டி நாளில்
பெரிய எழுத்துக்களில்

- உள் மாவட்டம் முதல் சுற்று
உள்ளம் துள்ள உடனடி ஆணை
அள்ளிக் கொண்டனர்
ஆசைப்பட்ட இடங்களை
எம்மாவட்டத்தில் இருப்பினும்
எளிதாய்ப் போக வர இரண்டாம்சுற்று
களிப்பு நல்க காகித உரையில்
கடிதாய்த் தந்தனர் ஆணை

- அலகுவிட்டு அலகு மாறுதல்
அடுத்த சுற்று அறிவித்தாயிற்று
இலவு காத்த கிளியாய் இனியும்
இருக்கமாட்டார் எவரும்–இது
புரட்சி பூபாளம் புன்னகை மேம்பாலம்

- விதிகள் யாவும்
விபரமாய் உள்ளதால்
சதிகள் யாரும் செய்யமுடியாது
போட்டியின்றிப்
பொறாமையின்றி
கேட்ட இடத்தைப்
பெறுகிற வாய்ப்பு
பெரிய வாய்ப்பு–இது
ஒரு புரட்சி பூபாளம்
புன்னகை மேம்பாலம்

- ஓய்வு வயதை ஒட்டிநிற்போரை
ஆய்வு செய்து அவர்க்கும் உதவ
விதி திருத்தம் வேண்டும் என்பது
பலரின் கருத்து
பதிந்து கொண்டால் பரவலாய் நன்மை
பலரும் அடைவர்

- ஆசிரியர் மாறுதலுக்கு
ஆலோசனை அழைப்பு
ஒரு சரித்திர சாதனை
இது சரிந்திடாக் கோபுரம்–இது
புரட்சி பூபாளம் புன்னகை
மேம்பாலம்

• தி.ப.சண்முகம்,
முதுகலைத் தமிழாசிரியர்

# விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம் ▫ முதல்வர் ஆணை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 24.7.2001 அன்று விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சாம்பசிவ ஆச்சாரி, திருமதி. க.ஜானகி அம்மாள், திரு. சி.கிருஷ்ணசாமி, திரு. ம.வீரப்ப உடையார் ஆகிய நான்கு விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாதம் ரூ.3000 வழங்குகின்ற மாநில விடுதலைப் போராட்ட ஓய்வூதியத்திற்கான அரசாணைகளைத் தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்

விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த விழுப்புரம் நகர், திரு. ப.சாம்பசிவ ஆச்சாரி, புதுக்குப்பம் கிராமம் திருமதி. க.ஜானகி அம்மாள், ராம்பாக்கம் கிராமம் திரு. சி.கிருஷ்ணசாமி,மேட்டுப்பாளையம் கிராமம் திரு. மா.வீரப்ப உடையார் ஆகியோர் தாங்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்று சிறைத் துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்கள் எனவும், தங்களுக்கு மாநில விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்க வேண்டுமெனவும் கோரி முதலமைச்சர் அவர்களுக்கு மனு செய்திருந்தார்கள்.

முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இக் கோரிக்கைகளை மிகவும் பரிவுடன் பரிசீலனை செய்து , இவர்கள் அனைவரும் மாநில விடுதலைப் போராட்டவீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் என்னும் அடிப்படையில், ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ.3000 வீதம் இவர்களது வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம் வழங்க உத்தரவிட்டார்கள்.

இதன்படி, இவர்களுக்கு மாதம் ரூ.3000 வழங்குகிற மாநில விடுதலைப் போராட்ட ஓய்வூதியத்திற்கான அரசாணைகளை தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் விடுதலைப் போராட்ட வீரர்களிடம் நேரில் வழங்கினார்.

ஓய்வூதிய ஆணைகளைப் பெற்றுக் கொண்ட விடுதலைப் போராட்ட வீரர்கள் திரு. ப.சாம்பசிவ ஆச்சாரி, திருமதி. க.ஜானகி அம்மாள், திரு. சி.கிருஷ்ணசாமி, திரு.மா. வீரப்ப உடையார் ஆகியோர் முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்கள். ●





ஒரு தாய், தன் பாலைக் குழந்தைக்குப் புகட்டுவது சேய்க்கு மட்டுமல்ல, தாயின் உடல் நிலைக்குமே மிகவும் நல்லது. பால் கொடுக்கும் போது, குழந்தை முலையை இழுத்துச் சப்பும் உணர்வால், தாய்ப்பால் சுரப்பதோடு கருப்பையும் வெகுவாகச் சுருங்கித் தன்னிலையை எய்துகிறது. இதனால் அதீத உதிரப் போக்கு தவிர்க்கப்படுகிறது.

மேலும், பால் புகட்டும் பருவத்தில் தாய்மார்கள் பலருக்கும் மாதவிலக்குத் தோன்றுவதில்லை. சிலருக்குச் சிலமாதங்கள் கழித்தும் வேறு பலருக்கு பல மாதங்கள்

# தாய்ப்பால் கொடுப்பதால் ஏற்படும் நன்மைகள்

☐ டாக்டர் ஞானசௌந்தரி

**(ஆகஸ்டு 1-7 வரை 'உலகத் தாய்ப்பால் வாரம்' கடைப்பிடிப்பதால் இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.)**

கழித்தும் மாதவிலக்குத் தோன்றுகிறது. ஆண்டு ஒன்றைத் தாண்டினாலும், குழந்தை பால் குடிக்கும் வரை மாதவிலக்கு வேறு சிலருக்குத் தோன்றுவதில்லை. மாதவிலக்கு இன்மையால் நாளமில்லாச் சுரப்பிகளின் இயக்குநீர் மாற்றங்கள் கருவணுவகத்தில் ஏற்படுவதில்லை. எனவே, கருவணு விடுபடுவதும் இல்லை. அதனால் பால் புகட்டுகின்ற பருவம் குடும்பநலத் திட்டத்திற்குத் துணை போகிறது என்று கூறலாம். ஆயினும், முழுமையாக இதனை ஏற்றுக் கொள்வதற்கில்லை. எனவே பாலூட்டும் பருவம் கருத்தரியாப்பருவம் என்றாலும் கவனத்துடன் இருக்க வேண்டிய பருவமாகும்.

தொடர்ந்து பாலூட்டும்போது ஒரு தாயின் உடலில் அதிகமாக இருக்கும் கொழுப்பு (குறிப்பாகத் தொடை, வயிறு போன்ற இடங்களில் உள்ள அதிகப்படியான கொழுப்பு) குறைந்து, தாயின் உடலமைப்பு சீராக உதவுகிறது. இதுதவிர, பால் புகட்டிய மார்பகங்களை, புற்று நோய் பற்றுவது குறைவு என்று அறியப்பட்டுள்ளது. குழந்தைப் பேறு இல்லாதவர்களுக்கும், 35 வயதுக்கும் மேல் முதல் குழந்தையைப் பெறுகின்றவர்கட்கும் மார்பகப் புற்று சற்று அதிகமாகக் காணப்படுவதாக மருத்துவ வல்லுநர்கள் கண்டறிந்து உள்ளனர். தாம் பெற்ற செல்வங்களுக்குத் தாய்ப்பால் புகட்டினால் மேனியழகு குறைந்து விடுமெனும் எண்ணங் கொண்டு பால் கொடுக்காமலிருக்கும் மேலை நாட்டுப் பெண்களுக்குத் தாய்ப் பாலைப் புகட்டும் நம் நாட்டுப் பெண்களைவிட மார்பகப் புற்று வரும் அபாயம் அதிகமாகக் காணப்படுகிறது.

## பாலூட்டும் விதி முறைகள்

குழந்தை பிறந்த சில மணி நேரங்களிலேயே பால் புகட்டத் துவங்கி ஓராண்டுக் காலம் வரை புகட்டும் போது சில விதிமுறைகளை பின்பற்றுவது நல்லது. பால் கொடுக்க ஆரம்பிப்பதற்கு முன்னதாக முலைக் காம்புகளை நீரில் கழுவி அழுக்கைப் போக்கிச் சுத்தமாக்கிய பின்னரே குழந்தையை சப்பவிட வேண்டும்.

தாய் எப்போதும் உட்கார்ந்த நிலையில் பால் கொடுப்பதுதான் சிறந்தது. அப்போது குழந்தையின் தலை சற்று நிமிர்ந்து இருக்கும்படி கொடுக்க வேண்டும். நிமிர்ந்த தலையோடு மூக்கு அழுத்தப்படாது மேல் நோக்கி இருக்கக் குழந்தை தன் வாயால் முலைக்காம்பையும் அதனைச் சுற்றியுள்ள முகட்டையும் சேர்த்துச் சப்புமாறு செய்ய வேண்டும். இல்லையெனில் பால் புரையேறி, குழந்தை மூச்சுத் திணறி இறந்துவிடும் அபாய நிலைக்குக் கூடச் சென்று விடலாம். கடினப்பேறு, அறுவைப்பேறு, அதிக இரத்தப் போக்கு ஆகியவற்றால் தாயின் உடல் நலிவுற்றிருந்தால் எழுந்து உட்காருவதற்குக் கஷ்டப்படலாம். அவர்கள் படுத்துக் கொண்டு பால்



பால் புகட்டும் சரியான முறை

கொடுக்கவே விரும்புவார்கள். எக்காரணங் கொண்டும் படுத்துக்கொண்டு பால் புகட்டும் பழக்கம் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஆனால் தாயின் உடல் நலப் பாதிப்பாலோ ஒத்துழையாமையாலோ பேற்றின் முதல் இரு நாட்களுக்கேனும் படுத்துக் கொண்டேதான் பால் கொடுக்க இயலும் எனும் சூழ்நிலை உருவானால், குழந்தையைப் பக்குவமாகச் சாய்த்துப் பிடித்துக் கொள்ள வேண்டும். குழந்தையின் தலை சற்று மேலே தூக்கி இருக்குமாறும், மூக்கு வெளியே சுவாசிக்கும்படி இருக்குமாறும் குழந்தையை அணைத்துப் பால் கொடுக்க வேண்டும்.

முலைக்காம்பு உள்நோக்கி இழுக்கப்பட்டு, குழந்தை வாய் வைத்துச் சப்பி உறிஞ்சும் வகையில் இல்லையென்றால் முலைக்காம்பை விரல் கொண்டு வெளிக் கொணர்ந்து நீவி விடும் பயிற்சியைச் செய்ய வேண்டும்.

குழந்தைகட்குப் பால் கொடுக்கும் நேரத்தில் எவ்வித அவசரமும் கூடாது. பத்து நிமிடத்தில் குடிக்கிற குழந்தைகளும் உண்டு. இருபது நிமிட நேரம்வரை குடிக்கும் குழந்தைகளும் உண்டு. நிதானத்துடன் குழந்தை திருப்தியாகக் குடித்து முடிக்கும்வரை காத்திருக்க வேண்டும். இரு மார்பகங்களிலும் கொடுக்க வேண்டும். மேலும், சில குழந்தைகள் ஓரிரு முறை சப்பிவிட்டு அப்படியே தூங்கிவிடும். அப்படி தூங்கவிடாது குழந்தையின் காலைச் சுண்டிவிட்டு அதனைக் குடிக்கச் செய்து வயிறு நிரம்பும்படி செய்ய வேண்டும். சில பெண்களுக்குப் பால் மிக அதிகமாகச் சுரக்கும். இவ்வதிகச் சுரப்பு ஆவலுடன் குடிக்கும் குழந்தைகளைத் திணற அடித்துவிடும். அப்போது முலைக்காம்பை மெல்ல எடுத்துவிட்டுச் சில வினாடிகள் இடைவெளி விட்டுக் குழந்தைகட்குப் பால் புகட்ட வேண்டும்.

குழந்தை பாலருந்தும்போது பாலை மட்டும் உறிஞ்சி எடுப்பதில்லை. தாய்ப்பாசத்தையே உறிஞ்சி மகிழ்கிறது. குழந்தைக்குப் பாலை வயிறாரக் கொடுக்கத் தாய் எவ்வளவு நேரம் கொடுக்க வேண்டும், எத்தனை முறை கொடுக்க வேண்டும் என்பதற்கு வரையறுக்கப்பட்ட விதிமுறைகள் கிடையாது. குழந்தையின் எடை, உடல்நிலை, தன்மை ஆகியவற்றுக்கேற்பக் காலகட்டங்கள் மாறலாம். ஒரு குழந்தை பசி எடுத்து அழுதவுடன் வேலையென்று பாராமுகமாக இராது, பச்சிளங் குழந்தையை மார்போடணைத்து, தலையை நன்கு உயர்த்தி பாலை நிரம்பக் கொடுத்தல் வேண்டும். தாய் மடியில் கிடக்கும் குழந்தை, தன் பசி தணிந்திடப் பத்து நிமிடங்களேனும் முலைகளில் வாய் வைத்துப் பால் குடிக்கும். சில குழந்தைகளோ வயிறு முட்டக் குடித்த பின்னரும் கூடத் தாயின் அரவணைப்பிலிருந்து விட்டு விலக மனமின்றி முலையைக் கவ்விப் பிடித்துச் சப்பிக் கொண்டே இருக்கும். இது தாய் சேய் பந்த இறுக்கத்தைக் காட்டுமாதலால், குழந்தையைத் தாயிடமிருந்து இச்சமயம் தனிமைப் படுத்தலாகாது. உண்ட மயத்தில் உறங்க ஆரம்பிக்கும் போது குழந்தையைத் தனித்துத் தொட்டிலில் இட வேண்டும். எனவே, பால் கொடுக்கும் நேரம் குழந்தைக்குக் குழந்தை மாறுபடலாம்.

சாதாரணமாக ஒரு ஆரோக்கியமான தாய், நல்லாரோக்கியமான குழந்தைக்கு மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை புகட்டினாலே போதுமானது. ஆனால், அதையே ஒரு விதியாகக் கொள்ளாது. தாயின் அரவணைப்பிலே இருந்து எப்போதெல்லாம் ஒரு குழந்தை பால் குடிக்க விரும்பி அழுகிறதோ அப்போதெல்லாம் 'குடித்து மூன்று மணி நேரம் ஆகவில்லை' எனக் காத்திராது, அரவணைத்துப் பால் புகட்ட வேண்டியது தாயின் கடமையாகும்.

குழந்தை காம்பைச் சப்ப ஆரம்பித்தவுடன் பால் சுரந்து விடுபட ஆரம்பிக்கிறது. அக்குழந்தை வயிறு முட்டக்

தவறான முறை



குடித்துச் சப்புவதை நிறுத்தியவுடன், சுரந்து விடுபடுவதும் நின்று விடுகிறது.

குழந்தை குறை மாதத்திலேயே பிறந்த முதிராத குழந்தையாக இருக்குமாயின் தொடர்ந்து முலையைச் சப்பிப் பால் குடிக்க இயலாது. விரைவிலேயே அயர்ச்சியுற்று முலையை விட்டுவிடுகிறது. சிறிதளவே உட்கொண்டிருக்குமாதலால் பசி முற்றிலும் அடங்காத நிலையில் அடுத்து வெகு விரைவிலேயே பசித்து அழ ஆரம்பித்து விடுகிறது. இக்குழந்தைகளுக்குப் பால் அடிக்கடி கொடுக்க வேண்டி நேரிடலாம்.

சப்பிக் குடிக்க இயலாத முதிராத குழந்தையாக இருந்தாலும், பிளவுபட்ட உதடுகள், அண்ணப்பிளவு ஆகிய ஊனங்களுடன் பிறந்த குழந்தையாக இருந்தாலும் முலையை உறிஞ்சிப் பால் குடிக்க இயலாதாகையால் தாய் தன் பாலைப் பீச்சி எடுத்துக் குழந்தைக்குப் புகட்ட வேண்டும்.



குழந்தைகள் தாயின் பாலை உறிஞ்சிக் குடிக்கும் போது காற்றையும் பாலுடன் குடித்து விடும். எனவே பால் குடித்து முடிந்தவுடன் 'குழந்தையை தோளிலே சார்த்தி, முதுகைத் தடவிக் கொடுத்து, ஏப்பம் விடச் செய்ய வேண்டும். அப்போது காற்றும் வெளியேறிவிடும். காற்று வெளியேறுகின்ற போது சில பால் துளிகளும் சேர்ந்து வெளியேறலாம். இவ்வாறு செய்யவில்லையென்றால் குடித்துவிட்டுப் படுத்திருக்கும் குழந்தை திடீரென வாந்தி பண்ணி மூச்சுத் திணறல் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. பால்குடிக்கும் குழந்தைகட்கு அவ்வப்போது விக்கல் ஏற்படலாம். அது குறித்து அஞ்ச வேண்டியதில்லை.

குழந்தை மலச்சிக்கல், அஜீரணம் ஆகிய கோளாறுகளின்றி நிம்மதியாகத் தூங்கி, ஆரோக்கியத்துடன் வளர்ந்து வருமானால் தாய்ப்பால் போதுமானது என்பதை உணர்ந்து கொள்ளலாம். குழந்தைக்கு மலச்சிக்கல் ஏற்பட்டாலோ விடாது அழுது கொண்டிருந்தாலோ எடை குறைந்து வந்தாலோ பால் போதவில்லை என்று யூகித்துக் கொள்ள வேண்டும். பால் அதிகம் சுரப்பதற்காக நிறைய மருந்து வகைகள், உணவு வகைகள், மூலிகைகள், பூண்டு முதலியவற்றைக் கொடுப்பதைவிடக் குழந்தையைத் தாயின் முலைகளைச் சப்பவிடுதலே பால் அதிகம் சுரப்பதற்கு ஒரு சிறந்த மார்க்கமாகும். பேற்றுக்குப் பின் தாய் உட்கொள்ளும் மருந்துகள் பால் வழிச் சென்று குழந்தைக்குக் கெடுதல் விளைவிக்கலாம். ஆதலால், மருத்துவரின் அனுமதியின்றி ஒரு தாய் எந்தவித மருந்து வகைகளையும் உட்கொள்ளக்கூடாது.

தாய்க்குச் சிறிய அளவிலே உடல் பாதிப்புகள் இருக்குமானால் அதற்காகத் தாய்ப்பாலை நிறுத்த வேண்டியதில்லை. விஷக்காய்ச்சல், மஞ்சட் காமாலை போன்றவைகளால் தாய் பாதிக்கப்பட்டால், அவற்றிலிருந்து மீண்டும் நல்லாரோக்கியம் பெறும் வரை குழந்தைக்குப் பால் புகட்டாதிருந்துவிட்டுப் பின்னர் புகட்டலாம். இவ்விடை வேளையில் தினமும் ஒழுங்காகப் பாலைப் பீச்சி எடுத்துவிட வேண்டும். இல்லை என்றால் தாய்க்குப் பால் தேங்கிக் காய்ச்சல் வரலாம், அல்லது வேண்டும் போது பால் சுரக்காது வற்றிவிடலாம்.

ஆனால், தாய் மனநோய், புற்றுநோய் ஆகியவற்றிற்காக மருந்துகள் உட்கொண்டு வந்தாலும், பால் அறவே இல்லாதிருந்தாலும், தாய் வேலை நிமித்தம் குழந்தையைப் பிரிந்திருக்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலை இருந்தாலும், புட்டிப் பால் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். அப்போது சங்கு, கெண்டி, பால் புட்டி ஆகியவற்றில் எதைக் கொண்டு பால் புகட்டுவது நல்லது எனும் எண்ணம் எழலாம். கெண்டியிலும் சங்கிலும் புகட்டுவதைவிட தேக்கரண்டியைக் கொண்டு புகட்டுவது நல்லது.

பால் புட்டியில் புகட்டும்போது, குழந்தை இரப்பர் காம்பு மூலம் சப்பிப் பாலை உறிஞ்சுவதால் தாடைச் தசைகள், பல், ஈறு முதலியன பலம் பெற்று ஆரோக்கியமாக வளருகிறது. எனினும், முழுக் கவனத்துடன் நுண்ம சுத்தி செய்யப்படவில்லை எனில் தீங்கு தரும்.

ஒவ்வொரு தடவையும் பால் கொடுக்கும் முன்பு கையை நன்றாகச் சுத்தம் செய்தல் வேண்டும். பால் புட்டியைக் கொதிக்கும் நீரில் கழுவி நன்றாகச் சுத்தப்படுத்திய பின்னர் உபயோகிப்பதுடன், உபயோகிக்கும் முறையிலும் கவனம் செலுத்த வேண்டும். புட்டியிலிருக்கும் பால் இரப்பர் காம்பில் நிறைந்து நிற்கும்படியாகப் புட்டியைச் சாய்த்துப் பிடிக்க வேண்டும். இல்லையெனில் புட்டியிலுள்ள காற்றுக் குமிழ்கள் குழந்தையின் வயிற்றுக்குள் சென்று பாலைக் கக்குமாறு செய்துவிடுகின்றன. இதைத் தவிர்க்கவே புட்டியைச் சாய்த்துப் பிடித்துக் கொடுக்க வேண்டும். பால் கொடுத்து முடித்தவுடன் பால் புட்டியைக் கொதிநீரில் சுத்தம் செய்து வைக்க வேண்டும்.

குழந்தை பால் குடித்துக் கொண்டிருக்கும்போது ஒரு தாய் கர்ப்பமுற்றால் தொடர்ந்து குழந்தைக்குப் பால் புகட்டலாமா என்ற ஐயம் எழலாம். தாய் ஆரோக்கியத்துடன் இருந்தால் நடைமுறையில் இது சாத்தியமே.

நன்றி :
மருத்துவ அறிவியல் மலர்

• • •

# எலும்பு மண்டலம்

உடலிலுள்ள எலும்புகளெல்லாம் சேர்ந்தது தான் எலும்பு மண்டலம். எலும்புகள் நம் உடலுக்கு ஆதாரமாகவும், தசை, நரம்பு முதலிய திசுக்களுக்குப் பற்றுக் கோடாகவும் இருக்கின்றன. மூளை, கண், இதயம், நுரையீரல் போன்ற மென்மையான உறுப்புகளுக்குத் தீங்கு நேரிடாமல் பாதுகாக்கின்றன. தசைகள் பொருந்துவதற்கு இடமாகவும், அவை இயங்குவதற்கு ஆதாரமாகவும் இவை அமைந்துள்ளன. இவை தவிர இன்னும் இரு நன்மைகளும் உள. எலும்புகள் சிலவற்றின் உட்புறத்தில் இரத்த உயிரணுக்கள் உற்பத்தியாகின்றன. உடல்நலத்திற்கு மிகவும் தேவையான கால்சியம் என்னும் ரசாயனப் பொருள் எலும்புகளில்தான் சேமித்து வைக்கப்படுகிறது.



எலும்புகளும் உயிரணுக்களால் ஆனவை; எலும்புகள் வளரவளரப் புதிய எலும்பு உயிரணுக்கள் உண்டாகின்றன; பழைய உயிரணுக்கள் அழிகின்றன.

மனித உடலில் மொத்தம் 206 எலும்புகள் உள்ளன. ஆனால் சிறு குழந்தைகளின் உடலில் 350 எலும்புகள் இருக்கும். வயதாக ஆகச் சில எலும்புகள் ஒன்றாகச் சேர்ந்துவிடுகின்றன. எலும்புகள் ஒன்றுடன் ஒன்று பொருந்திச் சேர்ந்திருப்பதற்கு மூட்டுகள் என்று பெயர். இந்த மூட்டுகளில் சில அசையும்; சில அசையா. கைகால்களில் உள்ளவை அசையும் மூட்டுகள். மண்டை எலும்புகள் அசையா மூட்டுகள்.

தலையில் 22 எலும்புகள் இருக்கின்றன. இவை தவிர, காதினுள் மூன்று சிறிய எலும்புகள் ஒரு தொடராக அமைந்துள்ளன. இந்த ஆறு எலும்புகளையும், தொண்டையிலுள்ள நாவெலும்பையும் சேர்த்துத் தலை எலும்புகள் 29 என்று கணக்கிடுவதுண்டு.

எலும்பின் வளர்ச்சிக்கு இன்றியமையாத கால்சியம் என்னும் சுண்ணாம்புச் சத்து நம் உணவில் போதிய அளவு சேரவேண்டும். D-வைட்டமினும் எலும்பின் வளர்ச்சிக்கு அவசியம். இது குறைந்தால் எலும்பு வளராது. எலும்பு வலுப்பெறாமல் வளைந்து போகும். இந்த நோய்க்குக் கணைநோய் என்று பெயர் புகையிலை, அபினி, சாராயம் போன்ற பொருள்களிலுள்ள நஞ்சுகளால் எலும்புக்குத் தீங்கு நேரும். எலும்புக்கூடு சீராக இருக்கவும், செம்மையாக இயங்கவும், சமமாக வளரவும் தக்க உடற்பயிற்சி அவசியம்.

★ ★ ★





**Non-irritant, pinhole free gloves for safety of doctor & patient**

***Manufactured :***

- In clean, hygenic, dustfree environment.
- With non-toxic chemicals and special quality latex.
- With extensive leaching in hot flowing water (80 ft) for removal of residue.
- Pre-powdered with bio-absorbable cornstarch.
- Sterilised in house in a validated and EN46002 certified facility.

★ **SURGICARE**

The 100% sterile Pre-powdered SURGICAL GLOVES
Packed in ready to use pouches.
Specification : EN455
ASTM D-3577, ISI-13422

★ **SURGICARE**

Approved re-usable
NON-STERILE
SURGICAL GLOVES
Specification : ISI : 4148

★ **KALTEX**

Disposable, AMBIDEXTROUS
EXAMGLOVES
Specification : EN455
ASTM D. 3578

***Internationally recognised for quality***

Quality Management Systems & Product Quality Certificate :

**Next time you require a pair of safe hands.**

Contact : **KANAM LATEX INDUSTRIES PVT. LTD.**

P.B.No.28, Kottayam-686001 Ph : 563513, Tlx : 0888-281 OPTL IN
E-mail : Kanam@md2.vsnl.net.in Fax : 0481-563614

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும், தனக்கு வருகின்ற கோரிக்கைகளில் உயிர்காக்கும் அறுவை சிகிச்சைக்கு உதவி வேண்டி வருகின்ற கோரிக்கைகள் மீது தனி கவனம் செலுத்தி பரிசீலனை செய்து காலதாமதமின்றி உதவி வழங்க வேண்டுமென்று அறிவுரை வழங்கினார்கள். மேலும் தகுதியுடைய அனைவருக்கும் கண்டிப்பாக இவ்வுதவி வழங்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்தார்கள்.

அறுவை சிகிச்சைகளுக்கு நிதியுதவி

முதலமைச்சர் அவர்களின் இந்த ஆணையை ஏற்று இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளவும், சிறுநீரக அறுவை சிகிச்சை மேற்கொள்ளவும் புற்றுநோய் சிகிச்சை மேற்கொள்ளவும் நிதியுதவி வேண்டி பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு தமிழகம் முழுவதும் 68 நபர்களுக்கு இவ்வுதவி 17.7.2001 அன்று வழங்கப்பட்டது.

சென்னை மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளிலிருந்து இவ்வுதவி பெறும் எட்டு பேர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் 17.7.2001 அன்று தலைமைச் செயலகத்தில் தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் 2 இலட்சம் நிதியுதவி வழங்கினார்கள்.

இதேபோன்று பிற மாவட்டங்களில் நிதியுதவி அனுமதிக்கப்பட்டுள்ள மீதமுள்ள 60 நபர்களுக்கும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் நிதியுதவி வழங்கிட முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்கள் சென்னை சாலி கிராமத்தைச் சேர்ந்த சிறுமி தீபா, பெரம்பூரைச் சேர்ந்த சிறுவன் ஜிலானி, ஷெனாய் நகர் திரு.பிரசாத், பெரியமேடு திரு.பழனியப்பன், சேமியர்ஸ் ரோடு திருமதி. ஹில்டா ஹென்றி, காஞ்சிபுரம் படூர் திரு. ஆரூண், நங்கநல்லூர் திருமதி.சுசீலா, இராஜகீழ்ப்பாக்கம் திரு. வெங்கடேசன் ஆகிய எட்டு பேர்களுக்கு இருதய அறுவை சிகிச்சைக்காக ஒவ்வொருவருக்கும் ரூபாய் 25 ஆயிரம் வீதம் நிதியுதவியினை நேரில் வழங்கினார்கள்.

நிதியுதவி பெற்ற இவர்கள் அனைவரும், உயிர்காக்கும் அறுவை சிகிச்சைக்குத் தக்க நேரத்தில் நிதி வழங்கி உதவி செய்த முதலமைச்சர் அவர்களுக்குத் தங்களது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

**இருதய மாற்று அறுவை சிகிச்சைக்காக எட்டு நபர்களுக்கு ரூ.2 இலட்சம் நிதியுதவி**

## தாஜ்மகால்

உலகிலேயே மிக அழகான கட்டடம் தாஜ்மகால். இது உத்தரப் பிரதேச மாநிலத்திலுள்ள ஆக்ராவில் உள்ளது. மொகலாயப் பேரரசர் ஷாஜகான் இதைக் கட்டினார். மிகவும் அன்பு செலுத்திய இவருடைய மனைவி மும்தாஜ் மகால் *1631*–ல் இறந்தாள். மும்தாஜ் மகாலின் நினைவுச் சின்னமாக இவர் இதைக் கட்டினார். மும்தாஜ் மகால் என்ற சொல்லுக்கு 'அரண்மனை யின் அணிகலன்' என்று பொருள்.

தாஜ்மகால் கட்டட வேலை 1632–ல் தொடங்கப் பெற்றது. இதைக் கட்டிமுடிக்க 21 ஆண்டுகளாயின. இதற்கு நிறையப் பொருள் செலவும் ஆயிற்று. பாரசீகத்திலிருந்தும் ஆசியாவின் மற்றப் பகுதிகளிலிருந்தும் கட்டடக் கலைஞர்கள் வந்திருந்தனர். கட்டட வேலையை முஸ்லீம்களும், அழகுபடுத்தும் வேலைகளை இந்துக்களும் செய்து முடித்தனர்.

கட்டடம் முழுவதும் வெள்ளைச் சலவைக் கல்லால கட்டப்பட்டிருக்கிறது. கட்டடத்தின் உள்ளே ஆங்காங்கு செதுக்குச் சித்திரங்கள் பல உள்ளன. சுவர்களில் முஸ்லீம் வேதமான 'குர் ஆன்' பொறிக்கப்பட்டுள்ளது. மற்றும் பல இடங்களில் பூ வேலைபாடுகள் அழகாக விளங்குகின்றன. சுற்றிலும் சிவந்த மணற் பாறைகளில் தளவரிசைகளும், பூத்துக் குலுங்கும் தோட்டங்களும், குளங்களும் இதன் எழிலைப் பன்மடங்கு எடுத்துக் காட்டுகின்றன. தாஜ் மகாலில் மும்தாஜ் மகால் கல்லறையின் அருகிலேயே ஷாஜகான் கல்லறையும் உள்ளது.

விலையுயர்ந்த நவமணிகளைப் பதித்துள்ள இம்மகால் காலையிலும் மாலையிலும் பல்வேறு நிறங்களில் தோற்றமளிக்கிறது. பால் நிலவு பொழியும் இரவிலோ பல மடங்கு அழகாகக் காட்சித் தருகின்றது. இவ்வளவு எழில்மிக்க தாஜ் மகாலை அயல்நாட்டினர் பலரும் வியந்து பாராட்டிச் செல்கின்றனர். •

# இளைஞனே நில்!

வாழ்வில் ஒளிமயம் பெற
வந்ததே இனிய இளமை;
பொழுதுகள் இனிதாகினும்
பொறுப்பு பெரிய தாகுமே..

இளைஞனே காலம்உன் கையில்
இனிய உன் காலத்தை
கல்விக்கு காணிக்கையாக்கி எதிர்
காலத்தை உனக்கு உரியதாக்கு

உழைப்பை நீமறந்தால் அது
உன் வறுமைக்கு வழி காட்டும்
வரப்புஉயர நீர்உயரும் உழைப்பெனும்
துடுப்பு உன்னைக் கரைசேர்க்கும்

உன்பலம் எதுவென்று நீயறியாயோ?
உனக்குத் துணை உன்அறிவன்றோ!
விடாமுயற்சியுடன் நீ வினையாற்றி னால்
விண்ணுலகமும் உனக்கு உரியதன்றோ

வளமான வாழ்வுக்கு
வழி சொல்கிறேன் உனக்கு:
கடும்உழைப்பும் விடா முயற்சியும்
கட்டியங்கூறும் உன் வெற்றிக்கு!



• செவ்வேள்

# தொழில்நுட்பப் பட்டப்பிரிவில் சேர்வதற்கு இலவச இடம் ஒதுக்கீடு

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப்



பொறுப்பேற்ற நாள் முதல் பொது மக்களின் குறைகளை நேரில் கேட்டறிந்தும், அவர்களிடமிருந்து வரப்பெறும் மனுக்களைப் பரிசீலித்தும், உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டு வருகிறார்கள்.

**மனுக்கள் பரிசீலனை**

முதலமைச்சர் அவர்களுக்கு வரப்பெற்ற மனுக்களில், மேல்நிலைக்கல்வி முடித்து தொழில்நுட்பக் கல்லூரிகளில் பட்டப்படிப்பு படிக்கவேண்டும் என்ற ஆவலுடன் இக்கல்லூரிகளில் சேருவதற்கு இடம் வேண்டி வரப்பெற்ற மனுக்கள் தமிழக முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. அவற்றைப் பரிசீலித்த முதலமைச்சர் அவர்கள், சென்னையைச் சேர்ந்த விதவைத் தாய் திருமதி.சகுந்தலா தன்னுடைய மகன் செல்வன் யுவராஜ் என்பவரை மிகவும் கஷ்டப்பட்டு படிக்க வைத்ததைக் கருத்தில் கொண்டும், மேல்நிலைத் தேர்வில் அவர் எடுத்திருந்த 1059 மதிப்பெண்களைக் கருத்தில் கொண்டும், அண்ணா பல்கலைக்கழகத்தில் முதலமைச்சர் அவர்களுக்கு உள்ள சிறப்பு ஒதுக்கீட்டில் ஓர் இடத்தை வழங்கியுள்ளார். அதன் மூலம் அந்த மாணவர் B.E. (Electronics & Communications Engineering) பட்டப் படிப்பிற்கு இலவச இடப்பிரிவில் (Free Seat) ஒரு இடத்தைப் பெற்றுள்ளார்.

மேலும், உலக அளவில் அமெரிக்காவில்



நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் இந்தியாவிலிருந்து கலந்து கொண்ட ஒரே மாணவியான மதுரையைச் சேர்ந்த செல்வி ஆர்த்தியின் தந்தை திரு ஏ. ராமச்சந்திர மோகன் தனது மகள், கணினி தொடர்பான பொறியியல் பாடம் படிக்க வேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்து முதலமைச்சர் அவர்களுக்கு மனு அளித்திருந்தார். முதலமைச்சர் அவர்கள் அந்த மாணவியின் திறமையை கருத்தில் கொண்டு, அண்ணா பல்கலைக்கழகத்தில் முதலமைச்சரின் சிறப்பு ஒதுக்கீட்டில் உள்ள B.E. (Computer Science) படிப்பிற்கான ஓர் இலவச இடத்தை செல்வி ஆர்த்தி மோகனுக்கு வழங்கினார்.

மேலும், 1998–99 ஆம் ஆண்டில் பத்தாம் வகுப்பில் தமிழகத்திலேயே முதல் மாணவியாகத் திகழ்ந்த சென்னையைச் சேர்ந்த செல்வி சசிகலா என்ற மாணவிக்கும் முதலமைச்சர் சிறப்பு ஒதுக்கீட்டில் உள்ள ஒரு இடத்தை வழங்கியுள்ளார். அதன்படி, அந்த மாணவி அண்ணா பல்கலைக்கழகத்தில் B.E.(Computer Science) பட்டப்படிப்பு படிப்பதற்கான இலவச இடம் பெறுகிறார்.

**பெற்றோர்கள் நன்றி**

மேற்கண்ட மூன்று மாணவ மாணவிகளும் 14.7.2001 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை இல்லத்தில் சந்தித்து தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொழில் நுட்பப் பட்டப்பரிவுகளில்



சேருவபதற்கான அனுமதிச் சீட்டைப் பெற்றுக் கொண்டார்கள். மாணவ மாணவிகளும் அவர்களுடைய பெற்றோர்களும் தங்களது மனமுவந்த நன்றியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார்கள்.

• • •




கலை நயம் மிகுந்த
கவின்மிகு தங்க
நகைகளுக்கு

22ct. தங்கம், வெள்ளி,
வைர நகைகள்

# அலி ஜுவல்லர்ஸ்

மீனாட்சிபுரம், நாகர்கோவில் - 629 001.
☎ : 223397, 225699


## ஓய்வூதியம் பெறுவோர்க்கு--

**மா**நில அரசின் ஓய்வூதியம் பெறுபவர்கள்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் உயிருடன் உள்ளார் என்ற சான்றிதழ் வேறு அரசுப் பணிகளில் பணிபுரியவில்லை என்பதற்கான சான்றிதழ் மற்றும் மறுமணம்/திருமணம் செய்து கொள்ளவில்லை என்பதற்கான சான்றிதழ் ஆகியவற்றிற்கு உரியவாறு சான்றொப்பம் பெற்று ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான கால அளவில் சம்பந்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கும் அதிகாரியிடம் வழங்க வேண்டும் என்று நிதித் (ஓய்வூதியம்)துறையின் 24.5.2001ஆம் நாளிட்ட 212–ஆம் எண் அரசாணையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேற்சொன்ன சான்றிதழ்களை அளிப்பதற்கான கால அளவு நிதித்(ஓய்வூதியம்) துறையின் 29.6.2001ஆம் நாளிட்ட 45061ஆம் எண் அரசுக் கடிதத்தில் இந்த ஆண்டிற்கு மட்டும் 31.8.2001 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் உயிருடன் உள்ளார் என்ற சான்றிதழ் அளிக்க வேண்டும். குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் உயிருடன் உள்ளார் என்ற சான்றிதழுடன் வேறு அரசுப் பணிகளில் பணி புரியவில்லை என்றும் மறுமணம்/திருமணம் செய்து கொள்ளவில்லை என்றும் சான்றிதழ் அளிக்க வேண்டும். •

# வளர்ச்சிப் பாதையில் சுற்றுலாத் தொழில்

**மு. ஜெயசிங்**

பல்வேறு தொழில் செய்து போதிய பணம் சேர்ந்ததும் ஒரு மாறுதலுக்காகவும் மன மகிழ்ச்சிக்காகவும் மக்கள் சுற்றுலா போய் வருவது வழக்கம். சுற்றுலா முன்பு ஒரு தொழிலாகவே கருதப்படாத நிலை பல பகுதிகளில் இருந்து வந்தது. ஆனால் சுற்றுலாவே இன்று பொருள் ஈட்டித்தரும் மாபெரும் தொழில்துறையாக வளர்ந்து விட்டது. எப்போதுமே ஏறுமுகமாக வளர்ந்து வரும் தொழில்களில் இப்போது சுற்றுலாவும் ஒன்றாக விளங்குகின்றது. சில நாடுகளில் சுற்றுலாதான் பிரதான தொழிலாக உள்ளது.

இந்தியா பலவித காலநிலை, உணவு, உடை, கலாச்சார பழக்கவழக்கங்கள், அடர்ந்த காடுகள், உயர்ந்த மலைகள், பரந்து நெடுகி கிடக்கும் அமைதியான கடற்கரைகள், தொன்மை நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றால் அலங்கரிக்கப் பட்டுள்ளதால் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் உள்ளம் கவர்ந்து வருகிறது.

இது ஆண்டின் முதல் மூன்று மாதங்களுக்கான வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் வருகை சென்ற ஆண்டின் இதே காலப்பகுதியை ஒப்பிடும் போது 5.6 சதவிகிதம் உயர்ந்துள்ளது. சென்ற ஆண்டின் முதல் மூன்று மாத எண்ணிக்கையைவிட இந்த ஆண்டு இதே காலப்பகுதியில் 42 ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணியர் கூடுதலாக வந்துள்ளனர். இந்த முன்னேற்றம் வெறும் பயணியர் எண்ணிக்கையில் மட்டுமல்ல. வ்ருவாயும் டாலர் கணக்கில் 9.3 சதவிகிதமும் ரூபாய் கணக்கில் 13.7 சதவிகிதமும் கூடியுள்ளது. இவ்வாண்டு ஜனவரி முதல் மார்ச் வரை மட்டும் 4,430.79 கோடி ரூபாய் வெளிநாட்டுப் பயணிகள் மூலம் கிடைத்துள்ளது.

உலக அளவில் சுற்றுலா மற்றும் அது தொடர்புடைய பயணியர் உணவு மற்றும் தங்கும் விடுதிகள் துறை மலைக்க வைக்கும் அளவுக்கு வளர்ந்து கொண்டே செல்கிறது. உலக நிகர உற்பத்தி வருவாயில் சுற்றுலாத்துறையின் பங்களிப்பு 11 சதவிகிதம். அதாவது 40,000 கோடி அமெரிக்க டாலர். வருவாய் மட்டுமல்லாது உலகிலேயே அதிக அளவு வேலை வாய்ப்பு நேரடியாகவோ மறைமுகமாகவோ கிடைப்பது சுற்றுலா மூலமே. வரும் பத்து ஆண்டுகளில் 13 கோடி பேர் புதிதாக இத்தொழிலில் வேலை வாய்ப்பு பெறுவதற்கு வாய்ப்பு உள்ளது என்று ஒரு கணக்கீடு கூறுகிறது.



பலவிதமான சுற்றுலா வாய்ப்புகள் இந்தியாவில் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை பத்து ஆகும். அவையாவன : தீரச்செயலுக்கான சுற்றுலா, சூழல்சார் சுற்றுலா, கடற்கரை கட்டடக்கலை, கோட்டை அரண்கள் மற்றும் அரண்மனைகள், புத்தமத சின்னங்கள், குறிஞ்சி, முல்லை, பாலை வழிபாட்டு தலங்கள் ஆகியவை.

இமயத்தில் மலையேற்றம், சீறிவரும் நீரில் ஆனந்த படகுப் பயணம். கண்ணுக்கெட்டும் தூரம் வரை மணலாகத் தென்படும் ராஜஸ்தான் பாலைவனங்களில் ஒட்டகச் சவாரி போன்றவை புகழ்மிக்க தீரச்செயல்களாகும். அந்தமான், லட்சத்தீவுகள் போன்ற பகுதிகளில் ஸ்கியூபா டைவிங் எனப்படும் விளையாட்டும், இமாச்சலப்பிரதேசத்தில் பாராகிளைடிங் விளையாட்டும் ஆடுவதற்கு ஏற்றத் தலங்கள் பல உள்ளன.

சூழல்சார் சுற்றுலாவுக்கு இந்தியாவில் மனங்கவர் மலைகளும் பள்ளத்தாக்குகளும் ஏராளம் உள்ளன. ஐந்து மாநிலங்களை முதுகெலும்பு



அமைப்பாலும் சிந்தை கவரும் சைவ, வைணவத் திருத்தலங்கள் பெருநகர்களில் காணப்படும் ஆங்கிலேய வரலாற்று சிறப்புமிக்க கட்டடங்கள் போன்றவை பார்க்கத் தகுந்த இடங்களாகும்.

கோட்டை கொத்தளங்களுக்கும் சீர்மிக்க அரண்மனைகளுக்கும் இந்தியாவில் குறைவே இல்லை. ராஜஸ்தானில் உள்ள ஜெய்ப்பூர், ஜோத்பூர் ஜெய்சால்மர், பிகானர் போன்ற இடங்கள் கோட்டை அரண்களுக்குப் பெயர் போனவை. கர்நாடகாவின் மைசூர் அரண்மனை, கன்னியாகுமரி பத்மநாபபுரம் ஆகியவையும் காண்போர் மனம் கவர்பவையே. அவற்றின் அழகும் தொன்மை சிறப்பும் மெருகும் மனதுக்கு இதமளிப்பவை.

புத்த மதத்துடன் தொடர்புடைய வரலாற்று சிறப்புமிக்க தலங்கள் இந்தியாவுக்கு சர்வதேச பயணிகளைப் பெருமளவுக்கு கவர்ந்து வருகின்றன. சித்தார்த்தன் என்னும் இளவரசர் ஞானம் அடைந்து புத்தராக மாறிய சரித்திர நிகழ்வின் சான்றான புத்தகயா போதிமரம். அவர் முதல் சொற்பொழிவு

போல இணைக்கும் இமயமலைத் தொடர் ஒப்பற்ற ஓர் வரப்பிரசாதம். தென்னகத்தில் நீலகிரி மலைத்தொடரின் தனித்தன்மைக்கு ஈடு இணையே இல்லை. இத்தொடர்களின் தாழ்வாரங்களில் பச்சைத் தொப்பிபோல பார்வைக்குத் தெரியும் தேயிலைத் தோட்டங்களும், அடர்காடுகளும், பனி கவிழ்ந்த மலைச்சிகரங்களும் பார்ப்போர் மனத்தில் புத்தெழுச்சி ஊட்டுவனவாகும்.

கடல் நீர்ப் பரப்பின் மேல் உருக்கி ஊற்றிய தங்கமாய் மிளிர்ந்து மெல்ல மேலேறி வரும் கதிரவனைக் காணவும் அலையலையாய் தவழ்ந்து வந்து சில வேளைகளில் செல்லமாகவும் சில நேரம் ஆக்ரோஷமாகவும் தரையில் மோதும் அலைகளை ரசிக்கவும் கன்னியாகுமரி, சென்னை மெரினா, கேரளத்தின் கோவளம், கோவா மற்றும் ஏனைய கடற்கரைப் பகுதிகள் ஏற்ற இடங்கள். மாமல்லபுரத்தின் உயிரூட்டம் கொண்ட சிற்பங்களைக் கடற்கரை மணலில் கண்டு மகிழக் கூடுவோர் பல்லாயிரம் பேராவர்.

இந்தியாவை பல்வேறு பேரரசுகள் ஆண்டுள்ளதால் அவை அனைத்தின் கட்டட சிறப்பையும் தன்னுள் கிரகித்து, வியக்க வைக்கும் தொன்மைச் சின்னங்களைப் பிரசவித்துள்ளாள் இந்தியத் தாய். கி.பி.230 வாக்கில் நிறுவப்பட்ட புத்த ஸ்தூபிகள், அஜந்தா, எல்லோரா மவுண்ட் அபு போன்ற பகுதிகளில் காணப்படும் சமண கலைப் பொக்கிஷங்கள் உலகின் மிகப் பெரும் காதல் சின்னமாம் தாஜ்மகால், நுணுக்கமான சிற்பங்களாலும் அழகிய



நிகழ்த்திய சாரநாத், பரி நிர்வாண நிலையடைந்த குஷிநகர் புத்தர்களால் அமைக்கப்பட்ட நாலந்தா பல்கலைக்கழக தலம் போன்றவை பீகாரிலும், உத்திரபிரதேசத்திலும் காணப்படுகின்றன. திருத்தல பயணிகள் பலர் இங்கு ஆண்டு முழுவதும் வருவர்.



ஏழு சகோதரிகள் என்று அழைக்கப்படும் வடகிழக்கு மாநிலங்களைக் குறிஞ்சி நிலம் என்று சொல்வது தமிழ் இலக்கிய மரபுப்படி சாலப் பொருத்தம். மேகாலயா, அசாம், நாகாலந்து, அருணாசலப் பிரதேசம், மணிப்பூர், திரிபுரா, மிசோரம் ஆகிய இம் மாநிலங்களும் காஷ்மீரமும் தமிழகத்தின் ஊட்டி, கொடைக்கானல் பகுதிகளும் இமாச்சலப்பிரதேசத்தில் சிம்லாவும் மற்றும் மவுண்ட்அபு. பஞ்சகனி, மகாபலேஷ்வர். மடிக்கேரி போன்றவையும் பிரிய மனம்தர மறுக்கும் கோடை வாசத்துக்கான குறிஞ்சிப் பகுதிகளாகும்.

காடும், காடு சார்ந்த நிலப்பரப்பும் இலக்கணத்தால் முல்லை நிலம் என்று அழைக்கப்படுகிறது. இங்கே தத்தம் குணாதிசயங்களுடன் இயற்கையுடன் இணைந்து வாழும் மக்கள் கூட்டங்களும், வனவிலங்குகளும், பறவை பூக்களும் கணக்கற்றவை. நாடு முழுவதும் 80 தேசிய பூங்காக்களும் 441 வன உயிர் சரணாலயங்களும் அழகு சேர்க்கின்றன.தமிழ்நாட்டில் முதுமலை, ஆனைமலை ஆகிய விலங்குகள் சரணாலயங்களும் வேடந்தாங்கல் பறவை உய்விடமும் பிரபலமானவை. ராஜஸ்தானின் ரந்தாம்பூர் தேசிய பூங்கா, சரீஸ்கா புலிகள் உய்விடம், உத்தரபிரதேசத்தில் கார்பெட் மற்றும் துத்வா தேசிய பூங்காக்கள், மத்திய பிரதேசத்தில் கன்ஹா மற்றும் பந்தவ்கார் தேசிய பூங்காக்கள், அசாமின் ரைனோசராஸ் உய்விடம் போன்றவை உலக புகழ் பெற்றவை.



பாலை நிலத்துக்கும் பெருமைகள் பல ராஜஸ்தானின் கம்பீர மீசைக் காரர்களாலும் திரையிட்டு செல்லும் புன்னகை பூத்த மகளிராலும் கிடைத்துள்ளன. அவர்களின் வண்ணம் செறிந்த கலாச்சார உடை அணிகலன் போன்றவற்றுடன் சவாரிக்கு ஒட்டகமும் தொன்மைவாய்ந்த கோட்டைகளும் பயணிகளுக்கு உற்சாகம் ஊட்டுகின்றன. ஜோத்பூர், ஜெய்சால்மர், பைகானர் போன்ற நகர்கள் பாலை நிலத்தில் எழுந்துள்ளன. இங்கு ஒரு முறை வருவோர் வாழ்நாள் முழுவதும் நினைவுகூரும் சிறப்புக்கள் இவ்விடங்களுக்கு உண்டு.

மனதுக்கும் உடலுக்கும் ஒரு சேர புத்துணர்வு ஊட்டவும் புது அனுபவங்கள் பெறவும் பெரிதும் உதவுவது சுற்றுலா. இதனை அனுபவிக்கவும் தொழில் ரீதியாக இதனைப் பயன்படுத்தவும் இந்தியாவில் ஏராளம் இடமுள்ளது.

*- பத்திரிகைத் தகவல் அலுவலகம் ●*

## மேற்படிப்பு படிப்பதற்கு உதவித் தொகை

சென்னை, மேற்கு மாம்பலம் பகுதியைச் சார்ந்த திரு. எம்.ஆர். வெங்கடசுப்பிரமணியன் என்பவர் தனது மகள் செல்வி வெ.ஞானப்பிரியா பிளஸ் 2 தேர்வில் 1200க்கு 1180 மதிப்பெண்கள் பெற்ற நிலையில், முதற்பாடமாக சமஸ்கிருதம் எடுத்துப் படித்த காரணத்தால் அரசு வழங்கும் எவ்வித கல்விச் சலுகைகளும் பெற முடியவில்லை என்றும், தற்போது அண்ணா பல்கலைக்கழகத்தில் 'பிஇ' பொறியியல் பட்டப்படிப்பில் சேர இடம் கிடைத்தும் அங்கு பயில வசதியற்ற நிலையில் உள்ளதாகவும், தனது குடும்பம் மிகவும் வறிய நிலையில் உள்ளதால் இந்த உயர்கல்வி பயில உதவி செய்ய வேண்டுமென்றும் கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் 12.6.2001 அன்று நேரில் மனு கொடுத்தார்.

தமிழக முதலமைச்சர் அவர்கள் இவரது மனுவை பரிவுடன் பரிசீலித்து செல்வி வெ. ஞானப்பிரியா அண்ணா பல்கலைக்கழகத்தில் 'பிஇ' பொறியியல் பட்டப்படிப்பு பயிலுவதற்கு, சிறப்பு நிகழ்வாக, "முதலமைச்சரின் பொது நிவாரண நிதி"யிலிருந்து ரூ. 95 ஆயிரம் வழங்கிட அனுமதி அளித்தார். நான்காண்டு கால 'பிஇ' பொறியியல் பட்டப்படிப்பில் ஆண்டுதோறும் கட்ட வேண்டிய கல்விக் கட்டணம், தேர்வுக் கட்டணம் மற்றும் உள்ள இதர கல்விச் செலவினங்களைக் கருத்தில் கொண்டு முதல் தவணையாக 2001–2002ஆம் ஆண்டிற்கு ரூ. 35 ஆயிரம் தற்போது வழங்கவும், தொடர்ந்து பின்வரும் மூன்று ஆண்டுகளுக்கு முறையே ரூ. 20 ஆயிரம் வீதம் அந்தந்த ஆண்டின் தொடக்கத்தில் வழங்கவும், முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இதன்படி, நிதியுதவியின் முதல் தவணையான ரூ.35 ஆயிரத்திற்கான காசோலையை முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.7.2001 அன்று செல்வி வெ. ஞானப்பிரியாவிடம் வழங்கினார்.

மேற்படிப்பு படிப்பதற்கு உதவித் தொகையைப் பெற்றுக் கொண்ட செல்வி வெ. ஞானப்பிரியா மற்றும் அவரது தந்தை திரு. எம்.ஆர். வெங்கட சுப்பிரமணியம் ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தங்களது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். ●


கே. சுப்பிரமணியன்
உரிமையாளர்

# தங்கம் தியேட்டர்

நாகர்கோவில்

☎ அலுவலகம் : 274072, 275178
வீடு : 274896



# உயர்கல்வி பயில மாணவிக்கு நிதியுதவி

கடலூர் மாவட்டம் குள்ளஞ்சாவடி கிராமத்தில் வசிக்கும் ஆர்.சீனுவாசன் என்பவரின் மகள் செல்வி சீ.சிவகங்கை, தான் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளதாகவும், மேற்கொண்டு படிப்பதற்கு வசதியின்றி குடும்பம் மிகவும் வறிய நிலையில் உள்ளதாகவும் தெரிவித்து மேற்கொண்டு படிப்பதற்கு உதவி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் 11.6.2001 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் மனு கொடுத்தார்.

**உதவித் தொகை**

தமிழக முதலமைச்சர் அவர்கள் இவரது மனுவை பரிவுடன் பரிசீலித்து செல்வி சீ.சிவகங்கை உயர் கல்வி பயில்வதற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் பத்தாயிரம் வழங்கி உத்தரவிட்டார்கள். இவ்வுதவித் தொகையை முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 16.7.2001 அன்று தலைமைச் செயலகத்தில் செல்வி சீ.சிவகங்கையிடம் வழங்கினார்கள்.

மேற்படிப்பு படிப்பதற்கு உதவித் தொகையைப் பெற்றுக் கொண்ட செல்வி சீ.சிவகங்கை முதலமைச்சர் அவர்களுக்குத் தனது உளப் பூர்வமான நன்றியைத் தெரிவித்தார்.

• • •



# ஏழை மாணவனின் உயர்கல்விக்கு தமிழக முதல்வர் ரூ.1 இலட்சம் வழங்கினார்

சென்னை மருத்துவக் கல்லூரியில் பயில இடம் கிடைத்தும் அங்கு சேருவதற்கான பூர்வாங்கக் கல்விக் கட்டணம் மற்றும் இதர கல்விச் செலவுகளுக்கு போதிய நிதி வசதியின்றி தவித்த குமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஏழை மீனவ மாணவர் திரு.சூ.மரிய சுபிசன் என்பவருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அறக்கட்டளை சார்பாக ரூபாய் ஒரு இலட்சம் நிதியுதவியை 11.7.2001 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

குமரி மாவட்டம் குளச்சல் அருகே உள்ள குரும்பனை என்னும், கடலோர கிராமத்தைச் சேர்ந்த திரு.மரிய சுபிசன் கடந்த ஆண்டு அதிக மதிப்பெண்கள் பெற்றும் கல்விக் கட்டணம் செலுத்த வசதி இல்லாத காரணத்தினால் மருத்துவக் கல்லூரியில் சேர இயலவில்லை. இந்த ஆண்டு மீண்டும் (Improvement) எழுதி, அதைவிட அதிக மதிப்பெண்கள் பெற்று சென்னை மருத்துவக் கல்லூரியில் பயில இடம் கிடைத்தும் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினால் இந்த ஆண்டும் மருத்துவக் கல்லூரியில் சேர இயலாமல் போய்விடுமோ என அஞ்சி பூர்வாங்க கல்விக் கட்டணம் மற்றும் இதர கல்விச் செலவிற்கு உதவுமாறு கோரி பல பேரை அணுகி, நிதியுதவி பெற்றிட முயன்றுள்ளார். ஆனால் இம்முயற்சியில் அவருக்கு வெற்றி கிடைக்கவில்லை.

இந்நிலையில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினால் திரு மரிய சுபிசன் இந்த ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ். பயில இடம் கிடைத்தும் சேர முடியாமல் தவிக்கின்றார் என்னும் தகவல் முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குச் செய்தித்தாள் மூலம் தெரியவந்தது.

வறுமை காரணமாக மருத்துவக் கல்வியைத் தொடர முடியாத சூழ்நிலையில் திரு.மரிய சுபிசன் உள்ளார் என்பதை அறிந்த முதலமைச்சர் அவர்கள் இதனை மிகவும் பரிவுடன் பரிசீலித்து அவரது கல்வி ஆர்வத்தையும் அவரது குடும்ப சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து எம்.பி.பி.எஸ். பட்டப்படிப்பு பயிலுவதற்காக புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அறக்கட்டளை சார்பாக ரூபாய் ஒரு இலட்சம் நிதியுதவியை 11.7.2001 அன்று திரு. மரிய சுபிசனிடம் வழங்கினார். அவரது நான்கரை ஆண்டு மருத்துவப் படிப்பிற்கு ஆகும் கல்விக் கட்டணம், தேர்வுக் கட்டணம், விடுதிக் கட்டணம் மாதாந்திர உணவுக் கட்டணம் ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு இந்த ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவியை முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார். தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த மாணவரிடம் நிதியுதவியை வழங்கும் போது அந்த மாணவருக்குத் திறமையின் அடிப்படையில் மருத்துவக் கல்லூரியில் இடம் பெற்றதற்காக தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டதோடு நன்கு கல்வி கற்று சிறப்பாக வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்று தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

மருத்துவக் கல்லூரியில் சேர முடியாமல் போய்விடுமோ என்று அஞ்சித் தவித்த திரு.மரிய சுபிசனும் அவரது தாயாரும் தங்களுடைய துன்பத்தை நீக்கும் வகையில் ரூபாய் ஒரு இலட்சம் நிதி வழங்கி உதவிய தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்குத் தங்களது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

• • •

# தம்பதியருக்கு கலப்புத் திருமண நிதியுதவி

தூத்துக்குடி மாவட்டம் கொடியங்குளம் கிராமத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த ராசி என்பவரது மகள் சுடலைமணியும், இராமநாதபுரம் மாவட்டம் அடுத்தகுடி கிராமத்தைச் சார்ந்த பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த இராமகிருஷ்ணன் மகன் கதிரேசன் என்பவரும் சென்னையில் ஒரு நிறுவனத்தில் பணியாற்றும் பொழுது கலப்புத் திருமணம் செய்து கொண்டனர். இதனால் இருதரப்பு குடும்பங்களிலிருந்தும் எந்த உதவியும் பெற முடியாமல் மிகுந்த வறுமைக்கு ஆட்பட்ட நிலையில் திரு.கதிரேசன் உடல்நிலை மோசமடைந்து அதற்கு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள வசதி ஏதும் இல்லை என்றும், ஒரு வயது கைக்குழந்தையுடன் தான் மிகவும் கஷ்டப்படுவதாகவும் தெரிவித்து இந்த துன்ப நிலையை நீக்க, தனக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உதவி புரிய வேண்டுமென்று கோரி திருமதி சுடலைமணி நேரில் 29.6.2001 அன்று மனு அளித்தார்.

### கலப்புத் திருமண நிதியுதவி

முதலமைச்சர் அவர்கள் இவரது கோரிக்கையை பரிவுடன் பரிசீலித்து இவருக்கு தக்க உதவி செய்ய அதிகாரிகளுக்கு ஆணையிட்டார். இந்த பரிசீலனையின்போது இவர்கள் கலப்புத் திருமணம் செய்து கொண்ட போதும் அதற்குரிய அரசின் கலப்புத் திருமண நிதியுதவி பெறவில்லை என்பது கண்டறியப் பட்டதால் இத்திட்டத்தின் கீழ் உடனடியாக இவர்களுக்கு உதவி வழங்குமாறு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள்.

இதன்படி அரசின் கலப்புத் திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் ரூபாய் பத்தாயிரத்திற்கான வரைவோலையும், தேசீய சேமிப்பு பத்திரமாக ரூபாய் பத்தாயிரமும் ஆக மொத்தம் ரூபாய் இருபதாயிரம் நிதியுதவியை முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 16.7.2001 அன்று தலைமைச் செயலகத்தில் திருமதி சுடலைமணியிடம் வழங்கினார்கள்.

இந்த நிதியுதவியைப் பெற்றுக்கொண்ட திருமதி சுடலைமணி, முதலமைச்சர் அவர்களுக்குத் தனது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

• • •





6



## பெர்னாட்ஷா

பெர்னாட்ஷா ஏதேனும் ஒரு புத்தகத்தைப் படிப்பதாக இருந்தால், அந்தப் புத்தகம் திறந்தபடியே மேசைமீது இருக்கும். அவர் உடை அணியும் போதும், அதை மாற்றும்போதும், வேறு சிறு வேலைகளைச் செய்யும்போதும், திறந்திருக்கும் புத்தகத்தைப் படிப்பது வழக்கம். அதைப் படித்து முடித்த பிறகே அந்தப் புத்தகம் மூடப்படும். இப்படி பல புத்தகங்கள் அவர் மேசை மீது திறந்தபடியே இருக்கும்.


கன்னியாகுமரி மாவட்டத்தில்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டில்

*அதிக முதல் பரிசுகளைப் பெற்றுத்தந்த*
*முன்னணி ஸ்தாபனம்*

# அன்வர் லக்கி செண்டர்

ராபியா பில்டிங்,
அசம்பு ரோடு, வடசேரி,
நாகர்கோவில்.

☎ 275613, 276826, 274099

# உள்ளாட்சித் தேர்தல்-வாக்காளர் பட்டியல்

உள்ளாட்சித் தேர்தல்களுக்கான விதிமுறைகளின்படி இத் தேர்தல்களுக்கான வாக்காளர் பட்டியல்கள் அந்தந்த சட்டமன்றத் தொகுதிக்கான வாக்காளர் பட்டியல்களின் அடிப்படையிலேயே தயாரிக்கப்படல் வேண்டும். அக்டோபர் 2001ல் நடைபெற உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல்களுக்கான வாக்காளர் பட்டியல்கள் தற்போது உள்ளாட்சி அமைப்புகளால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. சட்டமன்றத் தொகுதிக்கான வாக்காளர் பட்டியல்களில் அந்தந்த வாக்காளர் பதிவு அலுவலர்கள் முறைப்படி ஏற்படுத்தும் திருத்தங்களையும் ஏற்று தற்பொழுது தயாரிக்கப்பட்டு வரும் உள்ளாட்சி வாக்காளர் பட்டியல்கள் வெளியிடப்படும். இதற்கு ஏதுவாக உள்ளாட்சி வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து பிரசுரிக்கும் நாள் 31.7.2001 லிருந்து 24.8.2001க்கு மாற்றியமைக்கப்பட்டுள்ளது என தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் தெரிவிக்கிறது. •

# செல்போன்

**மோட்டார் வாகனங்களை ஓட்டிச் செல்லும் பொழுது செல்போனை உபயோகிப்பது பொது மக்களிடையே அதிகரித்து வருகிறது. அவ்வாறு உபயோகிப்பதால் அவர்களது கவனம் சிதறி விபத்து ஏற்பட்டு அவர்களது உயிருக்கு ஆபத்து ஏற்படுவது அல்லாமல் மற்ற பொது மக்கள் உயிருக்கும் ஆபத்தை உண்டாக்குகிறது. இது அதிகரித்து வரும் விபத்துக்களிலிருந்து தெரிய வருகிறது.**

**பொது மக்கள் மோட்டார் வாகனங்களை ஓட்டிச் செல்லும் பொழுது செல்போனை உபயோகப்படுத்தாமல் தவிர்க்குமாறு போக்குவரத்து ஆணையர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். மோட்டார் வாகனங்களில் செல்லும் பொழுது அவசரமாகப் பேச வேண்டியிருப்பின், வாகனத்தைச் சரியான இடத்தில் நிறுத்தி விட்டுப் பேசும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தொலைபேசி அழைப்பை விட மனித உயிர்கள் மிகவும் விலை மதிப்புள்ளதாகும். •**

மாவட்ட விற்பனையாளர் :
**S. சுந்தரலிங்கம்**

*பால் வளம் மென்மேலும் பெருக,*
*கறிக்கோழி எடை அதிகரிக்க*

**கோத்ரெஜ் மாட்டுத் தீவனம்**
**&**
**கோழித் தீவனம்**

**28/1, 583, கேப் ரோடு, கோட்டார், நாகர்கோவில்**
**☎ கடை : 242369, 242221 வீடு : 240978**

## எறும்பு

பூச்சி இனங்களுக்குள்ளே எறும்புதான் அறிவுமிக்கது. எறும்பில் சுமார் 8,000 வகைகள் உண்டு. அவை உலகெங்கும் காணப்படுகின்றன.

எறும்புகள் பெரும்பாலும் பூமிக்கு அடியில்தான் கூடுகளைக் கட்டுகின்றன. சிலவகை எறும்புகள் மரத்திலும் கூடுகட்டும். அக்கூடுகள் எங்கு இருந்தாலும் ஒழுங்காக அமைந்திருக்கும். ராணி எறும்பு தங்குவதற்குத் தனியாக ஓர் அறை உண்டு; மற்ற எறும்புகளுக்குத் தனித்தனி இடம் உண்டு; குஞ்சுகள் வளரத் தனி இடங்கள், உணவு சேமித்துவைக்கப் பண்டகசாலைகள் ஆகியவை தனித்தனியாக உண்டு.

அசுகுணி என்னும் ஒருவகைப் பூச்சியை எறும்புகள் கொண்டுவந்து அதற்கு உணவு கொடுத்து நன்றாக வளர்க்கும். கொழுத்து வளர்ந்த அசுகுணியை எறும்பு தொடும்போது அதிலிருந்து இனிப்பான நீர் சுரக்கும். அதனை எறும்பு குடிக்கும். பால் தரும் பசுவாக அப்பூச்சி உதவுகிறது. அதை அடைத்துவைக்கவும் எறும்பு வளைகளில் தோட்டங்களையும் வளர்க்கின்றன! எறும்பு இலைகளை மென்று பிறகு வெளியே உமிழ்ந்து ஓர் அறையின் [illegible] வைக்கும்; சில நாளில் அந்த இலையின்மீது பூஞ்சக்காளான் வளரும். அதனை எறும்புகள் உணவாகத் தின்கின்றன. இனிப்புப் பண்டங்களும் இறந்த சிறுபுழு பூச்சிகளும் எறும்பின் உணவாகும்.



# அண்ணா விருது பெற்றவருக்கு பணி நியமனம் மற்றும் உதவித்தொகை

திருநெல்வேலி மாவட்டம் கட்டபொம்மன் நகர், பிளாட் எண்.33 சுபம் காலனியில் வசிக்கும் திருமதி ஏ.வசந்தா தனது கணவர் இரா.வேல்முருகன் தாமிரபரணி ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியபோது வெள்ளத்தில் சிக்கித் தவித்த சிறுவன் முத்துமுருகனை காப்பாற்றியதற்காக **1999**–ஆம் ஆண்டு ஜனவரி **26**–ஆம் நாள் குடியரசு தினவிழாவில் தமிழக அரசால் அண்ணா விருது வழங்கப்பட்டதாகவும் மேலும் சமூக சேவகராகவும் செயல்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டு, தனது குடும்பம் மிகவும் வறுமையில் அல்லல்படுவதாகவும் தெரிவித்து, பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ள தனது கணவருக்கோ அல்லது பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ள தனக்கோ கருணை அடிப்படையில் அரசு பணி தந்து உதவுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் 12.7.2001 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் மனு கொடுத்தார்.

**பணி நியமனம் மற்றும் உதவித் தொகை**

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திருமதி ஏ.வசந்தாவின் மனுவைப் பரிவுடன் பரிசீலித்து அவரது கணவரின் சேவையைக் கருத்தில் கொண்டு பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ள அவரது கணவருக்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணி நியமனமும், அவர்களது கஷ்டமான குடும்பச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு ரூபாய் பத்தாயிரம் நிதி உதவியும் வழங்கி உத்தரவிட்டார்கள்.

தமிழக முதலமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணை மற்றும் உதவித் தொகையை இரா.வேல்முருகன் மற்றம் அவரது துணைவியாரிடம் 17.7.2001 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

பணி நியமன ஆணை மற்றும் உதவித் தொகையைப் பெற்றுக் கொண்ட இரா.வேல்முருகன் அவரது துணைவியார் ஏ.வசந்தா இருவரும் முதலமைச்சர் அவர்களுக்குத் தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்கள்.

• • •





*திருமணம் மற்றும் விழாக்களுக்கு குறைந்த வாடகையில்,*
*அனைத்து வசதிகளும் நிறைந்தது.*

**சீதா லட்சுமி திருமண மண்டபம்**

இருளப்பபுரம், நாகர்கோவில். போன் : 225975

**Dr. S. SATHASIVAN**

**74-A, Bharath Illam, Erulappapuram,**
**Nagercoil-629 002.**


## நியாயவிலைக் கடைகளுக்கு வாராந்திர விடுமுறை

தற்போது நியாயவிலைக் கடைகளின் வாராந்திர விடுமுறை ஞாயிற்றுக் கிழமை அன்று அனுசரிக்கப் படுகிறது. ஞாயிற்றுக்கிழமை, அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் பொது வாராந்திர விடுமுறை தினமாக இருப்பதால் அன்றைய தினத்தில் பொதுமக்கள் தங்களுக்குரிய பொது விநியோகத்திட்டப் பொருட்களை வாங்குவதற்கு ஏதுவாக மாநிலத்திலுள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளின் வாராந்திர விடுமுறை நாளை ஞாயிற்றுக்கிழமைக்குப் பதிலாக வெள்ளிக்கிழமை என்று மாற்றி அரசு ஆணையிட்டுள்ளது.

## குஜராத் நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நிதியுதவி

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 18.7.2001 அன்று, தலைமைச் செயலகத்தில், குஜராத் நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட, சென்னை திருவொற்றியூரைச் சேர்ந்த திருமதி பி.எல். சித்ரா அவர்களுக்கு ரூ.25,000 நிதியுதவி வழங்கினார்.*

*சென்னை திருவொற்றியூரைச் சேர்ந்த திருமதி பி.எல். சித்ரா தனது கணவர் செல்லப்பன் மற்றும் தங்களது 2 வயது பெண் குழந்தையுடன், குஜராத் மாநிலம் காந்திதாம் என்னும் ஊரில் வசித்து வந்ததாகவும், 26.1.2001 அன்று ஏற்பட்ட நிலநடுக்கத்தால் தங்களது வீடு இடிந்து இடிபாடுகளுக்கு இடையே சிக்கி, தனது கணவரின் இடது கால் முழுமையாக துண்டிக்கப்பட்டதாகவும், தொடர்ந்து சென்னை வந்து சிகிச்சை பெற்று வருவதாகவும், வீடு மற்றும் அனைத்து உடைமைகளும் இழந்து, கணவரின் கால் துண்டிக்கப்பட்ட நிலையில் அவதியுறும் தனது இன்னலைத் தீர்க்க நல்லுதவி புரியுமாறு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனு அளித்தார்.*

*திருமதி பி.எல். சித்ரா அவர்களின் கோரிக்கையை பரிவுடன் பரிசீலித்து, அவரது குடும்ப நிலைமையைக் கருத்தில் கொண்டு, அவரது கணவரின் மருத்துவச் செலவுகளுக்காக, குஜராத் நிலநடுக்க நிவாரண நிதியிலிருந்து ரூ.25,000 வழங்க முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.*

*இந்நிதியுதவி ரூ.25 ஆயிரத்துக்கான காசோலையை 18.7.2001 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், திருமதி பி.எல். சித்ராவிடம் நேரில் வழங்கினார்.*

*நிதி உதவியைப் பெற்றுக் கொண்ட திருமதி சித்ரா, முதலமைச்சர் அவர்களுக்குத் தனது உளப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொண்டார்.*



# கம்ப்யூட்டர் உலகில் இந்தியா

உலகின் வருங்காலம் எவ்வாறிருக்கும் என்பது பற்றி பலதரப்பட்ட விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. இதற்கு ஆதாரமாக பல காரணங்கள் உள்ளன. சுவர்களில் எழுதிய பின்பு இலைகளில் எழுதும் காலங்களைக் கடந்து எண்ணங்களை விலங்குகளின் தோல்கள் அல்லது வெள்ளைத் துணிகளில் எழுதிய பருவங்களைக் கடந்து, தற்பொழுது கம்ப்யூட்டர் உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இன்டர்நெட் திரைகளிலும் கணினி தகடு (Floppy) மூலமும் தற்பொழுது தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன.



கம்ப்யூட்டர் (Cyber) புரட்சியின் வாயிலாக நேரம், இடம் இவற்றில் நிலவிய தடைகள் உடைக்கப்பட்டுள்ளன. வெளிநாடுகளுக்குச் செல்லும் ஒருவர் இந்தியாவிலிருந்து இருபது ஆண்டுகளுக்கு முன்னர் மலையாளம் அல்லது தெலுங்கு மொழியில் வெளியாகும் பத்திரிகைகளைப் படிக்க முடியும் என்று நினைத்து பார்த்திருப்பாரா? 600 பக்க அறிக்கை, வெளியிடப்பட்ட 30 நிமிடங்களில் உலகிலுள்ள எந்தப் பகுதிக்கும் எளிதில் அனுப்ப இயலுமா? ஜெய்பூர் அல்லது விஜயவாடாவிலிருந்து உலகிலுள்ள சிறந்த நூலகம்/தகவல் ஆதார மையங்களுக்கு ஒருவர் தொடர்பு கொள்ள இயலுமா? சியாட்டல் அல்லது மினியபோலிஸ் நகரங்களுடன் உள்ளூர் தொலைபேசி கட்டணத்தில் பேசத்தான் முடியுமா?

'இன்டர்நெட்' தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கான மற்றொரு ஊடகமட்டுமல்ல. நமது வாழ்க்கை முறையைப் புயலென மாற்றவல்ல சக்தி படைத்தது. வர்த்தகம், சமூக கருத்து பரிமாற்றங்கள், பொழுதுபோக்கு ஆகிய பல்வேறு துறைகளில் இதன் பாதிப்பு இருக்கும்.

செய்திகள், தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும் சக்தி வாய்ந்த ஊடகமாக 'இன்டர்நெட்' இன்னும் இந்தியாவில் பயன்படுத்தப்படவில்லை. இதற்கு உதாரணமாக கூறுவோமேயானால் ஆயிரம் வீடுகளில் 4.5 வீடுகளில் மட்டுமே தனிநபர் பயன்பாட்டு கணினி PC (Personal Computer) பயன்படுத்தப்படுகின்றது. ஆயிரம் வீடுகளில் 2.5 வீடுகள் மட்டும் தொலைபேசி வசதிகளைப் பெற்றுள்ளன. உலகில் ஆயிரம் வீடுகளுக்கு 12 வீடுகள் என்ற அளவில் இன்டர்நெட் மற்றும் தொலைபேசி பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

1999–ஆம் ஆண்டின் தேசிய தொலைத் தொடர்பு கொள்கையில் குறிப்பிட்டுள்ளதுபோல், நாட்டில் தொலைபேசி பயன்பாடு தற்போதைய ஆயிரம் வீடுகளுக்கு 2.5 சதவிகிதம் என்ற நிலை 2005–ஆம் ஆண்டில் ஏழு சதவிகிதமாகவும் 2010–ஆம் ஆண்டில் 15 சதவிகிதமாகவும் அதிகரிக்க இலக்கு நிர்ணயித்துள்ளது. இதை எட்டுவதற்காக அடுத்த நான்கு ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் 15 மில்லியன் தொலைபேசி இணைப்புகள் வழங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

தொலைத்தகவல் சாதனங்களை உற்பத்தி செய்யும் சங்கத்தின் கணக்கெடுப்பின்படி, ஒவ்வொரு ஆண்டும் நான்கு மில்லியன் தொலைபேசி இணைப்புகள் தரப்படுமென்றும் இதற்காக ரூ.10,000 கோடி முதலீடு தேவை என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தேசிய தொலைத்தகவல் கொள்கையின் இலக்கை அடைவதற்கு ரூ.30,000 கோடி முதலீடு தேவைப்படும்.

இந்த மொத்த முதலீடான ரூ.30,000 கோடியில் பாதித்தொகை உள்நாட்டு தனியார் முதலீடுகள் மற்றும் அந்நிய முதலீடுகள் மூலமாகத் திரட்டப்படுமென்றும், மீதித்தொகையினை மத்திய அரசு வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக நாட்டில் ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்கள் தூரத்திற்குக் கண்ணாடிஇழை கேபிள்கள் அமைக்கும் பணியில் தனியார் மற்றும் பொதுத்துறை கம்பெனிகள் ஈடுபட்டு வருகின்றன. அதேபோன்று நவீன தொழில்நுட்பமும் இத்துறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஒலி, ஒளி வாயிலாகத் தகவல்களை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அனுப்புவதற்கும் அவற்றைக் கண்காணிப்பதற்கும் இந்திய தொலைத்தகவல் இணைப்புக்குழு அமைக்கப்பட்டது. இக்குழு இதன் செயற்பாட்டிற்கான விதிமுறைகளையும் வகுத்துள்ளது. நாம் எதிர்பார்த்ததைவிட தகவல் தொழில்நுட்பங்கள்

ஒன்றோடு ஒன்று சார்ந்து செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியாவில் இன்டர்நெட் செய்திகளை ஒளிபரப்பும் சாதனமாக விளங்குமா ? இன்டர்நெட் ஒளிபரப்பு சாதனம் செயற்படத் துவங்கினால் தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைத்துறை இதனுடன் எவ்வாறு இணக்கமாக செயலாற்றும் என்பதினை அறிய சமீபத்திய வரலாற்றைப் புரட்டிப்பார்ப்பதின் மூலம் பதில் கிடைக்கும்.

வானொலி துவக்கப்பட்டபொழுது இது சிறந்த செய்தி நிறுவனமாக செயலாற்றுமென எதிர் பார்த்தோமா ? செய்திகளை ஒலிபரப்பும் மக்கள் தொடர்பு சாதனமாக விளங்குவதோடு, தற்பொழுது வரை, அது தொடர்ந்து சிறப்பாக செயலாற்றி வருகிறது. மேலும் கேபிள் தொலைக்காட்சி பத்திரிகைத்துறை ஆகிய போட்டிகளையும் வானொலி சமாளித்து, ஊரக மக்களுக்குச் சென்றடையும் சிறந்த மக்கள் தொடர்பு சாதனமாக விளங்குகிறது.

இன்டர்நெட் தொலைபேசி சேவை, பிரபலமாகவும் எளிதாகவும் பயன்படக்கூடிய வகையிலிருப்பதால் இவ்வமைப்பு செய்தி நிறுவனங்களுக்கும் ஏனைய பத்திரிகைகளுக்கும் கடும் போட்டியாக விளங்கும்.

மக்கள் தொடர்பு சாதனங்களில் புதிய தொழில்நுட்பம் நிலைத்து நிற்கும் என்பதினை பழைய அனுபவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அமெரிக்காவில், 1960–ஆம் ஆண்டுகளில், தொலைக்காட்சி ஆக்கிரமித்துக் கொண்டிருந்தபொழுது, பத்திரிகைத் துறையின் விற்பனை பாதிக்கப்பட்டது. ஆனால் இது சிறிது காலத்திற்கு மட்டுமே நிலவியது. ஆனால் தொடர்ந்த பத்தாண்டுகளில் தொலைக்காட்சியினால் பத்திரிகை படிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது என்பதை பத்திரிகைத் துறையினர் உணர்ந்து கொண்டனர்.

தொலைக்காட்சி வந்த பின்னர் வானொலி கேட்போரின் எண்ணிக்கை குறைந்தது. ஆனால் இது சிறிது காலத்திற்கு மட்டுமே நிலவியது. காலை நேரங்களில் தொலைக்காட்சியை விட வானொலி கேட்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளதாக சமீபத்திய ஆய்வின் கணக்கெடுப்புகள் தெரிவிக் கின்றன.

வருங்காலத்தில் இன்டர்நெட் மூலம் செய்திகளை அனுப்பும் முறை முழு அளவில் செயல்படத் துவங்கினால் பத்திரிகைத்துறை பாதிக்கப்படமாட்டாது. கேபிள் மோடம் (Cable Modem or the OFC) ஆப்டிகல் கண்ணாடி இழை கேபிள் முறை எளிதாகவும் குறைந்த விலையிலும் கிடைக்கத் துவங்கினால் பத்திரிகைத் துறையிடையே போட்டி நிலவும். 40 வாட் மின்சாரத்திற்காகும் செலவில் 20 அல்லது 200 பத்திரிகைகளை இன்டர்நெட் பயன்படுத்துவோர் படிக்கக்கூடிய நிலை வரும். இந்தியாவில் இன்டர்நெட் முழு ஆற்றல் வெளிபடுவதற்கு கம்ப்யூட்டர் கல்வி பயின்றோரின் எண்ணிக்கையும் (Personal Computer) பன்னாட்டு தனிநபர் கணினி வைத்திருப்போரின் எண்ணிக்கையும் அதிகரிக்க வேண்டும். •

## பாதரசம்

சாதாரண வெப்பநிலையில் திரவமாக இருக்கும் பாதரசம் ஓர் உலோகம். இது ஒரு தனிமம். 2000 ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் பாதரசத்தை அறிந்திருந்தனர். இதை எளிதில் பிரித்தெடுக்க முடியும். இயற்கையில் தனியாகக் கிடைப்பதுண்டு. இங்குலிகம் (Cinnabar) என்ற தாதுவிலிருந்து பாதரசத்தைப் பிரித்தெடுக்கிறார்கள். இத்தாலி, ஸ்பெயின், மெக்சிக்கோ முதலிய நாடுகளில் இங்குலிகம் அதிக அளவில் உள்ளது. இங்குலிகத்தைக் காற்றோடு கலந்து நன்கு சூடாக்கினால் பாதரசம் அதிலிருந்து ஆவியாகப் பிரியும். ஆவியைக் குளிரச் செய்தால் பாதரசம் சிறு சிறு மணிகளாகத் திரண்டு ஒன்று சேரும்.



பாதரசம் வெள்ளி போலப் பளபள வென்று இருக்கும். முகம் பார்க்கும் ஆடிகளின் பின்புறம் பூசுவதற்குப் பாதரசம் ஒரு காலத்தில் பயன்பட்டுவந்தது. நீர், எண்ணெய் முதலிய திரவங்கள் அவை வைக்கப்பட்டுள்ள கலங்களின் சுவர்களில் ஒட்டிக்கொள்ளும். ஆனால் பாதரசம் அவ்வாறு ஒட்டிக்கொள்வதில்லை. இதன் கொதிநிலை 357° இது –39° வெப்பநிலையில் உறைந்துவிடும். இதன் எடை அதே அளவு நீரைவிட சுமார் 13½ மடங்கு அதிகம். காரீயமும் இதில் மிதக்கும்; மூழ்காது. பெரும்பாலான உலோகங்கள் இதில் கரைந்துவிடும். இரும்பு கரைவதில்லை. எனவே பாதரசத்தை எஃகுக் கலங்களில் சேமித்து வைக்கிறார்கள். பாதரசம் சேர்ந்த உலோகக் கலவைக்கு ரசக்கலவை என்று பெயர். ரசக்கலவைகள் பல வகைகளில் பயன்படுகின்றன. வெப்பத்தையும் மின்சாரத்தையும் பாதரசம் நன்கு கடத்தும்.

வெப்பநிலைகளை அளக்க உதவும் வெப்பமானிகளில் பாதரசம் பயன்படுகிறது. காற்றின் அழுத்தத்தை அளவிட உதவும் சிலவகைப் பாரமானிகளிலும் பாதரசம் பயன்படுகிறது.

நகரங்களில் முக்கியமான தெருக்களில் காணப்படும் பிரகாசமான தெருவிளக்குகள் பாதரச ஆவியைக் கொண்டவை.

★ ★ ★

# P.S. மெடிக்கல் டிரஸ்ட் – மருத்துவமனை
# P.S. மூளை நரம்பியல் மருத்துவ மையம்

தலக்குளம் (வழி), திங்கள்சந்தை, குமரி மாவட்டம் – 629 802

போன் : 04651 – 522299, 522522, 522355

சிறப்பு அம்சங்கள் :

1. அரசு மற்றும் நர்சிங் கவுன்ஸில் அங்கீகாரம் பெற்ற நர்சிங் பயிற்சி பள்ளி (டிப்ளமோ நர்ஸிங்–3 வருடம்)
2. அரசு அங்கீகாரம் பெற்ற லேப் டெக்னிஷியன் பயிற்சி நிலையம்
3. அதிநவீன கம்ப்யூட்டர் கருவிகளுடன் கூடிய மூளை நரம்பியல் பரிசோதனை மற்றும் சிகிச்சை வசதி.
4. அதிநவீன கம்ப்யூட்டர் மூலம் இருதய திறன் அறியும் ஆய்வகம் மற்றும் சிகிச்சை வசதிகள்.
5. வலிப்பு நோய் பரிசோதனை மற்றும் சிகிச்சை
6. பக்கவாத நோய்க்கான சிறப்பு பரிசோதனை மற்றும் சிகிச்சை
7. நரம்பியல் நோய் மற்றும் மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான அதிநவீன உடலியக்க பயிற்சி மையம்.
8. செயற்கை சுவாச கருவி, இருதய செயற்கை துடிப்பு (Pace Maker) கருவி ஆகியவை இணைந்த தீவிர சிகிச்சை பிரிவு.
9. அதிநவீன கண் அறுவை சிகிச்சை, பொது மருத்துவம், மகப்பேறு மருத்துவம், தோல் மருத்துவம் மற்றும் ஏழைகளுக்கான இலவச சிகிச்சை வசதிகள்.

**Dr. ப. ஆறுமுகம்,** M.B.B.S., M.D., D.M.,
மூளை நரம்பியல் நிபுணர்,
இருதய நோய் சிறப்பு சிகிச்சை பயிற்சி,
(C.M.C. வேலூர்)


## எழுதுதல்



கருங்கல் பாறைகளின் மேலும், சுவர்களின்மேலும் பண்டைய மக்கள் எழுத்துகளைச் செதுக்கி வைத்திருப்பதை இன்றும் காணலாம். பதனிட்ட தோலின்மேலும், மரப்பட்டைகளின் மேலும், பானை ஓடுகளின் மேலும், பனை ஓலைகளின் மேலும் எழுதும் வழக்கம் சில நாடுகளில் ஏற்பட்டது.

காகிதத்தில் ஐரோப்பிய மக்கள் அழகாக எழுதுவர். வண்ணப்பூச் சித்திரங்களால் தாம் எழுதியதை அழகு செய்வார்கள். கையால் எழுதுவதை ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு வரையில் ஒரு பெரிய கலையாகவே மக்கள் கருதி வந்தனர்.

அச்சு எந்திரம் வந்த பிறகு எழுத்து வடிவங்கள் பலப்பல விதங்களாக அழகு படத் திருத்தியமைக்கப்பட்டன. நிமிர்ந்த எழுத்து, சாய்ந்த எழுத்து, மெல்லிய எழுத்து, தடித்த எழுத்து முதலிய பல வகையான வடிவங்களில் அச்சு எழுத்துகள் உண்டு. அச்சு எழுத்துகள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகுதான் எழுத்து உருவங்கள் ஒரு நிலையாக அமைந்தன.

இந்தியாவில் மக்கள் எப்போது எழுதக் கற்றுக்கொண்டனர் என்று திட்டமாகக் கூறமுடியாது. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சிந்துவெளி மக்கள் களிமண் பலகைகளின் மேல் எழுதி வந்தனர்.

மன்னர்களின் ஆணைகள் கற்சுவர்களின் மேலும், செப்பேடுகளிலும் எழுதப்பட்டன. அயல்மொழிக் கருத்துகளும் சொற்களும் தமிழில் கலந்தன. சமஸ்கிருத மொழியின் கலப்பு அதிகமாக ஏற்பட்டது. தமிழில் ஏற்பட்ட இந்த மாறுதல்களுக்கு ஏற்ப எழுத்துகளை எழுதும் முறையிலும் மாறுதல்கள் உண்டாயின. சிலர் எழுத்துகளைச் சிதைத்தும், அயல் எழுத்துகளைக் கலந்தும் எழுதினர்.

இந்தக் காரணங்களால் சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளில் தமிழ் எழுத்து எழுதும் முறையில் பல மாறுபாடுகள் ஏற்பட்டன. அச்சு எந்திரங்கள் வந்த பிறகு தமிழ் எழுத்துக்களின் வடிவம் மாறாமல் இருந்து வருகின்றது.

• • •

# தமிழகக் காட்டுயிர்கள்

**சு. தியடோர் பாஸ்கரன்**
கௌரவ வனவிலங்கு பாதுகாவலர்

தமிழக கானுயிர்ச் செல்வத்தின் முக்கிய பரிமாணம் பல்வகையான உயிரினங்கள் தான். வெப்ப நாடான இந்தியாவின் சிறப்பிற்குரிய ஒரு வளம் பல்லுயிரியம் (Biodiversity) மரங்கள். செடி கொடிகள், பாலூட்டிகள். புள்ளினம், ஊர்வன, நீர் வாழ்வன. நண்டு போன்ற நீர்–நில வாழ்வன. பூச்சிகள், வளர்ப்புப் பிராணிகள் போன்ற பல்வேறு உயிரினங்கள் அனைத்தும் இந்தப் பல்லுயிரியத்தில் அடங்குகின்றது.

வெளிமான், இப்போது கோடிக் கரை, கிண்டி முதலிய சரணாலயங்களில் மட்டுமே காணக்கிடைக்கிறது. இதைத்தவிர ஏற்காடு மலைகளில் உள்ள மூங்கணத்தான் என்றறியப்படும் Madras Tree Shrew எனும் சிறுவிலங்கு போன்று, தமிழ்நாட்டில் மட்டுமே காணக்கூடிய அரிய ஜீவராசிகளும் உண்டு.

பல அபூர்வப் பறவையினங்களுக்கும் தமிழகக் கானகங்கள் இருப்பிடம். பசுமையான சோலைக் காடுகளில் மட்டுமே வாழக்கூடிய



வான்கோழி அளவுள்ள இருவாசி மற்றும் கானாங்கோழி போன்ற புள்ளினங்கள் இதிலடங்கும்.

அரிய உயிரினங்களில் சில, தமிழ்நாட்டுக் காடுகளில், அழிவின் விளிம்பில் உயிருக்கும் போராடிக் கொண்டிருக்கின்றன. இதில் குறிப்பிடத்தக்கது, ஆனைமலைப் பகுதியில் வாழும் சிங்கவால் குரங்கு. களக்காடு, ஆனைமலை போன்ற சரணாலயங்களில் அடர்ந்த மழைக் காடுகளில் மர உச்சியிலே வாழக்கூடிய இந்தக் குரங்கு இனம் சர்வதேச அளவில் அறிவியலாளர்களின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. நீலகிரியிலுள்ள கருமந்தியும் அவ்வாறே. பாறைகள் நிறைந்த மலை முகடுகளில் வாழும் வரையாடு எனும் அரிய விலங்கு, வேட்டைப் பிரியர்களால் கொன்று குவிக்கப் பட்டதால், எண்ணிக்கையில் மிகக் குறைந்துவிட்டது. அதுபோல் ஆயிரக் கணக்கில் கூட்டம் கூட்டமாகத் திரிந்த திருகுக் கொம்புடைய

கடந்த நூற்றாண்டில் தமிழ் நாட்டில் அற்றுப் போன உயிரினங்களில் சத்தியமங்கலம் புதர்க்காடுகளில் காணப்பட்ட சிவிங்கிப் புலியும், ஹோகனேக்கல் அருகே இருந்த வரகுக் கோழியும், கழிமுகங்களில் வாழ்ந்த உப்புநீர் முதலையும் முக்கியமானவை. காவிரியில் இருந்த கருப்புக் கெண்டை மீன் இன்று இல்லை.

சோலைக் காடுகள், மன்னார் வளைகுடாவிலுள்ள கடலடிச் செடி கொடிகள் போன்ற தாவர இனங்களும் அற்றுப் போகும் நிலையிலுள்ளன. ஆற்றங்கரைக் காடுகள் மறைந்தேவிட்டன. மண் அரிப்பு, கால்நடைத் தீவனப் பற்றாக்குறை, தண்ணீர் தட்டுப்பாடு, வெள்ளம், வறட்சி போன்றவற்றிற்கு மூல காரணம் காடுகள் நாசமானது தான். இங்கு நாம் மனங்கொள்ள வேண்டியது இத்தகைய சிதைவால் ஏழைகளே மிகவும் பாதிக்கப் படுகிறார்கள் என்பதே.

## கடற்கரைப் பகுதி

சுமார் 1,105 கி.மீ. நீளமுடைய தமிழகக் கடற்கரை ஏராளமான உயிரினங்களுக்கு உறைவிடம். கடல்வாழ் உயிரினங்களுக்காக பாதுகாக்கப்பட்ட சரணாலயம் இராமேஸ்வரத்திற்கு அருகிலுள்ள மன்னார் வளைகுடாவில் உள்ளது. குருசடி, முயல் தீவு போன்ற

இருபத்தியொன்று தீவுகளையும் உள்ளடக்கியதே இந்த தேசியப் பூங்கா. பவளத் திட்டுகளைச் சுற்றி வாழக் கூடிய பல உயிரினங்களை இங்கே காணலாம்.

பவளத் திட்டுக்கள், கடலடி வாழ் தாவரங்கள் நிறைந்த இந்த நீர்ப்பகுதி ஆவுளியா எனும் அரிய கடல்வாழ் பாலூட்டியின் .வாழ்விடம். ஏறக்குறைய மூன்று மீட்டர் நீளம் 270 கிலோ கிராம் எடையுமுள்ள இவ்விலங்கு, கடலின் ஆழமற்ற பகுதிகளில் அங்குள்ள கடலடி புற்களை மேய்ந்து வாழ்கிறது. பல்லாண்டுகளாக இறைச்சிக்காக கொல்லப்பட்ட இந்த அரிய பிராணி, தற்போது அற்றுப் போய்விடும் ஆபத்தில் இருக்கிறது. இது இனப்பெருக்கம் செய்வது மிக மிக மெதுவாகவே, யானையைப் போல ஒரே ஒரு குட்டி ஈனும். யானை இனத்திற்கு ஆவுளியா நெருங்கிய உறவும் கூட.

ஓங்கில் என்று மீனவர்களால் குறிக்கப்படும் டால்பினும் ஒரு பாலூட்டியே. மீன் அல்ல. மன்னார் வளைகுடாவில் மூன்று வகையான டால்பின்கள் உண்டு. கூட்டம் கூட்டமாக வாழும் இவற்றைக் கடற்கரை அருகிலேயே கூட காணலாம்.

பங்குனி ஆமை (Olive Ridley), பேராமை (Green turtle), அழுங்காமை (Howksbill), பெருந்தலையாமை (Loggerhead) மற்றும் தோணியாமை (Leatherback) போன்றவற்றில் மிகப் பெரியது 1.5 மீட்டர் நீளமும், 500 கிலோ எடையும் கொண்ட தோணியாமையே. தமிழக கடற்கரையில் காண்பதற்கு அரியது பேராமை. அதிகமாக காணக்கூடியது பங்குனி ஆமையே. இவை முட்டையிடுவதற்குச் சஞ்சாரமற்ற கடற்கரைக்கு வந்து, துடுப்பு போன்ற தன் பின்னங்கால்களால் மணலில் குழிபறித்து, இருபதுக்கும் மேற்பட்ட முட்டைகளை இட்டுக் குழியை மண்ணால் நிரப்பிவிட்டு கடலுக்குள் சென்று விடுகின்றன. குஞ்சுகள் முட்டையினின்று வெளிவந்தபின் தாமாகவே கடலை நோக்கி நகர்ந்து நீருக்குள் சென்று விடுகின்றன. பங்குனி மாதத்தில் முட்டையிட கரைவரும் பங்குனி ஆமையை சென்னை அருகிலேயே காண முடியும். தோணியாமை மன்னார் வளைகுடாவிலுள்ள முசல் தீவு போன்ற இடங்களுக்கு முட்டையிட வருவதுண்டு. கடலாமைகளுள் சிறியதான அழுங்காமைகள் ஓட்டுக் காகவும் (கண் கண்ணாடி பிரேம் களுக்காக) இறைச்சிக்காகவும் பெருமளவில் வேட்டையாடப்பட்டன. ஆமை முட்டைகள் தோண்டி எடுக்கப்பட்டு விற்கப்பட்டன. கடற்கரைப் பகுதிகளில் மனித நடமாட்டம் அதிகமானதால் முட்டையிட இடம் கிடைக்காமல், இனப்பெருக்கம் குறைந்தது. இன்று



சட்டப்பூர்வமாக இந்த ஐந்து வகை கடல் ஆமைகளும் பாதுகாக்கப் படுகின்றன. முட்டைகளை எடுத்து, பத்திரமாகக் குஞ்சு பொரிக்கும் வரை கண்காணிக்கப்பட்ட இடங்களில் புதைத்து வைத்து காக்கப் படுகின்றன. குஞ்சுகள் வெளி வந்தபின் அவைகள் கடலுக்குள் விடப் படுகின்றன. நட்சத்திர ஆமை வறண்ட பகுதிகளில் வாழும் ஒரு வகை நில ஆமை.

## நதியமைப்புகள்

நதிகளும், நதிசார்ந்த நீர்நிலை களும், கால்வாய்களும், நதியோரக் காடுகளும் முதலைகள், மீன் வகைகள், ஆமைகள், தண்ணீர் பாம்புகள் என எண்ணிலடங்கா உயிர்களுக்கு வாழ்விடங்களாக அமைகின்றன. தமிழ்நாட்டு நதி அமைப்புகளுக்கு மேற்குத் தொடர்ச்சி மலையே ஆதாரம். இங்குள்ள பெருவாரியான நதிகள் மேற்குத் தொடர்ச்சி மலையில் உருவாகி, மேற்கு–கிழக்காக ஓடி, வங்கக் கடலில் கலக்கின்றன.

மலைகளிலிருந்து காடுகள் வெட்டப்பட்டு விட்டதால், அங்கிருந்த நீரூற்றுகள் மறைந்து, நதிகள் நீரற்றுப் போயின. அணைகள் கட்டியதால் நீரோட்டம் தடைபட்டது. விவசாயத்தில் பயன்படுத்தப்பட்ட பூச்சிக் கொல்லி மருந்துகள் ஆறுகளில் கலந்ததாலும், சுற்றுச்சூழல் மாசுபட்டதாலும், நீர் நிலைகள் வறண்டு போனதாலும் அற்றுப் போன உயிரினங்கள் ஏராளம். தூண்டில் போட்டு மீன் பிடிப்போருக்கு பிடித்தமான பூ மீன் கெண்டை (மாஷீர்) இன்று தமிழ் நாட்டு நதிகளில் இல்லை. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இவை பவானி நதியில் ஏராளமாக இருந்ததுண்டு.

## மலைத் தொடர்கள்

தமிழ்நாட்டின் முக்கியமான புவியமைப்பு அம்சம் மேற்கு தொடர்ச்சி மலை. நீலகிரி பகுதி காட்டுயிர்களுக்கு இது ஒரு முக்கியமான உறைவிடம். தமிழ்நாட்டிலுள்ள பத்துப் புகலிடங்

களில் முக்கியமான ஆறு இந்த மலைத்தொடரின் வெவ்வேறு பகுதிகளிலேயே உள்ளன.

இத்தொடரில் உள்ள மழைக் காடுகள் மக்களுக்கு ஒரு தண்ணீர் தொட்டி போன்றது. இவை மழை நீரை சேமித்து வைத்து ஆறுகள் மூலம் மக்களை வாழ்விக்கின்றன. இது தவிர, தமிழகத்தின் மத்தியப் பகுதியில் சில சிறிய குன்றுத் தொடர்களும் உண்டு. (இவை சேலம் மாவட்டத்திலுள்ள சேர்வராயன் மலை, திருச்சியிலுள்ள பச்சைமலை, நாமக்கல் மாவட்டம் கொல்லி மலை மற்றும் வேலூர் மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலை என). இந்த மலைத் தொடர்ச்சிகளில் சரணாலயங்கள் எதுவும் இல்லையென்றாலும் இங்குள்ள பாதுகாக்கப்பட்ட காடுகள் யானை, காட்டெருது. (ஜவ்வாது மலை), கரடி, முள்ளம் பன்றி மற்றும் புள்ளிமான் (சேர்வராயன் மலை), பல அரிய மூலிகைகள் (கொல்லி மலை) போன்றவற்றிற்கு வாழ்விடமாக உள்ளன.

**கானுயிர்ச் சரணாலயங்கள்**

இந்தியா சுதந்திரம் அடைந்த பின் துவக்கப்பட்ட பல அணைத் திட்டங்களாலும், காடுகள் வர்த்தக நோக்கில் அழிக்கப் பட்டதாலும், பயிர்ப்பாதுகாப்புக்கென எளிதாக அனுமதிக்கப்பட்ட துப்பாக்கிகள் கண்மூடித் தனமாக வேட்டையில் பயன்படுத்தப்பட்டதாலும் கானுயிர்களின் வாழ்விடங்கள் குறைந்து, உயிரினங்களின் எண்ணிக்கையும் வெகுவாக குறைந்து, 1947க்குப் பின் வந்த இருபத்தைந்து ஆண்டுகளில் காட்டுயிர்களின் எண்ணிக்கை குறைந்தது போல முன்பு எப்போதும் அந்த வேகத்தில் குறைந்ததில்லை. புலி போன்ற பெரும் பூனையினங்கள் அற்றுப் போய்விடும் நிலை வந்த பிறகுதான், 1972இல் இந்திய காட்டுயிர் (பாதுகாப்பு) சட்டம் அமல் படுத்தப்பட்டது. மிருகங்களை வேட்டையாடுவது அறவே தடை செய்யப்பட்டது. சரணாலயங்களில் உயிரினப் பாதுகாப்பு முடுக்கி விடப்பட்டது.

தமிழ்நாட்டிலுள்ள சரணாலயங் களில் புலி, சிறுத்தை, யானை, காட்டெருது (கவனிக்க – காட்டெருமை அல்ல), கரடி, புள்ளிமான், கடம்பைமான், கேளையாடு (மான் இனம்), வரையாடு, சருகுமான், வெளிமான், செந்நாய், கழுதைப்புலி, நரி, மரநாய், நீர்நாய், அனுமான் மந்தி, கருமந்தி, சிங்க வால் குரங்கு, மலை அணில், ராஜநாகம், மலைப்பாம்பு, முதலை எனப் பலவகையான உயிரினங்கள் உள்ளன. சரணாலயங்கள் அல்லாமல் பாதுகாக்கப்பட்ட காடுகளிலும் (Re served forest) கணிசமான காட்டுயிர்கள் உண்டு. எடுத்துக் காட்டு – ஜவ்வாது மலையிலுள்ள காட்டெருது மற்றும் மான்கள்.



தமிழ்நாட்டின் 1,30,058 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பில் சுமார் 22.748 ச.கி.மீ. மட்டுமே (மொத்தப் பரப்பில் 17.5%) பாதுகாக்கப்பட்ட காடுகள். சுற்றுச்சூழல் சமன் நிலையிலிருக்க வேண்டுமானால் நிலப்பரப்பின் 33 சதவிகிதம் காடுகளாக இருக்க வேண்டும் என்று சூழியலாளர்கள் கூறுகிறார்கள். செயற்கைக் கோள் மூலம் எடுத்த நிழற்படங்கள், 17.5 சதவிகிதத்தை விட குறைவாகவே காடுகள் உள்ளன என்பதைக் காட்டுகின்றன. இந்தக் காடு சூழ்ந்த நிலப்பரப்பில் ஒரு சிறு பகுதியே காட்டுயிர்களுக்குப் புகலிடங்களாக அறிவிக்கப் பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் பத்து கானுயிர்ச் சரணாலயங்கள் உள்ளன. இதில் ஐந்து தேசியப் பூங்கா என அறிவிக்கப்பட்டுள்ளன. சரணாலயம் என்பது ஒரு குறிப்பிட்ட உயிரினத்தின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு ஏற்படுத்தப் படுவது. ஆனால் தேசியப் பூங்கா சுற்றுச் சூழலை ஒட்டியது. இவற்றிற்குச் சட்டப் பூர்வமான பாதுகாப்பு அதிகம். களக்காடு சரணாலயம் சிங்கவால் குரங்குகளைப் பாதுகாக்க; முதுமலை தேசியப் பூங்கா அந்த உயிர்ச் சூழலை அழிவிலிருந்து காக்க.

இவை தவிர தமிழ்நாட்டில் பதினோரு இடங்களில் பறவைகளுக்கெனப் பிரத்தியேகமான சரணாலயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இரை தேட வேறு இடங்களுக்குப் பறந்து செல்வதால் விலங்குகளைப் பாதுகாப்பதைவிட, பறவைகளைப் பாதுகாப்பது கடினமானது.

பொதுவாக புள்ளினங்களை இருவகையாகப் பிரிக்கலாம். வலசை போகும் இனங்கள் மற்றும் வலசை போகாத இனங்கள். குளிர் காலத்தில் ஐரோப்பாவில் நிலம் பனியால் மூடப்படும் போது அங்குள்ள சில பறவை இனங்கள் இந்தியா போன்ற வெப்ப நாடுகளுக்கு இரை தேடி வருகின்றன. ஆனால் இவை இங்கே

கூடு கட்டி, இனப்பெருக்கம் செய்வதில்லை. இவ்வாறு வலசை வரும் பறவைகள் இங்கு உணவிற்காக மட்டுமே வருகின்றன. வலசை வரும் எல்லாப் பறவைகளுக்கும் தமிழ்ப் பெயர்கள் உண்டு.

ஆகவே பறவைகளைப் பாதுகாக்க, அவை இனப்பெருக்கம் செய்யக்கூடும் இடங்கள் சரணாலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன. அதிலும் நீர்ப் பறவைகள் பல இனவிருத்தி செய்ய பாது காப்பான இடங்களை ஏரிகள், ஆறுகளுக்கு அருகே தேர்ந்தெடுத்து, அங்கு கூடு கட்டுகின்றன. எங்கே இரை தாராளமாகக் கிடைக்கிறதோ, எங்கே கூடுகட்ட பாதுகாப்பான மரங்கள் இருக்கின்றதோ, அது போன்ற இடங்களில் நீர்ப்பறவைகள் ஆயிரக் கணக்கில் கூடுகின்றன. தமிழகத்திலுள்ள பறவை சரணாலயங்கள் பதிமூன்றுமே நீர்நிலைகளில் அமைந்தவையே.

தமிழ்நாட்டு நீர்நிலை சரணாலயங்களில் கூடுகட்டும் வெண்கொக்கு, வக்கா, அரிவாள் மூக்கன், நத்தைகுத்தி நாரை, நீர்க்காக்கா, சங்குவளை நாரை, கூளக்கடா போன்ற புள்ளினங்கள் யாவும் நம் நாட்டுப் பறவைகளே. வெளிநாட்டுப் பறவைகள் இந்தியாவிற்கு வலசை வரும்போது, இங்கே கூடு கட்டுவதில்லை. நம் நாட்டில் கூடுகட்டிக் குஞ்சுப் பொரிக்கும் எல்லா புள்ளினங்களும் நம் நாட்டைச் சார்ந்தவைதான். வேடந்தாங்கல் போன்ற சரணாலயங்களில் இனப்பெருக்கம் செய்யும் எல்லாப் பறவைகளுமே இந்தியாவைச் சேர்ந்தவையே. நீர்வாத்து, செங்கால் நாரை, உள்ளான் போன்ற வெளி நாட்டுப் பறவைகள் வேடந்தாங்கல் போன்ற நீர் நிலைகளுக்கு இரை தேட மட்டுமே வலசை வருகின்றன.

இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்து, தமிழகத்திற்கு வலசை வரும் புள்ளினங்களும் உண்டு (இமய மலையின் பனிப்பகுதி களுக்கருகே வசிக்கும் பட்டைத்தலை வாத்துகள் மற்றும் குஜராத்தின் கட்ச் பகுதியிலிருந்து பூநாரைகள் பத்தாயிரக் கணக்கில் பழவேற்காடு ஏரிக்கும், கோடிக்கரை சதுப்பு நிலங்களுக்கும் இரைதேடி வருகின்றன). சில வேளைகளில் சென்னை அடையாறு கழி முகத்தில் கூட பூநாரைகளைக் காணலாம். சிரவி என குறிப்பிடப் படும் நீர்வாத்துக்கள் இலட்சக் கணக்கில் தமிழக ஏரிகளுக்குக் குளிர்காலத்தில் வலசை வருகின்றன.

### புலி செயல்திட்டம்

உணவுத் தொடரின் உச்சியிலுள்ள புலி, காட்டுயிர்களுக்கு ஒரு குறியீடாக அமைந்துள்ளது. புலியைக் காப்பாற்ற எடுக்கப்படும் நடவடிக்கைகளால், காட்டில் வாழும் புழுக்கள் அனைத்துமே சமநிலையில் உள்ளன என்றே பொருள்.

நூறாண்டுகளுக்கு முன் சென்னைக்கு அருகே வண்டலூரிலுள்ள மலைக்காடுகளில் கூட புலிகள் இருந்தன. ஆனால் இன்று சில சரணாலயங்களில் மட்டுமே இவை வாழ்கின்றன. இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் **40,000** ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை, **1972**இல் எடுத்த கணக்கெடுப்பில் **1827** ஆக வீழ்ந்திருந்தது. ஆகவே **1973**–இல் புலி செயல் திட்டம் (Project Tiger) அமல்படுத்தப்பட்டு, எஞ்சியுள்ள



அனைத்து உயிர்களும் பயன்பெறும் என்ற தாத்பரியத்தின் அடிப்படையில் தான் புலி, இந்தியாவின் தேசிய விலங்காக தெரிந்தெடுக்கப்பட்டு, புலி செயல் திட்டமும் அமல்படுத்தப்படுகிறது. காட்டிலுள்ள தாவரயினங்கள், கதிரவனின் சக்தியைப் பெற்று மண்ணினின்று உணவை உறிஞ்சி வளருகின்றன. அவற்றைப் புசித்து வாழ்கின்றன. மான், காட்டுப்பன்றி, காட்டெருது போன்ற கானுயிர்கள். இந்த விலங்குகளை இரையாகக் கொண்டு வாழ்கின்றது புலி, காட்டில் புலிகள் நலமாக இருக்கிறதென்றால் சுற்றுச்சூழலின் மற்ற அம்சங்களான நதிகள், காடுகள், கானுயிர், பூச்சி

புலிகளைப் பாதுகாக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டது. முறையே **253** மற்றும் **567** ச.கி.மீ. பரப்புள்ள முண்டந்துறை மற்றும் களக்காடு சரணாலயங்கள் ஒன்றிணைக்கப்பட்டு, சமீபத்தில் புலி செயல் திட்டக் களமாக அறிவிக்கப் பட்டுள்ளது. தமிழ்நாட்டில், முதுமலை, ஆனைமலை, முக்குருத்தி, முண்டந் துறை போன்ற மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள சரணாலயங்களில் சில புலிகள் வாழ்கின்றன.

### தாவர இனங்கள்

சம நிலங்களிலிருந்த காடுகள் யாவும் அழிந்துபட்டு, இப்போது மலைத்தொடர்கள், பள்ளத்

தாக்குகள், மலையடிவாரங்கள் போன்ற புவிப் பகுதிகளில் மட்டுமே காடுகள் எஞ்சியுள்ளன. இக்காடுளை மழைக் காடுகள், இலையுதிர் காடுகள் மற்றும் முட்புதர்க் காடுகள் என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். இவற்றில் பரந்த புல்வெளிகளும் உண்டு. இதில் அரியது மழைக் காடு. தமிழ்நாட்டில் இவற்றிற்கு சோலைக் காடுகள் என்று பெயர். இங்கு நிலவும் தட்பவெப்ப நிலையில், இங்கு வளரும் மரங்கள், கொடிகள், புதர்கள் போன்ற தாவரங்கள் உச்ச நிலையை அடைந்துள்ளன என்று ூரிவியலாளர்கள் கூறுகிறார்கள். பூமத்திய ரேகையின் இருபுறம் மட்டுமே இக்காடுகள் வளர முடியும்.

தமிழகக் காடுகள் பல்வேறு விதமான மரங்கள் வளர்வதற்கான சூழ்நிலையை உடையன. மரங்களின் அரசன் என்றறியப்படும் தேக்குமரம், மருது மரங்கள், மதிப்பு மிக்க சந்தனமரம், புங்கம், விலையுயர்ந்த ஈட்டி மரம், வெண்ணாகமரம், சோப்புக்காய் மரம் என பலப்பல. தேக்கு மரங்களுக்காக தமிழகத்தின் முக்கியமான மேற்குத் தொடர்ச்சி மலைப்பிலிருந்த காடுகள் அழிக்கப் பட்டன. 19–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், நாடு முழுவதும் புகைவண்டி இருப்புப்பாதைகள் போடப்பட்ட போது, இவற்றிற்குத் தேவைப்பட்ட ஸ்லீப்பர் கட்டைகளுக்காக காடுகள் வேகமாக அழிக்கப்பட்டன. இயற்கையாய் செழித்திருந்த தேக்கு மரங்கள் வெட்டப்பட்டன. எனினும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தேக்குமரம் மலைப்பகுதிகளில் நடப்பட்டு வளர்க்கப்பட்டன. ஆனைமலை சரணாலயத்தில் பல இடங்களில் இத்தகைய வளர்ப்புக் காடுகளைக் காணலாம். சந்தனமரம் ஜவ்வாது மலைத் தொடர் போன்ற சிறிய மலைத் தொடர்களில் வளர்கின்றன. சந்தன மரம் ஒரு ஒட்டுண்ணிப் பயிர். அதாவது, மற்றொரு மரத்தின் வேர்களிலிருந்து உணவை உறிஞ்சி வாழ்வது.

எல்லாவகையான காடுகளிலும் வளரக் கூடிய மூங்கில் இனத்தில் இந்தியாவில் 100 இனங்கள் உண்டு. இவற்றில் பல தமிழ் நாட்டில் உண்டு. நவீன காகிதத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்ட பின், மூங்கில் காடுகள் வரம்பின்றி அழிக்கப்பட்டதுமன்றி, பாரம்பரியமாக கூடை முடைவோரின் வாழ்வும் பாதிக்கப்பட்டது.



## அருகிவரும் தாவர இனங்கள்

பத்து அல்லது பன்னிரெண்டு ஆண்டு களுக்கு ஒருமுறை மலரும் குறிஞ்சி, ஒரு மலைப்பகுதித் தாவரம். இது தமிழகத்தின் கொடைக்கானல் மலைப்பகுதியிலும், நீலகிரி யிலுள்ள முக்குருத்தி மலைப்பகுதியிலும் 1,600 மீட்டர் உயரத்தில் காணப்படும்.

இந்த அரிய தாவரம் தற்போது அழிவின் விளிம்பில் உள்ளது. வர்த்தக நோக்கத்தில் மலைப் பிரதேசங்கள் சீரழிக்கப்பட்டன. முன்பு தேயிலைப் பயிருக்காக பள்ளத் தாக்குகளும், மலைச் சரிவுகளும் மாற்றம் செய்யப்பட்டன. இன்று தோல் பதனிடும் தொழிலுக்குத் தேவை யான வாட்டில் மரங்களையும்; செயற்கை நூலிழைக்காக யூகலி ப்டஸ் மரங்களையும் குறிஞ்சியின் நிலத்தில் நட்டு, குறிஞ்சிச் செடிகள் அழிக்கப்பட்டன. கொடைக்கானல்–மூணார் பகுதியில் உள்ள குறிஞ்சி மலைப் பகுதியில் தான் வைகை, அமராவதி போன்ற நதிகள் உற்பத்தியாகின்றன.

உப்பங்கழிகளின் கரைகளிலும், நதிகளின் முகத்துவாரத்திலும் வளரும் அதிசய தாவரம் சுரபுன்னை. கடலரிப்பு தடுப்பு, வெள்ளக் கட்டுப்பாடு இவற்றிற்குச் சுரபுன்னைக் காடுகள் உதவின. தமிழ்நாட்டில் பல இடங்களில் தழைத்துப் பெருகியிருந்த, ஒருகாலத்தில் அடையார் முகத் துவாரம், கோடிக்கரை போன்ற இடங்களில் இருந்த, இந்த அதிசயத் தாவரம் இப்போது பிச்சாவரத்தில் மட்டுமே எஞ்சியுள்ளது. நீண்ட கழிகள் போன்று நிலத்திற்கு மேல் தெரியும் வேர்களுடைய சுரபுன்னை, கடல்நீரும் நன்னீரும் கலக்கும் இடங்களில் மட்டுமே வளரும்.

## சிலுவை மரம்

சேர்வராயன் மலைத் தொடரிலுள்ள, ஏற்காடு மக்களால் சிலுவை மரம் என்றறியப்படும் Vernonia servarayansis எனும் இந்த மரம் இந்தியாவிலேயே உள்ள அரிய மரம். தற்போது இந்தியாவில் இரண்டே மரங்கள் தான் எஞ்சியுள்ளன. இந்திய அரசின் Botanical Survey of India இந்த மரங்களின் கன்றுகளை வளர்த்து, இந்த மரத்திற்கு புனர் ஜென்மம் அளிக்க முயற்சி எடுத்து வருகின்றது.

## ஆர்கிட் தாவரங்கள்

பல்வேறு வகையான சூழல்களில் வளரக் கூடிய ஆர்கிட் தாவரங்கள், வருடத்துக் கொருமுறை பூத்து, தன் மலர்களினால் பெயர் பெற்றவை. தமிழகக் காடுகளில், பல வகையான ஆர்கிட்கள் உண்டு. அகத்திய மலையில் மட்டுமே வளரும் ட்ரூயி எனப்படும் ஆர்கிட் பூக்கும் போது மட்டுமே நிலத்தின் மேல் வரும். கடும் கோடையில் தங்க நிற வாண்டா என்னும் ஆர்கிட் மலருகின்றது. நீலகிரி வனப்பகுதிகளில் ரின்கோஸ் டைலிஸ் என்ற ஆர்கிட் ஒரு அடி நீளமான சரம் கட்டியது போல் காணப்படும் மலர்களை உடையது. காடுகள் அழிந்து பட்டதால்



ஆர்கிட்களும் அருகிவிட்டன. ட்ரூயி ஆர்கிட் அற்றே போய்விட்டது.

## பாரம்பரிய அக்கறைகள்

ஏரி போன்ற நீர் நிலைகளும், நதிகளும், மலைகளும், காடுகளும் நாட்டிற்கு இன்றியமை யாதவை என்றார் வள்ளுவர்.

*இருபுனலும், வாய்ந்த மலையும்,*

*வருபுனலும்*
*வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு*

நமது மூதாதையர்கள் சுற்றுச் சூழலின் முக்கிய அம்சங்களையும், காட்டுயிர்களைப் பேண வேண்டியது பற்றியும், இயற்கை சமனைப்பேண வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்திருந்தார்கள் என்பதற்கு போதிய சான்றுகள் உள்ளன. இமயத்தில் வசிக்கும் மலைவாசி களாயினும், தமிழ்நாட்டுக் குடியானவர் களாயினும், சூழல் பற்றிய அக்கறை, அவர்களின் பாரம்பரியங்களில் இழையோடு வதைக் காணலாம். இன்று சில பழங்குடியினர் அடர்ந்த காட்டுப் பகுதிகளைப் புனிதத் தோப்பு என அழியாமல் பாதுகாக்கின்றார்கள்.

இந்த அக்கறை மத நம்பிக்கையாகவும் உருவெடுத்தது. சமணர்கள் எல்லா உயிரினங்களும் சமம் என கருணை காட்டினால் தாவரங்கள் அழிந்து விடக்கூடாது என்பதற்காக, கிழங்குகளைச் சாப்பிடுவதை தவிர்த்தார்கள். புத்தமதம் அஹிம்சையை போதித்து, புலால் உண்பதை ஒதுக்கியது. வசந்தத்தின் விழா, புதுவெள்ளத்தை வரவேற்கும் ஆடி பதினெட்டாம் பண்டிகை போன்றவை யாவும் இயற்கையைப் போற்றுகின்றன. கால்நடைகளுக்கென ஒரு தனித் திருவிழாவும் தமிழ்நாட்டில் உண்டு. நதிகளைப் புனிதமென போற்றுவதும்; அணில், குரங்கு போன்ற உயிரினங்களைப் பிள்ளை என்று அழைப்பதுவும்; பாம்புப் புற்று, மரம் போன்றவற்றை வழிபடுவதும் இந்தப் பாரம்பரியத்தின் ஒரு அம்சமே.

நீர், காடு, நிலம் போன்ற இயற்கை செல்வங்களை அழிக்காமல் பேணிநலம் பெறும் முறையிலேயே நமது சமூக வாழ்வும் அமைக்கப் பட்டிருந்தது எனச் சமூகவியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். வேளாண்மை முறைகளும் இயற்கை சமனை பேணும் முறையிலேயே அமைந்திருந்தன. பொழுது போக்கிற் காக உயிரினங்களைக் கொன்று மகிழும் கொடிய பழக்கம் அன்று இல்லை.

ஆனால் இன்றைய நம்வாழ்வில், இயந்திரங்களும், வர்த்தக நோக்கும் வந்த பிறகு இந்த நம்பிக்கைகள் வெறும் குறியீடுகளாக எஞ்சி விட்டன. பாரம்பரியம் தரும் பாடங்களை மறந்து விட்டோம். நம் வாழ்க்கை முறையினால் சுற்றுச் சூழலைச் சீரழிப்பதில் போட்டி போடுகிறோம். இந்நிலை மாற இயற்கைச் சூழலைப் போற்றும் வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

தமிழ் மக்களிடையே சுற்றுச் சூழல், பல்லுயிரியம் பற்றிய விழிப்பு ஏற்படுத்த ஒரு ஆழ்ந்த அக்கறையை உருவாக்க, துறைச் சொற்கள் புழக்கத்தில் கொண்டு வரப்பட வேண்டும். அப்போதுதான் சூழியல் சார்ந்த கருதுகோள்களை, எளிய தமிழில் வெளிப்படுத்த முடியும்.

*"மனோரமா இயர்புக் 2001"–*
*நூலிலிருந்து...*

• • •

## ஊனமுற்ற பெண்களுக்கு உதவி

**செ**ன்னை தண்டையார்பேட்டை அஜீஸ் நகரைச் சேர்ந்த செல்வி சையத் அலி பாத்திமா, சிவாஜி நகரைச் சேர்ந்த செல்வி மரியம்மாள், புளியந்தோப்புப் பகுதியைச் சேர்ந்த செல்வி சரஸ்வதி ஆகிய உடல் ஊனமுற்ற இளம் பெண்கள், கடந்த 27.6.2001 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் தங்களுக்கு நல்லுதவி அளிக்குமாறு வேண்டி கோரிக்கை மனு அளித்தனர்.

கோரிக்கை மனு கொடுத்த இளம் பெண்களின் உடல் ஊனமுற்ற நிலை கண்ட, முதலமைச்சர் அவர்கள், இவர்களுக்கு ஏற்ற உதவியை செய்து தருமாறு, உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கான மாநில ஆணையருக்கு ஆணை பிறப்பித்தார்.



முதலமைச்சர் அவர்களது ஆணையை ஏற்று, தண்டையார்பேட்டை அஜீஸ் நகரைச் சேர்ந்த செல்வி சையத் அலி பாத்திமாவுக்கு சென்னை சஞ்சய் சைக்கிள் ஸ்டோர்ஸ் நிறுவனத்தில் தகவல் புள்ளி விவர தொகுப்பாளர் (Data Entry Operator) பணியும், சிவாஜி நகரைச் சேர்ந்த செல்வி ஜே.மாரியம்மாள் அவர்களுக்கு, சென்னை சிறிய மலர் காதுகேளாதோருக்கான கான்வென்ட் மேனிலைப்பள்ளியில் உதவியாளர் பணியும் வழங்கப்பட்டுள்ளது. சென்னை புளியந்தோப்பு பகுதியைச் சேர்ந்த செல்வி சரஸ்வதி கடும் ஊனமுற்ற நிலையில் இருந்ததால் அரசின் பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் அவருக்கு மாதந்தோறும் ரூ.150 வழங்க அனுமதித்து ஆணை வழங்கப்பட்டது.

முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள் 18.7.2001 அன்று தலைமைச் செயலகத்தில் செல்வி ஜே.மாரியம்மாள், செல்வி சையத் அலி பாத்திமா ஆகியோருக்கான பணி நியமன ஆணைகளையும் செல்வி சரஸ்வதி அவர்களுக்குக் கடும் ஊனமுற்றோருக்கான பராமரிப்பு உதவித்தொகை ஆணையையும் வழங்கினார்.

இவ்வுதவிகளைப் பெற்றுக் கொண்ட, செல்வி மரியம்மாள், செல்வி சையத் அலி பாத்திமா, செல்வி சரஸ்வதி ஆகியோர் முதலமைச்சர் அவர்களுக்குத் தங்களது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். ★

# ஊனமுற்ற பெண்ணுக்கு உதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 24.7.2001 அன்று தலைமைச் செயலகத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த உடல் ஊனமுற்ற செல்வி கே.இராஜேஸ்வரி என்னும் பெண்ணுக்குப் பணி நியமன ஆணையை வழங்கினார்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்,ஸ்ரீரங்கம் வட்டம் பெருகமணி கிராமத்தைச் சேர்ந்த கருப்பசாமி என்பவரது மகள் செல்வி இராஜேஸ்வரி, உடல் ஊனமுற்ற தனக்கு, வறுமையான தனது குடும்பச் சூழலை கருத்தில் கொண்டு, தகுந்த வேலைவாய்ப்பு வழங்க வேண்டுமெனக் கோரி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் 18.6.2001 அன்று நேரில் மனு கொடுத்தார்.

இவரது கோரிக்கையை பரிவுடன் பரிசீலனை செய்த முதலமைச்சர் அவர்கள், மனுதாரர் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதால் இவருக்கு அந்தப் பகுதியில் பணி தருவதே இவருக்கும் இவரது குடும்பத்திற்கும் உதவி செய்வதாக அமையும் எனக் கருதி , இம்மனு மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணையிட்டார்.

இதன்படி, செல்வி கே.இராஜேஸ்வரி, அடிப்படையில் உடல் உனமுற்றவர் என்பதைக் கருத்தில் கொண்டு, திருச்சி " அப்டார்ப்" (AFDORP) நிறுவனத்தின் மூலம் கொண்டையம்பேட்டை குடிசைத் தொழிலாளர் சிறப்புப் பள்ளி (Child Labour special school) யில் எழுத்தர் மற்றும் கணக்கர் பணியிடத்துக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.



முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள் 24.7.2001 அன்று தலைமைச் செயலகத்தில், இப்பணி நியமன ஆணையை, செல்வி கே.இராஜேஸ்வரி அவர்களிடம் வழங்கினார்.

பணி நியமன ஆணையைப் பெற்றுக் கொண்ட, செல்வி கே.இராஜேஸ்வரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, தனது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். •

# சவகர் சிறுவர் மன்றம்

ஐந்திலிருந்து 16 வயதுக்குட்பட்ட குழந்தை களிடையே மறைந்து கிடக்கும் ஆக்கபூர்வமான திறமைகளைக் கண்டுணர்ந்து அவற்றை மேம்படுத்தவும், வெளிப்படுத்தவும் வாய்ப் பளித்திட மைய அரசினால் தோற்றுவிக்கப் பட்ட "சவகர் சிறுவர் மன்றம்" எனும் திட்டம் தமிழ்நாட்டில் 1978இல் சென்னைத் தலைமையிடமாகக் கொண்டு ஆரம்பிக்கப் பட்டது. 1980இல் புதுக்கோட்டையிலும், 1984இல் மதுரையிலும் ஆரம்பித்து செயல்படுத்தப்பட்டது. தற்போது தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங் களிலும் சிறுவர் மன்றங்கள் தொடங்கப்பட்டு சிறப்பாகச் செயல்படுகின்றன.

தமிழ்நாட்டில் செயற்படும் சிறுவர் மன்றங்கள் வருமாறு :

| | | |
|---|---|---|
| மாநிலச் சிறுவர் மன்றம் | - | 1 |
| மண்டலச் சிறுவர் மன்றங்கள் | - | 6 |
| மாவட்டச் சிறுவர் மன்றங்கள் | - | 16 |
| விரிவாக்க மையங்கள் | - | 10 |
| ஊரக மையங்கள் | - | 2 |

### தமிழ்நாடு சிறுவர் மன்ற அமைப்பு முறை :

மாண்புமிகு கல்வி, தொழிற்கல்வி மற்றும் தமிழ் ஆட்சிமொழித் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் செயலர் அவர்களைத் துணைத் தலைவராகவும், கலைப் பண்பாட்டுத் துறைச் சிறப்பு ஆணையர் அவர்களைச் செயலர் மற்றும் பொருளாளராகவும் கொண்ட ஒரு குழு மாநில அமைப்பாகச் செயற்பட்டு வருகிறது. இக்குழு சென்னையில் இயங்கும் மாநில சிறுவர் மன்றம், விரிவாக்க மையங்களின் நிர்வாகத்தினை நேரடியாக மேற்கொள்கிறது. மாவட்டங்களில் இயங்கும் மாவட்ட சிறுவர் மன்றங்கள், விரிவாக்க மையங்கள், ஊரக மையங்கள் ஆகியவற்றிற்குத் திட்டங்கள், திட்ட ஒதுக்கீடு ஆகியவற்றை ஒப்புதல் அளித்து, அவற்றிற்கான நிதியை மாநில அரசிடமிருந்து பெற்று மாவட்டங்களுக்கு விடுவிக்கிறது.

மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், கலை பண்பாட்டுத் துறை மண்டல உதவி இயக்குநர்களை மதிப்புறு செயலர் மற்றும் பொருளாளராகவும் கொண்ட குழு அந்தந்த மாவட்ட சிறுவர் மன்றங்கள், விரிவாக்க மையங்கள், ஊரக மையங்களின் செயற்பாடுகளை வரையறுக்கின்றன. ஒவ்வொரு மாவட்ட சிறுவர் மன்றம்/ விரிவாக்க மையங்களில் நான்கு செயல்முறைகள் வீதம் பயிற்றுவிக்கப் படுகின்றன.

### சென்னை சவகர் சிறுவர் மன்றம் :

சென்னையில் இயங்கும் மாநிலச் சிறுவர் மன்றத்தில் 18 வகையான கலைகளில் நாள்தோறும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

பயிற்றுவிக்கும் கலைகளாவன

1. பரத நாட்டியம்
2. நாட்டுப்புற நடனம்
3. குரலிசை
4. நாடகம்
5. மிருதங்கம், தபேலா



6. கிட்டார்

7. ஆர்மோனியம் - கீபோர்டு

8. அயல்முரசு (டிரம்ஸ்)

9. அயல் முழவு (பேண்ட்ஸ்)

10. ஓவியம்

11. கைவினை

12. தையல்

13. ஜிம்னாஸ்டிக்ஸ்
(உடல்திறன் பயிற்சி கலை)

14. கராத்தே (தற்காப்புக்கலை)

15. கணினி

16. வீணை

இவை தவிர சிறுவர்களின் படிப்பாற்றலை மேம்படுத்திட சிறுவர் நூலகமும் இங்கு இயங்குகிறது.

ஒவ்வொரு கலையிலும் பயிற்சி பெறப் பதிவு செய்து கொண்ட மாணவர்கள் வருமாறு:-

| | | |
|---|---|---|
| பரதநாட்டியம் | - | 102 |
| நாட்டுப்புற நடனம் | - | 40 |
| குரலிசை | - | 67 |
| நாடகம் | - | 8 |
| மிருதங்கம், தபேலா | - | 5 |
| கிட்டார் | - | 5 |
| ஆர்மோனியம் - கீபோர்டு | - | 88 |
| அயல்முரசு (டிரம்ஸ்) | - | 51 |
| அயல் முழவு (பேண்ட்ஸ்) | - | 17 |
| ஓவியம் | - | 188 |
| கைவினை | - | 41 |
| தையல் | - | 27 |
| ஜிம்னாஸ்டிக்ஸ் (உடல்திறன் பயிற்சி கலை) | - | 136 |
| கராத்தே (தற்காப்புக்கலை) | - | 40 |
| கணினி | - | 77 |
| வீணை | - | 18 |
| மொத்தம் | - | 920 |

**திட்டங்கள் :**

**கோடைக்கால சிறப்புப் பயிற்சி**

ஆண்டுதோறும் கோடை விடுமுறையில், சிறுவர்கள் தங்களது விடுமுறை நாட்களைப்

பயனுறக் கழித்திடும் வகையில், கோடைக்கால சிறப்புப் பயிற்சி நடத்தப்படுகிறது. சிறுவர் மன்றத்தில் செயல்படும் அனைத்து வகைக் கலைகளிலும் காலை, மாலை இரு வேளையும் பயிற்சியளிக்கப்படுகிறது. இவ்வாண்டு சென்னையில் சிறுவர் மன்றம் தவிர இராமாபுரம் எம்.ஜி.ஆர். காதுகேளாதோர் வாய் பேசாதோர் பள்ளி, டாக்டர் எம்.ஜி.ஆர். ஜானகி பள்ளி சாலிகிராமம் ஆகிய இடங்களிலும் மையங் களைத் தோற்றுவித்து கோடைக்காலப் பயிற்சி யளிக்கப்பட்டது. 3,200 சிறுவர்கள் பயிற்சி பெற்றனர்.

மாவட்டங்களில் செயல்படும் அனைத்துச் சிறுவர் மன்றங்களிலும் இதுபோன்ற கோடைக் கால சிறப்புப் பயிற்சியளித்திட அரசு நிதியுதவி வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் ஒவ்வொரு மாவட்ட சிறுவர் மன்றத்தில் சராசரியாக 250 பேர் வீதம் என தமிழகம் முழுவதும் ஒட்டு மொத்தமாக

| | |
|---|---|
| 22 மாவட்ட சிறுவர் மன்றங்கள் | 250 - 5500 |
| 10 விரிவாக்க மையங்கள் | 250 - 2500 |
| ஊரகம் மையம் | 50 - 300 |
| சென்னை | 3200 |
| | 11,500 |

11,500 பேர் பயன் பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்கு மாவட்ட சிறுவர் மன்றங்களுக்கு ரூ.7,500 வீதமும், விரிவாக்க மையத்திற்கு ரூ.5,000 வீதமும், ஊரக மையத்திற்கு ரூ.3,000 வீதமும் செலவிடப் படுகிறது.

## கோடைக்கால மாரிக்கால முகாம்கள்

மேடைக்கலை, படைப்புக்கலை, அறிவியற் கலை, எழுத்துக்கலை என்பனவற்றில் சிறார்களுக்குச் சிறப்புப் பயிற்சியளித்திடவும் சிறார்களிடையே ஒருமைப்பாட்டுணர்வு, சகோதரத்துவத்தை ஏற்படுத்திடவும், வறிய நிலையிலுள்ள சிறாரும் பயன்பெற்றிடும் வகையில் கோடைக்காலத்தில் ஏதேனும் ஒரு மலைத்தளத்திலும், மாரிக்காலத்தில் ஏதேனும் ஒரு நகரிலும் முகாம்கள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு முகாமிலும் தமிழகத்தின் அனைத்துச் சிறுவர் மன்றங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டு 100 சிறுவர்களுக்கு இலவசமாக பயிற்சியளிக்கப்படுகிறது. 10 நாட்கள் நடைபெறும் இம்முகாம்கள் இவ்வாண்டு கோடையில் கொடைக்கானல் நகரில், சென்ற ஆண்டு அரையாண்டு விடுமுறையில் மதுரையிலும் நடத்தப்பட்டது. ஒவ்வொரு முகாமுக்கும் ரூ.1.20 இலட்சங்கள் அரசு நிதி ஒதுக்கியுள்ளது.

## கலைப்போட்டிகள்

குழந்தைகள் கலையார்வத்தை ஊக்கப் படுத்திட ஆண்டுதோறும் கலைப்போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஓவியம், நடனம், குரலிசை ஆகிய மூன்று கலைகளில் 5-8, 9-12, 13-16 என மூன்று வயது வகைகளில் மாவட்டங்கள்தோறும் மாவட்ட அளவிலான போட்டிகள் நடத்தப் பெறுகின்றன. முதல் மூன்று இடங்களை வென்றோருக்கு மாவட்ட அளவில் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப் படுகின்றன. 9-12, 13-16 வயது வகையில் முதல் பரிசு வென்ற



அனைத்து மாவட்டச் சிறாருக் கிடையே மாநில அளவிலான போட்டிகளும் நடத்தப்பெற்று வெற்றி பெற்றோருக்கு மாநில அளவிலான பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப் பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கு அரசு ரூ.2.10 இலட்சங்கள் நிதி ஒதுக்கியுள்ளது.

### கலைப்பரிமாற்றம்

தமிழகக் கலைகளைப் பிற மாநிலச் சிறாரும், பிற மாநிலக் கலைகளைத் தமிழகச் சிறாரும், அறிந்து பயன்பெறும் பொருட்டு கலைப் பரிமாற்றம் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. கடந்த ஆண்டு தமிழகச் சிறார்கள் 20 பேர் குஜராத் மாநிலத்திற்கும், மணிப்பூர் சிறுவர் மன்றச் சிறார்கள் 18 பேர் தமிழகத்திற்கும் வருகை தந்து தங்கள் கலைத் திறமைகளை வெளிப்படுத்தினர்.

### அரங்கேற்றம்

சிறுவர் மன்றத்தில் பயிற்சி பெற்று அரங் கேற்றம் செய்திட வசதியற்ற வறிய நிலை யிலுள்ளச் சிறார்களுக்கு அரசின் செலவிலேயே அரங்கேற்றம் செய்திடும் திட்டமும் தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்தால் செயற்படுத்தப் படுகிறது. இவ்வாண்டு புதுக்கோட்டை சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த 3 சிறார்களுக்கு அரங்கேற்றம் நடத்தப்பட்டது. இத்திட்டத்திற்கு அரசு ரூ.0.25 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

### குழந்தைகள் நூலகம்

தமிழகத்தில் செயல்படும் அனைத்துச் சிறுவர் மன்றங்களிலும் தற்போது குழந்தைகள் நூலகம் அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென அரசு பகுதி இரண்டு திட்டத்தில் ரூ.10,000 வீதம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளது. இதனால் குழந்தைகளின் படிக்கும் ஆர்வத்தை ஊக்குவித்திட இயலும்.



### ஆண்டுத் திட்டங்கள்

ஒவ்வொரு சிறுவர் மன்றத்திலும் மாதந் தோறும் சிறப்புத் திட்டங்கள் செயற்படுத்திட தமிழ்நாடு அரசு ஆணையிட்டு அதற்கென நிதி ஒதுக்கீடும் செய்துள்ளது. அதன்படி மாவட்டங் களில் செயல்படுத்தி வரும் திட்டங்கள் வருமாறு:



| | |
|---|---|
| ஏப்ரல், மே | - கோடைக்கால பயிற்சி முகாம் |
| சூன், சூலை | - கூட்டுப்பாடல், இலக்கியக் கூட்டம், வினாடிவினா, அறிவியல்செயல்முறை |
| ஆகஸ்ட் | - விடுதலை நாள் விழா, கோலப்போட்டி, கலை வல்லுநருடன் சந்திப்பு |
| செப்டம்பர், அக்டோபர் | - ஓவியம், கைவினைக் கண்காட்சி |
| நவம்பர் | - குழந்தைகள் கலைப் போட்டிகள் |
| டிசம்பர் | - கலைத் தொழிற் பட்டறை |
| சனவரி | - கலைப் பரிமாற்றம், குழந்தைகளிடையே கலை நிகழ்ச்சிகள் |
| பிப்ரவரி | - ஆண்டுவிழா - சான்றளிப்பு விழா |

இதே போன்று சென்னை சிறுவர் மன்றத்தில் மேற்காணும் திட்டங்களுடன் ஒவ்வொரு செயல்முறைக்கும் தனித்தனியாகத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்கென அரசு ஒட்டுமொத்தமாக ரூ.4 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.

**ஓவியக் கைவினைக் கண்காட்சி**

சிறார்களின் ஓவியக் கைவினைப் பொருட்கள், சிறுவர் மன்றத்தின் சார்பாக நிகழ்த்தப்பெறும் விழாக்களின் போது பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்படுகிறது. கடந்த இரு ஆண்டுகளில் புதுதில்லியில் நடைபெறும் தேசியக் குழந்தைகள் முகாமின் போதும் கண்காட்சியாக வைக்கப்பட்டு விற்பனையும் செய்யப்பட்டன.

**உடல்திறன் பயிற்சி**

சென்னையில் இயங்கும் சிறுவர் மன்றத்தில் உடல்திறன் கலை மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாநில அளவிலான ஜிம்னாஸ்டிக் போட்டிகளில் சென்னை சிறுவர் மன்ற மாணவர்களே வெற்றி பெற்று வருகின்றனர். தேசிய அளவில் கடந்த ஆண்டு கோழிக்கோடு, இராமகுண்டம், கொல்கத்தா, ஜல்பாய்குரி, ஜோத்பூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற போட்டிகளில் சிறுவர் மன்றச் சிறார்கள் பங்கு கொண்டுள்ளனர்.

**பயிற்சிப் பொருட்கள்**

அனைத்துச் சிறுவர் மன்றங்களில் பயிற்சி பெறும் சிறார்களின்பயிற்சிக்காக தமிழ்நாடு அரசு பயிற்சிப்பொருட்கள் வாங்கி

அனுமதித்து, நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதன்படி தவில், நாதசுவரம், மிருதங்கம், தபேலா, ஆர்மோனியம், கீபோர்டு, வீணை, டேப்ரிக்கார்டர், நடனத் திற்கான சலங்கைகள், ஓவியக் கைவினைப் பொருட்கள், தையல் இயந்திரங்கள், கணினி ஆகியவை வாங்கப்பட்டு தற்போது மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

இவ்வாண்டு தமிழ்நாட்டில் செயல்படும் 20 சிறுவர் மன்றங்களில் பயிற்சிப் பொருட்கள் வாங்கிட தேசிய சிறுவர் மன்றம் ரூ.5 இலட்சம் நல்கை வழங்கியுள்ளது.

**கணினி மையம்**

சென்னை சிறுவர் மன்றத்தில் கணினி மையம் அமைத்திட புதுதில்லி தேசிய சிறுவர் மன்றம் 1997-1998ஆம் ஆண்டு ரூ.50,000 நல்கை வழங்கியது. அதைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசும் ரூ.2.10 இலட்சங்கள் நல்கை வழங்கியது. இன்றைக்கு 5 கணினி இயந்திரங்கள் சிறுவர்களுக்காக பயன் படுத்தப்பட்டு வருகிறது.

மதுரையில் இயங்கும் சிறுவர் மன்றத்தில் கணினி மையம் அமைக்க தேசிய சிறுவர் மன்றம் ரூ.3 இலட்சம் விடுவித்துள்ளது. அதன்பேரில் மதுரை சிறுவர் மன்றத்திலும் கணினி மையம் அமைந்துள்ளது. மேலும் தஞ்சாவூர், சேலம், சிறுவர் மன்றங்களில் ரூ.5 இலட்சங்களிலும் சென்னை விரிவாக்க மையத்தில் ரூ.1 இலட்சம் மதிப்பிலும் புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தின் நல்கையில் கணினி மையங்கள் அமைய விருக்கின்றன.

**புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்துடன் இணைந்த திட்டங்கள்**

சென்னை, மதுரை, புதுக்கோட்டை ஆகிய மூன்று சிறுவர் மன்றங்கள் மட்டுமே தேசிய சிறுவர் மன்றத்துடன் இணைவு பெற்றிருந்தன. தேசிய சிறுவர் மன்றத்தின் ஒருங்கிணைந்த திட்டங்களான தொழிற்பட்டறை முகாம், இளந்திரு விருது தெரிவு முகாம், தேசிய குழந்தைகள் முகாம், சுற்றுப்புறச்சூழல் விழிப்புணர்ச்சி முகாம் போன்றத் திட்டங்களில் இணைவு பெற்றுள்ள மேற்கண்ட மூன்று சிறுவர் மன்றங்களைச் சேர்ந்த சிறார்கள் பங்கு கொண்டுள்ளனர். சமீபத்தில் காஞ்சிபுரம், சேலம், திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய மண்டல சிறுவர் மன்றங்களுக்குத் தேசிய சிறுவர் மன்றம் இணைவு வழங்கியுள்ளது.

**தென் மண்டல இளந்திரு தெரிவு முகாம்**

இளந்திரு விருதுத் தெரிவுக்கான தென் மண்டல முகாம் சென்னையில் நடத்தப்பட்டது. தென் மண்டலத்தில் தான் அதிகமான சிறுவர் மன்றங்கள் உள்ளன. அவ்வகையில் சென்னையில் நடத்தப்பட்ட முகாமில் 166 சிறுவர்கள் கலந்து கொண்டனர். தென் மண்டல அளவிலான போட்டியில் தமிழகத்திலிருந்து மட்டும் 10 சிறுவர்கள் நால்வகைக் கலைகளிலும் வெற்றி பெற்று, புதுதில்லியில் நடைபெற்ற தேசிய முகாமில் கலந்து கொண்டனர். இவர்களில் சென்னையைச் சேர்ந்த ரேவ்தி எழுத்துக் கலைக்காகவும், தூத்துக்குடியைச் சேர்ந்த மாணவன் சபரிநாத் குரலிசைக் கலைக்காகவும் இளந்திரு விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டு உள்ளார்கள்.

**உலகக் குழந்தைகள் விழா**

2000-2001ஆம் ஆண்டில் உலகக் குழந்தைகள் விழா மங்கோலிய நாட்டில் நடைபெற்றது. தேசிய சிறுவர் மன்றம் வாய்ப்பு அளித்தமையின் பேரில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இரு சிறுவர்கள் இந்த விழாவில் கலந்து கொண்டு தமிழகக் கலைகளான கரகம், காவடி, சிலம்பம் ஆகியக் கலைகளைச் செய்து திரும்பினர். இவ்வாண்டு கிர்கிஸ்த்தான் ஆகிய நாடுகளில் நடைபெறும் உலகக் குழந்தைகள் விழாவில் தமிழ்நாட்டுச் சிறுவர்கள் கலந்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**சிறப்புச் சிறுவர் மன்றங்கள்**

தஞ்சாவூர் மாவட்டம் குருங்குளம் எனும் கிராமத்தில் சவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மையம் தொடங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

ஊனமுற்ற சிறாருக்கெனத் தனியாக சென்னையிலுள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். காதுகேளாதோர் வாய்பேசாதோர் பள்ளியில் சிறுவர் மன்ற விரிவாக்க மையம் தொடங்கப் பட்டுச் செயல்பட்டு வருகிறது. ●

□ இர. பிரபாகரன்,
துணைவேந்தர்,
தமிழ்நாடு கால்நடை மருத்துவ
அறிவியல் பல்கலைக்கழகம்,
சென்னை – 51.

# கால்நடை உற்பத்திப் பொருட்களின் விற்பனை

உலக அளவில் பல்வேறு நாடுகளிலும் பொருளாதாரச் சீரமைப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றின் அங்கமாக, கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வண்ணம் செயல் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. இந்தியாவைப் பொறுத்த மட்டில் நெடுங்காலமாய்க் கிராமப்புற மக்களின் வாழ்க்கை முறையும், பொருளாதாரமும் வேளாண்மைத் தொழிலையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. பெருகிவிட்ட மக்கள் தொகை மற்றும் நகர்ப்புற வளர்ச்சி காரணமாக விவசாய நிலப்பரப்பு பங்கீடு செய்யப்பட்டு விட்டது. சுற்றுச்சூழல் மாறுபாடுகளினால் நிரந்தரமற்றுப்போன பருவ மாறுதல்களும் வேளாண்மைத் தொழில் மூலமான வருமானத்தை மட்டுமே அடிப்படையாய்க் கொண்ட கிராமப்புற பொருளாதாரத்தைப் பெரிதும் பாதிப்பில் ஆழ்த்துகின்றன. கிராமப்புற இந்தியப் பொருளாதாரம் மேம்பாட்டைய கால்நடைகளுடன் இணைந்த கலப்புப் பண்ணைய முறைகளை நாடவேண்டிய அவசிய மேற்பட்டுள்ளது. இந்தியக் கிராமங்களில் வசிக்கும் 74 சதவிகித மக்களின் வருமானத்தில் 15 முதல் 40 சதவிகிதம் கால்நடைகள் மூலமானதாகவே உள்ளது. இதன் காரணமாக கடந்த ஆண்டுகளில் இந்திய வேளாண் தொழில் மூலமான வருவாயில் கால்நடை உற்பத்திப் பொருட்களின் மதிப்பு 17 சதவிகிதத்திலிருந்து தற்போது சுமார் 30 சதவிகிதத்தை எட்டிவிடும் அளவிற்கு உயர்ந்துள்ளது. உலக நாடுகளின் பால் உற்பத்தியில் முதலிடம் பெறும் நிலைக்கு உயர்ந்துள்ள நம் நாட்டில் கோழிப்பண்ணைத் தொழில் வளர்ச்சி பிற கனரகத் தொழில்களின் வளர்ச்சி வேகத்தை விடவும் கூடுதலாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆனாலும், கால்நடைகளின் உற்பத்தியில் காணப்படும் இத்தகைய வளர்ச்சி இனிவரும் காலங்களிலும் நிலைப்படுத்தப்பட வேண்டுமெனில் கால்நடை உற்பத்திப் பொருட்களின் விற்பனை முறைகளைச் சீரமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். விற்பனை வழிவகைகள் சிறப்பாக அமையாவிடில், தொழில் வருவாய் குறைந்து உற்பத்தியும் குறைந்துவிடும். சிறந்த விற்பனை



மேலாண்மை மூலம் தேவையைப் பெருக்கி, உற்பத்தி பெருகவும் வழிவகுக்கலாம். திறமையான விற்பனையின் மூலம், உற்பத்தியாளருக்கு மிகச் சிறந்த விலையையும் நுகர்வோருக்கு அவருக்கு ஏற்ற வாய்ப்பான இடத்தில் மிகக் குறைந்த விலையில் உற்பத்திப் பொருட்கள் கிடைக்கும் வசதியையும் அமைத்துக் கொடுக்கலாம்.



### கால்நடைச் சந்தைகள்

வேளாண்மைத் துறையைப் பொறுத்தமட்டில், வேளாண் பொருட்களின் விற்பனைக்கேற்ற தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் – முறைப்படுத்தப்பட்ட சந்தை அமைப்புகள், கொள்முதல் மையங்கள், தரப்பகுப்பு, தர நிர்ணய முறைகள், சேமிப்புக் கிடங்குகள், பதனிடும் கூடங்கள் ஆகியவை உருவாக்கப்பட்டு கூடுதலான உற்பத்தி அல்லது தேவைக்கேற்ப விற்பனையைக் கையாளும் வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால், கால்நடை உற்பத்திப் பொருட்கள் விற்பனைக்கென இத்தகைய விரிவான கட்டமைப்பு வசதிகள் இதுகாறும் உருவாக்கப்படவில்லை. அரியானா, பஞ்சாப், இராஜஸ்தான் ஆகிய சில மாநிலங்களில் மட்டும் அரசு மூலமான முறைப்படுத்தப்பட்ட கால்நடைச் சந்தைகள் நடத்தப்பெறுகின்றன. குறிப்பிட்ட சில ஊர்களில் நடத்தப்படும் கால்நடைச் சந்தைகள் அப்பகுதி மக்களிடையே கால்நடை விற்பனைக்கு உதவுகின்றன. பண்டிகை நாட்களை ஒட்டியும் சில பகுதிகளில் கால்நடைச் சந்தைகளுக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. இச்சந்தைகளில் இடைத்தரகர்கள் மூலமாக விற்பனை சங்கேத முறைகளில் நடத்தப்படுகிறது.

அரியானா மாநில மாட்டுக் காட்சி சட்டத்தின்படி (Haryana Act 30,1970) அம்மாநிலத்தில் 1970ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் 65 மாட்டுச் சந்தைகளுக்கு மேல் ஏற்பாடு செய்யப்படுகிறது. விற்பனை நடைமுறைகளை நிர்ணயிக்கும் உரிமையை இச்சட்டம் அரசுக்கு வழங்கியுள்ளது. இராஜஸ்தான் மாநிலம் ஆண்டுக்கு 12 மாட்டுச் சந்தைகளுக்கு ஏற்பாடு செய்து வருகிறது. சில நாட்கள் முதல் ஒரு மாதம் வரை இச்சந்தைகள் கூடுகின்றன. ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்ட மாட்டுச் சந்தைகளில் எட்டு வகையான விற்பனைத் தடங்கள் அறியப்பட்டுள்ளன. தமிழகத்தில் மாடு மற்றும் ஆடு விற்பனைச் சந்தைகள் குறிப்பிட்ட ஊர்களில் நடத்தப்படுகின்றன. சந்தைகளுக்குக் கால்நடைகள் நடைப்பயணமாகவும், வேன் அல்லது லாரிகளிலும் எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் அரசு மூலமாக கால்நடைச் சந்தைகளை நடத்தி முறைப்படுத்தப்பட்ட விற்பனையை ஊக்குவித்து, இடைத்தரகர்களின் பங்கைக் குறைத்து விற்பனை செய்யப்படும். கால்நடைகளின் தரத்திற்கும் சான்றிதழ்கள் வழங்கி கால்நடைகளை வாங்குவோர் அளிக்கும் விலைக்கு ஏற்ற கால்நடைகளை வாங்க வழிவகுக்கலாம்.

### பால் மற்றும் பால் பொருட்கள்

இந்தியாவில் ஆண்டு பால் உற்பத்தி 78 மில்லியன் டன்களாக உள்ளது. கால்நடைகளின் மூலமான மொத்த உற்பத்தி மதிப்பில் பால் பொருட்கள் மதிப்பு மட்டும் 65 சதவிகிதமாகும். இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பால் உற்பத்தியில் நான்கில் மூன்று பங்கு, வீடுகளில் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. எஞ்சிய பாலில் 9 முதல் 11 சதவிகிதம் நாடு முழுவதும் உள்ள 275 குளிரூட்டும் நிலையங்களிலும், 83 பால் பொருள் பதனிடும் தொழிற்சாலைகளிலும் கையாளப்படுகிறது. இதில் அரசு, கூட்டுறவு மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்காற்றுகின்றன.

இந்தியாவில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமான பால் உற்பத்தி மற்றும் விற்பனை முயற்சி நல்ல பலனை அளித்து 'வெண்மைப் புரட்சி'க்கு வித்திட்டாலும், இம்முயற்சி அனைத்து மாநிலங்களிலும் சிறப்பான வெற்றியைப் பெற்றிருப்பதாகக் கூற இயலாது. மேலும், அண்மைக் காலத்தில் தனியார் நிறுவனங்கள் மூலமான பால் விற்பனையின் பங்கு அதிகரித்து வருகிறது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பாலில் சுமார் 45 சதவிகிதம் பாலாகவே உட்கொள்ளப்படுகிறது. மேலும், 35 சதவிகிதம் வெண்ணெய் அல்லது நெய்யாக மாற்றப்படுகிறது. எஞ்சிய பால் மட்டுமே பன்னீர், பாலாடைக் கட்டி, பால் பவுடர் மற்றும் பிற பால் பொருள்கள் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது. பால் மற்றும் பால் பொருட்களை வாங்கி உட்கொள்ளும் அளவு மக்களின் வருமானம் மற்றும் கல்வி அறிவிற்கேற்ப வேறுபடுகிறது. இந்தியாவில் இவை இரண்டின் அளவுகளும் அதிகரித்து வருவதால் பால் மற்றும் பால் பொருட்களுக்கான

தேவையும் அதிகரிக்க சிறந்த வாய்ப்புகள் உள்ளன. பால் உற்பத்தியாளர்கள் பாலுக்குப் பெறும் விலையை விட, மதிப்பூட்டிய பால் பொருட்களுக்குக் கிடைக்கும் விலை சில மடங்கு கூடுதலாக இருப்பதால், அவர்கள் பாலை பால் பொருட்களாக மாற்றி, அவற்றின் விற்பனையை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளிலும் இறங்கவேண்டும்.

### இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருட்கள்

இந்தியாவில் இறைச்சி உற்பத்தித் தொழில் இன்னும் தனிப்பட்ட தொழிலாக உருவாகவில்லை. பால், இழுவை மற்றும் எரு உற்பத்திக்காகப் பயன்படும் கால்நடைகளிலிருந்து உபபொருளாகவே இறைச்சி கிடைக்கிறது. கால்நடைகளிலிருந்து கிடைக்கும் வருவாயில், 16 சதவிகிதம் இறைச்சிப் பொருள்கள் மூலம் கிடைக்கிறது. எருமை, வெள்ளாடு மற்றும் இறைச்சிக் கோழிகள் ஆகியனவே இந்தியாவில் பிரதான இறைச்சி வகை விலங்குகளாக உள்ளன. கடந்த 1996ஆம் ஆண்டு இந்தியாவில் மொத்த இறைச்சி உற்பத்தி 3.46 மில்லியன் டன்களாக இருந்தது. இதில் 1.27 மில்லியன் டன் மாட்டிறைச்சி, 0.64 மி.டன் ஆட்டிறைச்சி, 1.18 மி.டன் எருமை இறைச்சி மற்றும் 0.37 மி.டன் பன்றி இறைச்சி அடங்கும். இவற்றில் ஆட்டிறைச்சியும், பன்றி இறைச்சியும் உள்நாட்டுத் தேவைகளுக்கு ஏற்ற அளவுகளிலேயே உள்ளன. எருமை மாட்டிறைச்சி மட்டுமே ஏற்றுமதி அளவுக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில் 3,000 இறைச்சிக் கூடங்களும், 10 நவீன இறைச்சி உற்பத்திக் கூடங்களும், 160 இறைச்சி பதனிடும் தொழிற் சாலைகளும் உள்ளன. என்றாலும், அங்கீகரிக்கப்பட்ட இறைச்சிக் கூடங்களில் வெட்டப்படும் இறைச்சியை விட நான்கு மடங்கு வெளிப்பகுதிகளில் வெட்டப்படுகிறது. இதனால் சுகாதாரமான இறைச்சித் தயாரிப்பு பாதிக்கப்படுகிறது. மேலும், குளிர்பதனம் செய்யப்பட்ட இறைச்சிக்கு இந்தியச் சந்தையில் விற்பனை வாய்ப்பு மிகக் குறைவாகவே உள்ளது. இதனாலும் நவீன இறைச்சிக் கூடங்கள் தனியார் மூலம் துவங்கப்படுவதில் சுணக்கம் காணப்படுகிறது. சுகாதாரமான முறையில், நோய் பாதிப்பற்ற சூழ்நிலையில் இறைச்சி வகைக் கால்நடைகளின் உற்பத்தியை மேற்கொண்டு, இறைச்சித் தொழிலில் முதலீட்டையும் அதிகரித்தால் இறைச்சிக் கான ஏற்றுமதி வாய்ப்புகளைத் திறம்படப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

### கோழி மற்றும் கோழியின உற்பத்திப் பொருட்கள்

இந்தியாவில் கோழிப்பண்ணைத் தொழில் வளர்ச்சி மிகச் சிறப்பான அளவில் உள்ளது. உலகில் உள்ள நவீன தொழில்நுட்பங்கள் இந்திய கோழிப் பண்ணைத் தொழிலிலும் வேகமாக ஈர்க்கப்பட்டு வருகின்றன. நம் நாட்டில் சுமார் ஏழு மில்லியன் நபர்கள் நேரடியாகவும், நான்கு மில்லியன் நபர்கள் மறைமுகமாகவும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஆண்டுதோறும் சுமார் 3,300 கோடி முட்டைகளும், ஒன்பது இலட்சம் டன் இறைச்சியும் உற்பத்தி செய்யப்படுகின்றன என்றாலும், முட்டை மற்றும் கோழி இறைச்சி உட்கொள்ளும் சராசரி தனி நபர் அளவுகள் பிற உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகக்குறைந்த அளவுகளிலேயே உள்ளன.

முட்டை விற்பனை முறைகள் ஓரளவுக்குச் சீரமைக்கப்பட்டு விட்டன. இறைச்சிக் கோழி விற்பனையில் காலமாறுபாடுகளின் தாக்கம் பெரிதும் காணப்படுகிறது. பதனிடப்படாத இறைச்சியையே விரும்பும் மக்களின் வழக்கம், இணையான பிற இறைச்சி வகைப் பொருட்கள் குறிப்பாக மீன் கிடைப்பு அளவு மற்றும் விற்பனை விலை மற்றும் எளிதில் கெட்டுவிடும் பொருளாக இருப்பது ஆகியவை கோழி விற்பனையைப் பாதிக்கும் அம்சங்களாக உள்ளன.

என்றாலும், உடனடி உணவகங்களுக்குக் கிடைக்கும் வரவேற்பு இறைச்சி விற்பனையை அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. மக்களின் மனோபாவத்தை மாற்றிடும் வகையிலான விளம்பர உத்திகள், முட்டை மற்றும் இறைச்சிக்கான நவீன மொத்த குளிர்பதனக் கூடங்கள் அமைத்தலுக்கான முதலீட்டு வசதிகளைச் செய்தல், மதிப்பூட்டப்பட்ட முட்டை மற்றும் இறைச்சி வகைகளைத் தயாரித்து விற்பனை செய்தல், மேலும், முறைப்படுத்தப்பட்ட விற்பனைக்கு வழிவகுக்கும் பிற கட்டமைப்பு வசதிகளையும் தனியார் மற்றும் அரசு உதவியுடன் உருவாக்குதல், சுகாதார முறையில் பன்னாட்டுத் தேவைகளுக்கேற்ற உற்பத்தித் தொழில்நுட்பத்தைக் கையாண்டு ஏற்றுமதி வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளுதல் ஆகிய முயற்சிகள் மூலம் கோழியினப் பொருட்களுக்கான விற்பனை வாய்ப்புகளைப் பலமடங்கு பெருக்க இயலும்.

### கால்நடை உபபொருட்கள்

நம்நாட்டில் இறைச்சிக்கூடக் கழிவுகளை முறையாகப் பயன்படுத்திக் கொள்ளாததால் பல கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. குறிப்பாக உண்ண இயலாத



## தகவல் அளித்தமைக்காக வீரப்பனால் கொலை செய்யப்பட்ட குடும்பத்திற்கு நிதிஉதவி மற்றும் வேலைவாய்ப்பு

சமூக விரோதியாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடித்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால், சிறப்பு அதிரடிப்படைத் தலைவராக திரு. வால்டர் தேவாரம் அவர்களும், அதிரடிப்படை கமாண்டன்ட் ஆக திரு.விஜயகுமார், இ.கா.ப., அவர்களும் நியமிக்கப்பட்டு, தேடுதல் வேட்டை தீவிரமாக நடைபெற்று வருகிறது.

சந்தனக் கடத்தல் வீரப்பன் கூட்டத்திற்கும் அதிரடிப்படைக்கும் இடையே நடந்த மோதலில் முன்னர் படுகாயமடைந்த ஈரோடு மாவட்டம் நெய்தல்புரம் பஞ்சாயத்து கோடம்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த தனஞ்செயன் மகன் குனீரன் (வயது 35) என்பவருக்கு நிதியுதவி அளித்திடலாம் எனவும், வீரப்பன் குறித்து தகவல் அளித்தமைக் காக ஈரோடு மாவட்டம் குடியாலத்தூர் பஞ்சாயத்து, சிக்கூர் கிராமத்தில் தனது 12 வயது மகனுடன் சேர்த்து கொலை செய்யப்பட்ட சேக்கனன் என்பவரது தற்போது உயிரோடு இருக்கும் மகன் சிவா (வயது 20) என்பவருக்கு வேலைவாய்ப்பு அளித்திடலாம் என்பதையும் சிறப்பு அதிரடிப்படையின் தலைவர் திரு.வால்டேர் தேவாரம் அவர்கள் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.



இதனை பரிவுடன் ஆய்வு செய்த முதலமைச்சர் அவர்கள் கோடம்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த குனீரன் அவர்களுக்கு கருணை அடிப்படையில் ரூ.50,000 நிதியுதவியும், சிக்கூர் கிராமத்தைச் சேர்ந்த சேக்கனன் மகன் சிவா (வயது 20) அவர்களுக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு வனத்துறையில் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் கோட்டத்தில், தோட்டக் காவலாளியாக பணி நியமனம் வழங்கியும் ஆணை பிறப்பித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 7–7–2001 அன்று தலைமைச் செயலகத்தில் கோடம்பள்ளி குனீரனிடம் ரூபாய் 50,000–த்திற்கான காசோலையையும், மறைந்த சிக்கூர் சேக்கனனின் மகன் சிவாவிடம் வனத்துறைத் தோட்டக் காவலாளி பணிக்கான நியமன ஆணையையும் வழங்கினார்கள்.

இவ்வுதவிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட திரு.குனீரன், திரு.சிவா இருவரும் தங்களது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். □

உபபொருட்கள் பெரும்பாலும் வீணடிக்கப்படுகின்றன. கால்நடை இறைச்சிக் கூடக் கழிவுகளிலிருந்து எலும்புத் தூள் மற்றும் சாம்பல், ஜெலாட்டின், ஆசின், தீயணைப்பு நுரை, இறைச்சிக் குழலுறை, மருந்துப் பொருட்கள், வர்ணப் பூச்சான், துடைப்பான், மெழுகு, கொழுப்பு, அறுவைச் சிகிச்சை நாண்கள், விளையாட்டுப் பொருட்களுக்கான நாண்கள், இருக்கை நார் போன்ற பல்வேறு உபபொருட்களைத் தயாரிக்கலாம். இறைச்சிக் கூடங்களில் வெட்டப்படும் இறைச்சி விலங்குகளில் 53 சதவிகிதம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. வீணடிக்கப்படும் கழிவுகள் மூலம் ஆண்டுதோறும் சுமார் 26 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. ஒருங்கிணைக்கப்பட்ட நவீன இறைச்சிக் கூடங்களை அமைத்து இத்தகைய கழிவுகளிலிருந்து பயனுள்ள உபபொருட்களைத் தயாரிக்கலாம்.

### மீன் மற்றும் மீன் பொருட்கள்

மீன் மற்றும் மீன்பொருட்கள் விற்பனை பெரிதும் மீன்பிடிப்புப் பகுதிகளை ஒட்டியே நடைபெறுகிறது. பால்வளப் பெருக்க முயற்சிகளைப் போன்று, கூட்டுறவு முறையில் மீன்களையும் கொள்முதல் செய்து குளிர்பதனப் போக்குவரத்து வசதி மூலம் விற்பனை வாய்ப்பு மிகுந்த நகர்ப்பகுதிகளுக்குக் கொண்டு செல்வதன் மூலம் கூடுதல் வருவாய் பெற வாய்ப்புள்ளது. மதிப்பூட்டப்பட்ட மீன் பொருட்களை உற்பத்தி செய்தும் இலாப விகிதத்தை அதிகரிக்கலாம்.

### கால்நடை உற்பத்திப் பொருட்களுக்கான விற்பனை விலை

கால முன்னேற்றத்திற்கேற்ற விலை நிர்ணயம் என்ற கோட்பாடு கால்நடை உற்பத்திப் பொருள்களைப் பொறுத்தமட்டில் செயல்படுவதில்லை. பருவ மாறுதல், நுகர்வோர் மனப்போக்கு, மதக்கோட்பாடுகள் எனப் பல காரணிகளால் இவற்றின் விற்பனை விலை பாதிக்கப்படுகிறது. ஆனால், இடுபொருட்கள் குறிப்பாக தீவன மூலப் பொருட்களின் விலையில் அக்கோட்பாடு அடிப்படையில் விலை உயர்வு காணப்படுகிறது. இதன் காரணமாக

## பட்டுப்பூச்சி (Silkworm)

பட்டுப்பூச்சி சுமார் 3½ சென்டி மீட்டர் நீளம் இருக்கும். இதன் நிறம் வெண்மையானது. கூடுகளிலிருந்து வெளிவரும் பட்டுப்பூச்சிகள் முட்டையிட்ட மூன்று அல்லது நான்கு நாள்களில் இறந்துவிடும்.

பட்டுப்பூச்சி சுமார் 200 முதல் 500 முட்டைகள் இடும். முட்டை மஞ்சள் நிறமாக இருக்கும். முசுக்கட்டை இலைகளில் இது முட்டையிடும். முட்டையிலிருந்து வெளிவரும் புழுக்கள் பழுப்பு நிறமுள்ளவை. கம்பளிப்பூச்சி போன்ற இப் புழுக்களைப் பரந்த தட்டுகளில் வைத்து முசுக்கட்டை இலைகளை அரிந்து போடுகிறார்கள். இவை முசுக்கட்டை இலைகளை நிறையத் தின்று ஐந்து வாரம் வரை வளரும்.

முழுவதும் வளர்ச்சியடைந்த புழு சுமார் 7½ சென்டிமீட்டர் நீளமிருக்கும். இதை வளர்ப்பவர்கள இக்காலத்திலே அறை அறையாக இருக்கும் தட்டுகளில் ஒவ்வொரு புழுவாக இட்டு, கூடுகட்ட ஆதாரம் தருவர்.

பட்டுப் புழுவின் இருபக்கங் களிலும் பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு சுரப்பிகள் உள்ளன. இவற்றிலிருந்து பிசின்போன்ற திரவம் வெளிவரும். சுரப்பிகளுக் குரிய நாளங்களின் முனை களும் ஒன்றுசேர்ந்து புழுவின் கீழ் உதட்டி லிருக்கும் ஒரு துளை (Spineret) வழியாக வெளியே திறக்கும். இதன் வழியாக வெளியே வரும் பிசின் காற்றில் பட்டதும் இழையாகக் கெட்டியாகிப் பட்டு நூலாகிறது.



பட்டுப்புழு தலையை முன்னும் பின்னும் அசைத்துப் பட்டு இழைகளினால் கூடுகட்டுகிறது. இரண்டு மூன்று வாரம் கூட்டினுள் இருந்தபின், கூட்டின் முனையைத் தன் உடலிலிருந்து வரும் நீர்ப்பொருளால் நனைத்து, பட்டுப் பூச்சி வெளி வருகிறது. இதனால் கூடாக இருக்கும் பட்டு இழைகள் துண்டு துண்டாக அறுந்துவிடும். எனவே முட்டையிடுவ தற்குத் தேவையான அளவுக்கு மட்டும்தான் பட்டுப்பூச்சி வெளிவர விடுவார்கள். மற்ற கூடுகளைக் கொதிக்கும் நீரில் இட்டு, பூச்சி இறந்த பின் கூடுகளிலிருந்து பட்டு எடுக்கிறார்கள்.

• • •

உற்பத்தி விலை அதிகரித்தாலும், கால்நடை உற்பத்திப் பொருள்களின் விற்பனை விலை சீரான மேம்பாடு அடையாமல் தேக்கம் ஏற்பட்டு கால்நடை உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிப்படையும் நிலை காணப்படுகிறது.

கறவை மாடுகளின் விற்பனையில் இடைத்தரகர்களே பெரிதும் பயன்பெற்று வருகின்றனர். அரசு சார்பான விற்பனை விழாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, மாடுகளின் ஒட்டுமொத்தத் தரம் குறித்த சான்றிதழ் வழங்கும் முறை அமல்படுத்தப்பட்டால், கால்நடை வளர்ப்போர் உரிய விலை பெற வழிவகுக்கலாம்.

பால் விற்பனையில் கொழுப்பு அளவுக்கு அதிக மதிப்பு கொடுக்கப்படுவதால், எருமைப்பாலுக்கே கூடுதல் விலை கிடைக்கிறது. கலப்பின மாடுகள் மூலம் அபரிமிதமாக உற்பத்தி செய்யப்படும் குறைந்த அளவு கொழுப்பு கொண்ட பால் குறைந்த விலையே பெறுகிறது. இத்தகைய பாதிப்புகளைத் தவிர்க்க, மாட்டுப் பால் கொண்டு மதிப்பூட்டப்பட்ட பால் பொருள்களை உற்பத்தி செய்து இத்தகைய தேக்கங்களைத் தவிர்த்து அதிக விற்பனை விலை பெற பால் உற்பத்தியாளர்கள் முயற்சி செய்யவேண்டும்.

முட்டை விற்பனை விலையும் பெரிதும் மாறுபடும் ஒன்றாகவே உள்ளது. தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுக்கள் (NECC) மூலம் வட்டார முட்டை விலை நிர்ணயம் செய்யப்பட்டாலும், இத்தகையதொரு நிலையற்ற தன்மையை முழுதாகச் சீர் செய்ய இயலவில்லை. தேசிய வேளாண் பொருள் விற்பனைக் குழுமம் (NAFED) மாநிலங்களிடையேயான முட்டை விற்பனையை ஒருங்கிணைக்க முயற்சிகள் எடுத்து ஓரளவு வெற்றியும் பெற்று வருகிறது. இறைச்சிக் கோழி விற்பனை விலை மாறுதல்கள் மேலும் அதிக அளவில் காணப்படுகின்றன. ஒருங்கிணைந்த முறை இறைச்சிக் கோழி உற்பத்தி நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் வாய்ப்பு காணப்படுகிறது. இதன் காரணமாக இறைச்சிக் கோழி விற்பனை விலை சீரடையவும், உற்பத்திச் செலவுக்கேற்ற விலை கிடைக்கவும் வழியேற்படக்கூடும். இருப்பினும் முட்டை மற்றும் கோழி இறைச்சி குளிர்பதனச் சேமிப்புக் கூடங்களை உருவாக்குவதில் அதிக முதலீடு செய்வது மிகவும் அவசியம். இத்தகைய முயற்சிகளில் தனியார் நிறுவனங்களின் ஈடுபாட்டை அதிகரிக்க வேண்டும்.

### பொருளாதாரச் சீரமைப்பு

உலக அளவில் மேற்கொள்ளப்படும் பொருளாதாரச் சீரமைப்பு நடவடிக்கைகள் காரணமாக வேளாண் மற்றும் கால்நடைப் பொருள்கள் ஏற்றுமதியில் வளர்ந்துவரும் நாடுகள் பயனடைய வாய்ப்புள்ளது. ஆனால், உலகச் சந்தையில் இத்தகைய நாடுகளின் உற்பத்திப் பொருள்களுக்கு வரவேற்பு குறைவாக உள்ளதாலும், பிற நாடுகள் மேற்கொள்ளும் சில தற்காப்பு நடவடிக்கைகளாலும் இத்தகைய வாய்ப்பு எந்த அளவிற்குப் பயனுள்ளதாக அமையும் என்ற வினா எழுந்துள்ளது. வளர்ந்துவரும் நாடுகள் தங்கள் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் கால்நடைப் பொருட்களின் தரத்தை மேம்படுத்த தீவிரமான முயற்சிகளை மேற்கொள்வதும் மிகவும் அவசியம். தரக்கட்டுப்பாடு ஆய்வுகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். இந்திய பால் பண்ணைத் தொழிலும், கோழிப் பண்ணைத் தொழிலும் இத்தகைய முயற்சிகள் மூலம் ஏற்றுமதி வாய்ப்புகளைத் திறம்படப் பயன்படுத்திக் கொள்ளலாம். குறைந்த செலவில் மனித வளம், நிறைந்த கால்நடை வளம், குறைந்த உற்பத்திச் செலவு போன்ற சாதகமான உள்நாட்டு அம்சங்களைப் பயன்படுத்திக் கொள்ள ஏற்றுமதியாளர்கள் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். அதற்கேற்ற கால்நடை உற்பத்தி மற்றும் உணவுத் தொழில்நுட்பங்களைக் கையாண்டு இந்திய கால்நடைப் பண்ணைத் தொழில் முன்னேற்றம் அடைய நாம் அனைவரும் முனைப்புடன் செயல்பட வேண்டும்.

*நன்றி : கால்நடைக்கதிர்* •

S. Murugan

Phone : 650121, 650161
Fax : 04651 - 60121
STD Code : 04651
Grams : YESAM
Pager : 29652 / 280161

MICRO HOT POINT KEROSENE TABLE STOVE

SM S.M. STEEL HOUSE



Post Box No.2,
16/33A, Main Road,
Villukury - 629 180.

## மணத்தக்காளி

இது ஒரு சிறு செடி. இதன் இலையில் ஒருவித நெடி இருப்பதால் இதனை மணத்தக்காளி என்று கூறுவர். தோட்டங்களில் இது தானாக வளரும். கனி உருண்டையாக மிளகு அளவில் இருக்கும். அதனால் இதற்கு மிளகுத் தக்காளி என்றும் பெயர் உண்டு. கனி கருநீல மணிபோலப் பளபளப்பாக இருக்கும். அதனால் இதனை மணித்தக்காளி என்றும் சொல்வார்கள். கனி சிறிது இனிப்பாக இருப்பதால் குழந்தைகள் இதை விரும்பி உண்பர். மணத்தக்காளிக் கீரையைக் கறியாகச் சமைக்கலாம். வாய்ப் புண்ணுக்குப் பச்சைக் கீரையை மென்று தின்பதுண்டு. வயிற்றுப் புண்களுக்கும் இது சிறந்தது. காயை வற்றல் போடலாம். சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி ஆகிய மருத்துவ முறைகளில் இச்செடியை மருந்தாகப் பயன்படுத்துகின்றனர். □

☐ பழனியப்பா சுப்பிரமணியன்

# பெரிய சின்ன வீரன்

ஓர் ஊரில் பெரிய வீரன், சின்ன வீரன் என்று இருவர் இருந்தார்கள். பெரிய வீரனிடம் நான்கு ஜோடி எருதுகள் இருந்தன. சின்ன வீரனிடம் ஒரு ஜோடி எருதுகள் இருந்தன. பெரிய வீரன் நிலத்தில் உழவு வேலை நடக்கும்போது வாரத்தில் ஐந்து நாட்களுக்கு தன் ஒரு ஜோடி எருதை சின்ன வீரன் கொடுப்பான். சின்ன வீரன் நிலத்தில் உழுவதற்கு வாரத்தில் ஒரு நாள் மட்டும் பெரியவன் தன் நான்கு ஜோடி எருதுகளைத் தருவான். இவ்வாறு அவர் களுக்குள் ஒரு ஒப்பந்தம்.

சின்ன வீரன் வயலில் உழவு வேலை நடக்கும் நாளன்று ஐந்து ஜோடி எருதுகளையும் ஓட்டிச் செல்வான். போகும் வழியில் வருபவர்களிடம் அவன் 'ஐந்து ஜோடி எருதுகளும் என்னுடையவை' என்று பெருமையாகச் சொல்லிக் கொள்வான். வயலில் உழும் போதும் திரும்பி வரும் போதும் இதையே சொல்லிக் கொண்டிருப்பான். பெரிய வீரன் 'ஒரு ஜோடி எருது தானே உன்னுடையது, இனிமேல் ஐந்து ஜோடி எருதுகளும் உனக்குத் தான் சொந்தம் என்று சொல்லாதே,' என்று எச்சரித்தான். மறுபடியும் மறுபடியும் சின்ன வீரன் எல்லா எருதுகளும் தனக்குச் சொந்தம் என்று சொல்லிக் கொண்டிருந்தான். பெரிய வீரன் ஆத்திரம் அடைந்து சின்ன வீரனின் இரு எருதுகளின் மேல் பெரிய கல்லைத் தூக்கி போட்டுக் கொன்று விட்டான்.

சின்ன வீரன் நீண்ட நேரம் அழுது கொண்டே இருந்தான். பிறகு இறந்து போன மாடுகளின் தோலை உரித்து ஒரு கோணியில் வைத்துக் கட்டி, தலையில் வைத்துக் கொண்டு காட்டு வழியில் அடுத்த ஊருக்குப் புறப்பட்டான். மாட்டுத் தோலை விற்றுப் பணமாக்கிக் கொள்ளலாம் என்பது அவன் நோக்கம். இரவு நேரம். வழியில் தென்பட்ட பண்ணை வீட்டிற்கு அருகில் நின்றான். வீட்டிற்குள்ளே விளக்குகள் எரிவது தெரிந்தது. கதவைத் தட்டியவுடன் ஒரு பெண் கதவைத் திறந்தாள். இரவு தங்க இடம் கிடைக்குமாவென்று சின்ன வீரன் கேட்டான். கணவன் இல்லாத நேரத்தில் அந்நியர்களை வீட்டில் தங்க அனுமதிப்பது முறையல்ல என்று கூறி கதவை மூடினாள். அவன் வீட்டிற்கு அருகில் உள்ள வைக்கோல் போரின் மேல் ஏறிப் படுத்துக் கொண்டான். வீட்டு மேல் ஜன்னல் திறந்திருந்ததால் உள்ளே இருப்பதை அவனால் பார்க்க முடிந்தது.

ஒரு பெரிய மேஜையில் தின்பண்டங்களும் பானங்களும் இருந்தன. குடியானவன் மனைவியும் கோவில் மணியடிப்பவனும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். சின்ன வீரனின் நாக்கில் ஜலம் ஊறியது. சிறிது நேரத்தில் குடியானவன் வந்து கதவைத் தட்டினான். அவனுக்கு மனைவியின் ஒன்று விட்ட சகோதரனான கோவில் மணியடிப்ப வனைப் பிடிக்காது. குடியானவன் மனைவி அவன் இல்லாத நேரத்தில் சகோதரனை விருந்துக்கு அழைத்திருந்தாள்.

குடியானவன் குரல் கேட்டதும் மனைவி ஓர் அலமாரியைத் திறந்து மணியடிப்பவனை அதில் நிற்க வைத்து கதவை மூடினாள். உணவு வகைகளை அடுப்பிற்கு அருகில் மறைத்து வைத்தாள். இதைப் பார்த்துக் கொண்டிருந்த சின்ன வீரன் வைக்கோல் போரிலிருந்து கீழே இறங்கி வந்து குடியானவனிடம் இரவு தங்க அனுமதி கேட்டான். இருவரும் வீட்டினுள்ளே வந்தார்கள்.

பெண் இருவரையும் வரவேற்று மேஜையில் உட்கார வைத்து கஞ்சி பரிமாறினாள். சின்ன வீரன் கோணிப் பையைக் கீழே வைத்தான். கோணிப் பையில் என்ன இருக்கிறது என்று கேட்டான் குடியானவன். 'அதில் ஒரு செப்பிடு வித்தைக்காரன் இருக்கிறான். அவன் என்னிடம் "கஞ்சி குடித்தது போதும். அடுப்பிற்கு அருகில் கேக்கும் ரொட்டியும் மீனும் வரவழைத்திருக்கிறேன். அதைச் சாப்பிடுங்கள் என்கிறான்" என்றான் சின்ன வீரன்.

குடியானவன் அடுப்பிற்கு அருகே சென்று பார்த்தான். சின்ன வீரன் கூறியபடி எல்லா திண்பண்டங்களும் இருந்தன. இருவரும் திருப்தியாக எல்லாவற்றையும் சாப்பிட்டார்கள். குடியானவன் மனைவி எதுவும் பேசவில்லை.

'திரும்பவும் செப்பிடு வித்தைக்காரன் ஏதோ சொல்கிறான் போலிருக்கிறதே, அவனை நான் பார்க்க வேண்டும்.'

கோணிப்பையைத் தொட்டு சின்ன வீரன் பேசினான். 'கோவில் மணியடிப்பவன் வேஷத்தில் ஒருவன் மூலையில் உள்ள அலமாரியில் இருப்பதாகச் சொல்கிறான் செப்பிடு வித்தைக் காரன்.'

குடியானவன் விரைந்து சென்று அலமாரியைத் திறந்து பார்த்தான். அதில் கோவில் மணியடிப்பவன் கால்களை மடக்கிக் கொண்டு நடுக்கத்துடன் இருந்தான்.

' உன் செப்பிடு வித்தைக்காரனை எனக்கு விற்க சம்மதமா ?'

'எனக்கு விசுவாசமானவன் ஆயிற்றே, எப்படி விற்பது ? அவன் எடைக்குத் தங்கமே தரலாம்'

'என்னிடம் தங்கம் இல்லை. ஒரு கிலோ வெள்ளி தருகிறேன்.'

சின்ன வீரன் சம்மதித்தான். 'இன்னொரு நிபந்தனை. அலமாரியையும் நீ எடுத்துக் கொள்ள வேண்டும்.'

சின்ன வீரன் மாட்டுத் தோலைக் கொடுத்து வெள்ளியை பெற்றுக் கொண்டான். அலமாரியை எடுத்துச் செல்ல சிறிய வண்டியையும் வாங்கிக் கொண்டான்.

காட்டுக்கு அருகில் ஆற்றில் வெள்ளம் ஓடிக் கொண்டிருந்தது. அலமாரியை நகர்த்தி ஆற்றில் தள்ளிவிட முயன்றான்.

மணியடிப்பவன், 'என்னை ஆற்றில் தள்ளாதே. நான் நிறைய பணம் தருகிறேன்' என்றான். அவன் வீடு சென்று சின்ன வீரன் பணம் பெற்றுக் கொண்டான். அலமாரியை ஆற்றில் தள்ளி விட்டு ஊருக்குச் சென்றான்.



ஒரு சிறுவனை பெரிய வீரன் வீட்டிற்கு அனுப்பி தராசு வாங்கி வரச் சொன்னான். பெரிய வீரனே தராசை எடுத்துவந்து, 'தராசு எதற்கு' என்று கேட்டான். 'நிறைய பணமும் வெள்ளியும் எப்படி கிடைத்தது ?'

'மாட்டுத் தோலை விற்றதில் கிடைத்தது'!

உடனே பெரிய வீரன் வீட்டிற்குச் சென்று நான்கு ஜோடி எருதுகளையும் கொன்று தோலை உரித்து விற்கப் புறப்பட்டான். விலை என்னவென்று கேட்டார்கள். 'ஒரு படி நிறைய காசு வேண்டும்' என்றான். 'எங்களை முட்டாள் என்று நினைக்கிறாயா ? யார் மாட்டுத் தோலுக்கு அவ்வளவு பணம் தருவார்கள் ?' என்றார்கள். தோல் பதனிடுபவர்கள், செருப்பு தைப்பவர்கள் அவனைக் கேலி செய்து விரட்டி விட்டார்கள்.

பெரிய வீரன் கோபத்துடன் சின்ன வீரன் வீட்டிற்கு வந்து படுக்கையில் போர்த்தி இருந்த உருவத்தைக் கோடாலியால் மூன்று முறை அடித்து விட்டுச் சென்றான். படுக்கையில் இருந்தது சின்ன வீரன் அல்ல; ஒரு மணி நேரம் முன்பு இறந்து போன அவன் பாட்டி. தன்னைக் கொல்ல நினைத்த பெரிய வீரனுக்குப் பாடம் கற்பிக்க வேண்டுமெனத் தீர்மானித்தான் சின்ன வீரன்.

மறுநாள் பெரிய வீரன் சின்ன வீரனைப் பார்த்து, 'நீ இன்னும் சாகவில்லையா ?' என்று கேட்டு கோணிப் பைக்குள் அவனைத் திணித்துக் கட்டி ஆற்றில் தள்ளிவிட தூக்கிச் சென்றான். வழியில் மூட்டையை வைத்துவிட்டு ஒரு நண்பன் வீட்டின் உள்ளே சென்றான்.

வண்டிக்காரன் அந்த வழியாக வண்டி ஓட்டிக் கொண்டு வந்தான். சின்ன வீரன் 'என்னைக் காப்பாற்று' என்று கத்தினான். கோணியில் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து சின்ன வீரனை வண்டிக்காரன் விடுவித்தான்.

சின்ன வீரன் இரண்டு மரக்கட்டைகளைச் சாக்கில் வைத்து கயிற்றைக் கட்டி அங்கேயே வைத்துவிட்டு வீடு திரும்பினான்.

பெரிய வீரன் 'மூட்டை அவ்வளவு கனமாக இல்லையே! சிறிது நேரம் ஓய்வு எடுத்தால் வேலை எவ்வளவு சுலபமாக இருக்கிறது' என்று கூறி மரக்கட்டைகள் இருந்த கோணியை ஆற்றில் தள்ளிவிட்டுச் சென்றான்.

வழியில் சின்ன வீரனைப் பார்த்தான். 'உன்னைத் தான் கோணியில் வைத்து ஆற்றில் தள்ளி விட்டேனே. எப்படித் தப்பித்தாய் ?'

வண்டிக்காரன் கொடுத்து சின்ன வீரன் ஓட்டி வந்த மாடுகளைப் பார்த்தான். 'இந்த அழகான மாடுகள் உனக்கு எப்படி கிடைத்தன ?' என்று பெரிய வீரன் கேட்டான்.

'நீ ஆற்றில் தள்ளியவுடன் நான் நீரில் மூழ்கி அடியில் சென்றேன். அங்கு இருந்த தேவதை என்னை விடுவித்து கரையில் உள்ள மாடுகளைப் பரிசாகத் தந்து அனுப்பினாள்' என்றான் சின்ன வீரன்.

'நீ அதிர்ஷ்டசாலி. நானும் ஆற்றில் மூழ்கினால் மாடுகள் கிடைக்குமே ?'

'எப்படி நிச்சயமாகச் சொல்ல முடியும் ?

இந்தக் கோணிப்பையில் என்னை வைத்துக் கட்டி ஆற்றில் தள்ளிவிடு. இல்லையென்றால் உன்னைக் கொன்று விடுவேன்! என்று எச்சரித்தான் பெரிய வீரன்.

சின்ன வீரன், 'ஆற்றங்கரைக்கு வா' என்று கூறி கோணியில் பெரிய வீரனை வைத்துக் கட்டினான்.

'நீ கூறியபடி ஏதும் நடக்காவிட்டால் நான் வெளியே வந்து உன்னைக் கொன்று விடுவேன். பெரிய கல் ஒன்றையும் கோணியில் வை. அப்போது தான் மூட்டை வேகமாகக் கீழே இறங்கும்' என்றான்.

சின்ன வீரன் பெரிய கல்லையும் கோணியில் வைத்துக் கயிற்றால்கட்டி ஆற்றில் இறக்கினான்.

'பெரிய வீரனுக்கு ஆற்றின் அடியில் மாடுகள் கிடைக்குமா, என்ன ?' என்று சொல்லிக் கொண்டே மாடுகளை ஓட்டிக் கொண்டு சின்ன வீரன் வீடு திரும்பினான்.

- 'சிறுவர், சிறுமியர் கதைகள்' நூலிலிருந்து...

## தொங்கும் பாலம் கட்ட பின்பற்றப்பட்ட ஒரு நூதன முறை

நயாகரா நீர்வீழ்ச்சிக்கு அருகில் நயாகரா ஆறு அமெரிக்கா, கனடா ஆகிய இரு நாடுகளுக்கும் எல்லையாக இருந்து வருகிறது. நயாகரா ஆற்றின் ஒரு பக்கக்கரையில் அமெரிக்க நாடும், மறு பக்கக் கரையில் கனடா நாடும் உள்ளன.

அந்தப் பெரிய ஆற்றின் குறுக்கே இரண்டு நாடுகளையும் இணைக்கும் ஒரு மிகப் பெரிய தொங்குபாலத்தைக் கட்ட இரண்டு நாடுகளும் முடிவு செய்தன.

அந்தக் காலத்தில் ஒரு கரையிலிருந்து மறு கரைக்கு கெட்டியான இரும்புக் கயிற்றை எப்படி எடுத்துச் செல்லுவது என்பது ஒரு மிகப் பெரிய பிரச்சினையாக இருந்தது.

அந்தப் பிரச்சினை எப்படி தீர்க்கப்பட்டது தெரியுமா?

காற்று சாதகமாக வீசிக் கொண்டிருக்கும்போது ஒரு காற்றாடியை ஒரு கரையிலிருந்து பறக்கவிட்டு மறுபக்கம் இருக்கும் கரையில் இறங்கும்படி செய்தார்கள்.

அந்த காற்றாடியில் இணைக்கப்பட்டிருந்த நூலில் ஒரு கெட்டியான கயிற்றைக்கட்டி மறுபக்கம் இழுத்துக் கொண்டார்கள். அந்தக் கெட்டியான கயிற்றில் ஒரு மெல்லிய கம்பியை இணைத்து மறுபக்கத்திற்கு இழுத்துக்கொண்டார்கள். அதற்கு பின் கெட்டியான இரும்புக்கம்பி, சிறிய கேபிள், பெரிய கேபிள் போன்றவைகளைக் கொண்டு இரு கரைகளும் இணைக்கப்பட்டன. முடிவில் அந்தப் பெரிய பாலத்தைத் தாங்கக் கூடிய பெரிய கேபிளைக் கொண்டு இரு கரைகளையும் இணைத்து அந்த தொங்கு பாலத்தைக் கட்டி முடித்தார்கள். □


முத்து மாநகரில்

கைராசிமிக்க பட்டு மற்றும்

மில் ஜவுளிகளுக்கு

**E.M.KA.S. & SONS**

எட்டயபுரம் ஜவுளி மாளிகை

152, W.G.C. ரோடு, தூத்துக்குடி. ☎ : 327721

*கிளை ஸ்தாபனம் :*

ஸ்ரீ அருள்மிகு செண்பகவல்லி கோவில் சமீபம்,
கோவில்பட்டி. ☎ : 29621

# மல்லிகை மோகினி



ராஜுவுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. மல்லிகையின் நறுமணத்தை நுகரும் போதெல்லாம், தன் தலை ஏன் இப்படிச் சுழல்கிறது: தொடர்பில்லாத நினைவுகள் ஏன் இப்படி அடுக்கடுக்காய் வந்து அலை மோதுகின்றன என்று புரியாமல் தவித்தான்.

இன்று நேற்றல்ல, ஐந்து வருடங்களுக்கு மேலாகவே இந்த நிலை தான்.

ஒரு நாள் அவன் கோயிலுக்குச் சென்றிருந்தான். பூக்கடைகளைத் தாண்டி அவன் சென்ற போது, தலை கிறுகிறுப்பதையும், கனவுக்கும் நினைவுக்கும் இடைப்பட்ட மாயச் சுழலில் தான் மிதப்பதையும் உணர்ந்தான்.

மல்லிகை மணம் அவன் நாசியில் மட்டும் நுழையவில்லை. நரம்புகள் ஒவ்வொன்றிலும் புகுந்து, உடல் முழுவதும் வியாபித்தது. இனம் தெரியாத சிலிர்ப்பை, புல்லரிப்பை உண்டாக்கியது. அதே நேரத்தில், புறக்காட்சிகள் மறைந்து, அகக் காட்சிகளை அவன் விழிகள் கண்டன.

கோயில் பிரகாரத்தில் ஒரு பெண் பயபக்தியுடன் கண் மூடி நின்று, சுவாமி தரிசனம் செய்து கொண்டிருந்தாள். கண நேரத்தில் அவள் முகம் மறைந்து வேறு முகம் தோன்றியது. அவன் நரம்புகளில் புது ரத்தம் பெருக்கெடுத்து ஓடியது. அவளை அப்படியே தூக்கிக் கொண்டு எங்காவது ஓடிவிட வேண்டும் என்று அவன் மனமும், உடலும் துடித்தன.

நல்ல வேளையாக, காற்று திசை மாறி வீசியதால், மல்லிகை மணத்தின் நெடி சற்று குறைந்தது. அந்தப் பெண்ணின் செயற்கை முகம் மறைந்து, இயற்கை முகம் தோன்றியது. ராஜு தன் நிலையை அடைந்தான்.

மல்லிகை மணத்தைச் சுவாசிக்கும் போதெல்லாம் இத்தகைய உணர்ச்சி ராஜுவை ஆட்டிப் படைத்தது. இதனால் பூக்கடைகள் வழியாகச் செல்லவே அவன் தயங்கினான். மல்லிகைப் பூ சூடிய பெண்களைக் கண்டால், வேறு திசையில் விலகி ஓடினான்.

ஆயினும், மல்லிகை மணத்தின் நடுவே தோன்றும் பெண் முகத்தைக் காண வேண்டும் என்ற ஆசை, சில நேரங்களில் அவனையும் மீறி எழும். அவன் கால்கள் அவனை அறியாமல் பூக்கடையை நோக்கிச் செல்லும்.

மனத்தைக் கிறுகிறுக்கச் செய்யும் மல்லிகை மணம் காற்றிலே மிதக்க, அவன் நினைவிலே அந்த அழகி மிதப்பாள்.

அந்த சில கணநேரங்களில், அவள் அவனை நோக்கிச் சிரிப்பாள். முகத்துடன் முகம் பதிப்பாள், இவன் அவளைத் தழுவுவான், அவள் நழுவ முயல்வாள், அந்த முயற்சியில் அவள் சேலைத் தலைப்பு மெல்ல நழுவும். அந்தப் பொன்னுடல் அவன் பிடியில் சிக்கி நடுங்கும். பிறகு... பிறகு...

ராஜுவின் கண்களைப் போதை மறைக்கும். வெப்பத்தில் அவன் உடல் தகிக்கும். அந்த இன்ப வேதனையைத் தாங்கச் சக்தியின்றி, அவன் பூக்கடையை விட்டு ஓடுவான்.

அவன் ஓட ஓட மல்லிகை மணம் குறையக் குறைய, அவன் கொஞ்சம் கொஞ்சமாகப் பழைய நிலையை அடைவான்.

எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை எழுதிக் கொண்டிருந்தான் ராஜு. கடைசி நாள் பரீட்சை அவனுக்குப் பிடித்தமான விஞ்ஞானம் பாடம்.

கேள்விகளைப் படித்துப் பார்த்தான். எதிர் பார்த்த – சுலபமான கேள்விகள். மளமளவென்று விடை எழுத ஆரம்பித்தான்.

பரீட்சை ஹாலை மேற்பார்வையிடுவதற்கு நாலைந்து ஆசிரியர்கள் வந்திருந்தார்கள். அவர்களில் நடுத்தர வயதுடைய ஆசிரியை ஒருத்தியும் இருந்தாள். அவள் தலை நிறைய மல்லிகை பூத்துக் குலுங்கியது.

அங்கும் இங்கும் சுற்றி வரும்போது, அவள் ஒரு முறை ராஜு அருகே வந்தாள். மல்லிகை மணம் கிறுகிறுக்கச் செய்தது. ராஜு தலை நிமிர்ந்து பார்த்தான்.

என்ன ஆச்சரியம்! அவள் முகம் கணநேரத்தில் மறைந்தது. 'மல்லிகை மோகினி'யின் முகம் தோன்றியது. ராஜு விடை எழுதுவதை நிறுத்திவிட்டு, வைத்த கண் வாங்காமல் அவளைப் பார்த்தபடி இருந்தான்.

அவள் அவனை நோக்கிச் சிரித்தாள். ராஜுவின் உடல், இருந்த இடத்திலேயே இருக்க, அவன் உயிரோ – உருவெளித் தோற்றமோ – ஏதோ ஒன்று, மெல்ல எழுந்து அவள் அருகே சென்றது.

இருவரும் எதிரும் புதிருமாக நின்று, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அவள் தன் காந்தக் கண்களால் அவனை ஊடுருவுவதுபோல் பார்த்தாள். அவன் அவளை நெருங்கி, அவள் தோள்களைப் பற்றினான்.

அவள் நழுவ முயற்சி செய்தாள். அந்த முயற்சியில், சேலைத் தலைப்பு மெல்ல நழுவியது. அவனது இரு கரங்களும் அவளைச் சுற்றி வளைத்தன. அவள் நிமிர்ந்து அவனை நோக்கினாள். அவள் இமைகளும், இதழ்களும் போட்டியிட்டுத் துடித்தன. கண்களின் துடிப்பை அவன் விழிகள் ரசிக்க, இதழ்களின் துடிப்பை, அவன் அதரங்கள் ருசித்தன.

இனம் தெரியாத போதை... கிறுகிறுப்பு... மயக்கம்...

"என்ன பரீட்சை எழுதாமல், சும்மா உட்கார்ந்திருக்கிறாய் ?..." என்ற குரல் கிணற்றுக்குள் இருந்து கேட்பதுபோல் ராஜுவுக்குக் கேட்டது. அவ்வளவுதான் அவனுக்குத் தெரியும். அடுத்த வினாடி எங்கோ அதள பாதாளத்தில் உருண்டு செல்வதை உணர்ந்தான்.

நினைவு திரும்பியது. ராஜு வீட்டில் படுத்திருந்தான். அருகே அவள் தாய் கவலையுடன் உட்கார்ந்திருந்தாள்.

ராஜு கண் விழித்ததைப் பார்த்ததும், "உனக்கு என்னடா வந்தது, ராஜு! பரீட்சை எழுதிக் கொண்டிருந்த போது மயங்கி விழுந்து விட்டாயாமே! கேள்வி ரொம்பக் கஷ்டமாக இருந்ததா ?" என்று கேட்டாள்.

ராஜு பதில் ஏதும் சொல்லவில்லை. மயக்கம் அடைவதற்கு முன் தெரிந்த அழகியின் முகம், அவன் நினைவில் பளிச்சென்று தோன்றியது.

அந்த அழகிய முகம்... பொன் வண்ண வதனம்... யாருடையது ? மல்லிகை மணத்தின் கிறுகிறுப்பின் போது மட்டும் அந்த முகம் ஏன் தோன்றியது ?

ராஜு புரியாமல் தவித்தான்.

மர்மத்தைக் கண்டுபிடிக்க ராஜுவுக்கு ஒரு யோசனை தோன்றியது. அன்றே அதைப் பரீட்சித்துப் பார்க்க அவன் முடிவு செய்தான்.

துணிச்சலுடன் பூக்கடைக்குச் சென்றான். இரண்டு ரூபாய்க்கு மல்லிகைப் பூ வாங்கினான்.

கடைக்குள் நுழைந்தபோதே அவனுக்குத் தலை சுற்றியது. மல்லிகை மோகினி அவனுடன் கண்ணா மூச்சி ஆடத் தொடங்கினாள்! அதையெல்லாம் ஒரு வழியாகச் சமாளித்துக் கொண்டு மல்லிகைப் பூவை ஒரு காகிதத்தில் சுற்றிப் பையில் போட்டுக்கொண்டு வீடு திரும்பினான்.

இரவு சாப்பாடு முடிந்ததும் தன் அறைக்குச் சென்று உட்புறம் தாழிட்டான். மல்லிகை மலர்களைத் தன் முகம் அருகே வைத்துக் கொண்டு, கட்டிலில் படுத்துக் கொண்டான்.

☐ நாதன்

தலை கிறுகிறுத்தது. ஒருவிதப் போதை அவனைக் கிறங்கச் செய்தது. அந்த மயக்கத் திலேயே அவன் கண் உறங்கினான்.

உறக்கத்தில் ஏதேதோ இனிய நினைவுகள்... இன்பக் கனவுகள்...

கனவில் தன்னைக் காணும்போது ராஜுவுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. தனக்கு இப்படி கறுகறு என்று அழகான மீசை எப்போது முளைத்தது என்று ஆச்சரியப்படுகிறான்.

ராணுவ அதிகாரிபோல் கம்பிரமான தோற்றத் துடன் ஒரு காரில் போகிறான் ராஜு.

கார் போகும் பாதையையும், சுற்றிலும் உள்ள கட்டடங்களையும் பார்க்கும்போது, அது பம்பாய் மாதிரித் தோன்றுகிறது. படங்களிலும், சினிமாக் களிலும் அவன் பம்பாயைப் பார்த்திருக்கிறானே...

கனவில் காட்சி மாறுகிறது.

ஒரு கல்யாண வீடு. மணமகன் கோலத்தில் அமர்ந்திருக்கிறான் ராஜு. அருகே அழகே உருவாக அமர்ந்திருப்பது–

ஆ, மல்லிகை மோகினி!

கனவு காணும் ராஜுவின் மனம் படபட வென்று அடித்துக் கொள்கிறது.

கனவில் தோன்றும் ராஜு, எவ்விதப் படபடப்பும் இன்றி, வெகு கம்பீரமாக மல்லிகை மோகினியின் கழுத்தில் தாலி கட்டுகிறான்.

மீண்டும் காட்சி மாறுகிறது.

ஓர் அறைக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே செல்கிறான் ராஜு. கட்டிலில் அழகுப் பதுமையாக அமர்ந்திருக்கிறாள், மல்லிகை மங்கை. உண்மையிலேயே அவள் மல்லிகை மோகினிதான். அவள் கூந்தலில் மல்லிகைப் பூ சரம் சரமாகத் தொங்குகிறது.

அந்த மல்லிகை மணம் முழுவதையும் சுவாசிக்க வேண்டும் என்ற ஆசை, ஆவல், வெறி அவனை உந்தித் தள்ளுகிறது. அவள் அருகே விரைந்து செல்கிறான்.

அவளோ, அவனைக் கண்டதும் நாணத்தால் தலை குனிகிறாள். அவன் அவள் முகத்தைத் தன் பக்கம் திருப்புகிறான்.

அவள் மெல்ல முறுவலிக்கிறாள். பவளப் பேழைக்குள் முத்துச்சரம் மின்னுகிறது.

"ரேகா!"

அவளைத் தழுவுகிறான் அவன்.

மல்லிகை மோகினியின் பெயர் ரேகாவா! பேஷ்! நல்ல பெயர்!

"ராஜேஷ்!" அவள் உதடுகள் மெல்ல முணுமுணுக்கின்றன.

ராஜேஷா! கனவு காணும் ராஜு திடுக்கிடுகிறான். என்றாலும் சமாளித்துக் கொண்டு, 'நான் சின்னவன் – ராஜு! அவன் பெரியவன்– ராஜேஷ்' என்று தனக்குள் கூறிக் கொள்கிறான்.

ரேகாவின் முகத்தை ராஜேஷின் முகம் நெருங்குகிறது.

அதுவரை அனுபவித்தறியாத சுவையை – இனிமையை – ராஜேஷின் அதரங்கள் ருசிக்கின்றன.

மீண்டும் காட்சி மாறுகிறது.

"போதும்! தூங்குங்கள்!" என்று அவன் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு சிணுங்குகிறாள் அவள்.

அவள் இந்தியில் அல்லவா பேசுகிறாள்? ஆயினும் ராஜுவுக்கு அது புரிகிறது. பள்ளிக் கூடத்தில் 'ராஷ்டிர பாஷா' வரை படித்துத் தேறியவன் ஆயிற்றே!

கனவுலகக் கதாநாயகன் ராஜேஷோ, "தூக்கமா, எனக்கா? இன்று பொழுது விடியும் வரை வராது ரேகா!" என்கிறான்.

"அப்படியானால், அந்த லைட்டையாவது அணையுங்கள்! ப்ளீஸ்!..." என்கிறாள், ரேகா.

"நோ... நோ...! விளக்கை அணைத்துவிட்டால் இந்த அழகிய முகத்தை எப்படிப் பார்ப்பது? விடிய விடிய உன்னையே பார்த்துக் கொண்டிருக்கப் போகிறேன்!" என்கிறான் ராஜேஷ்.

ராஜேஷ் நெஞ்சில் முகத்தைப் புதைத்துக் கொள்கிறாள் ரேகா, அகன்று விரிந்த அவள் அழகிய முதுகின் மீது அவன் கை ஊர்ந்து செல்கிறது. முதலில் வெல்வெட்டில் வழுக்கிச் சென்ற அவன் விரல்கள், இப்போது அதனினும் மென்மையை உணருகின்றன. ஆரஞ்சு வண்ணத்தைத் தோற்கடிக்கும் பொன்னிற மேனி எழிலை அவன் கண்கள் அள்ளிப் பருகுகின்றன.

அந்தப் பொன்னிற அழகை அதிகப்படுத்துவது போல், சிறிதும் பெரிதுமாக மச்சங்கள் இறைந்து கிடக்கின்றன. ராஜேஷ் அவைகளை எண்ணுகிறான்.

"ஒன்று... இரண்டு... மூன்று... நான்கு... ஐந்து... அடேயப்பா! ஐந்து மச்சங்கள்! அதிர்ஷ்டசாலி தான் நீ!"

ரேகா மெல்லத் தன் முகத்தைத் திருப்பிக் குறும்பாகச் சிரிக்கிறாள்.

அதன் பிறகு...

கனவுமில்லாத, நினைவுமில்லாத ஓர் ஊமை உலகத்தில் பறக்கிறான், ராஜேஷ்!

காட்சி மாறுகிறது.

காலையில் கண் விழிக்கிறான், ராஜேஷ்.

அவனுக்கு முன்பே எழுந்துவிட்ட ரேகா, அவனைப் பார்த்துச் சிரிக்கிறாள். பிறகு வெட்கத்துடன் முகத்தை மூடிக்கொள்கிறாள்.

அவன் அவள் கைகளை விலக்குகிறான். அவள் கண்களை ஊடுருவிப் பார்க்கிறான்.

அதே நேரத்தில் அவன் உள்ளங்காலில் 'சுரீர்' என்று ஏதோ ஒரு வேதனை...

இன்பத்தின் சிகரத்தில் இருந்தவன், துன்பத்தின் அதள பாதாளத்தில் தள்ளப்பட்டது போல் துடிக்கிறான்.

"என்ன என்ன!" என்று பதறி எழுகிறாள் ரேகா.

ராஜேஷ் சுட்டிக் காட்டிய இடத்தைப் பார்த்த ரேகாவின் கண்கள், நிலைகுத்தி நிற்கின்றன.

"ஐயோ, பாம்பு!" என்று அலறுகிறாள்.

அவ்வளவுதான்.

ராஜேஷ் கண்கள் இருளில் மூழ்குகின்றன.

எங்கோ உருண்டு உருண்டு போகிறான்.

பிறகு எழுந்து பார்க்கும்போது, மேகக் கூட்டங்கள் மத்தியில் மிதந்து கொண்டிருப்பது போல் தோன்றுகிறது.

தன்னைத்தானே தொட முயல்கிறான். முடியவில்லை.

'ஐயோ' என்று அலற நினைக்கிறான். முடியவில்லை.

சற்று நேரம் தான்.

பிறகு, நினைவுகள் மங்கிக் கொண்டு போகின்றன.

காற்றின் வேகத்தில் அடித்துச் செல்லப்படும் அவன், காற்றோடு காற்றாக, இருளோடு இருளாகக் கரைந்து போகிறான்...

திடுக்கிட்டு விழித்துக் கொண்டான் ராஜு.

அருகில் மல்லிகை மலர்கள் கசங்கிப் போய்க் கிடந்தன.

கெடிகாரத்தைப் பார்த்தான். அதிகாலை நான்கு மணி.

அதுவரை கண்டது எல்லாம் கனவு என்று அவனால் நம்பவே முடியவில்லை.

ஒவ்வொரு காட்சியும் கண்முன் நடப்பது போல் எப்படித் தெளிவாகத் தெரிந்தன! அவற்றை வெறும் கனவு என்று எப்படிக் கூறமுடியும்!

தன் வாழ்வில் ஏதோ ஒரு மர்மம் புதைந்து கிடப்பது போல் அவனுக்குத் தோன்றியது. அதை முற்றிலும் கண்டு பிடிக்க வேண்டும் என்ற அடங்காத ஆவல் அவன் மனத்தில் கிளர்ந்தெழுந்தது.

அன்று ஒவ்வொரு விநாடியும் ஒரு யுகம் போல் கழிந்தது. பம்பாய்க்குப் போவதன் மூலம்தான் மர்மம் வெளிப்படும் என்பது அவனுக்குத் தோன்றியது.

'பம்பாய் போகிறேன்' என்று சொன்னால் அம்மா விடமாட்டாள் என்பது அவனுக்குத் தெரியும்.

அவளுக்கு அவன் ஒரே பிள்ளை. சிறு வயதிலேயே தந்தையை இழந்தவன். பூர்வீகச் சொத்து கொஞ்சம் இருந்ததால் வாழ்க்கைச் சக்கரம் எப்படியோ ஓடிக்கொண்டிருந்தது. தாய்க்கு மகனும், மகனுக்குத் தாயும் துணையாக இருந்தார்கள். இந்த நிலையில் மகனைத் தன்னந்தனியே பம்பாய்க்கு அனுப்ப எந்தத் தாய்தான் சம்மதிப்பாள்? அதுவும் பம்பாய்க்குப் போக என்ன காரணத்தைச் சொல்வது?

இதையெல்லாம் யோசித்த ராஜு, 'அம்மா, பம்பாயைச் சுற்றிப் பார்க்க என் நண்பன் ஒருவனுடன் போகிறேன். என்னைத் தேட வேண்டாம். சரியாக ஒரு மாதத்தில் வீடு திரும்புவேன்' என்று கடிதம் எழுதி வைத்துவிட்டு நூறு ரூபாய் பணத்துடன் அன்றிரவே பம்பாய்க்குப் பயணமானான்.

பம்பாய் போய்ச் சேர்ந்த ராஜுவுக்கு, அது புதிய நகரம் போலத் தோன்றவில்லை.

என்றோ, எப்போதோ அதைப் பார்த்தது போலிருந்தது. ரெயில் நிலையம், ரோடுகள், கட்டடங்கள் எல்லாம் ஏற்கெனவே அவன் காலடிபட்ட இடங்களாகத் தோற்றம் அளித்தன.

ஓர் ஓட்டலில் போய்க் காலைச் சிற்றுண்டி சாப்பிட்டான். அந்த ஓட்டல் முதலாளியைப் பார்த்த போது, 'இவரை இதற்கு முன் எப்போதோ பார்த்திருக்கிறோமே!' என்று எண்ணமிட்டான்.

ஓட்டலைவிட்டு வெளி வந்த ராஜு, மனம் போனபடி நடந்தான். ஒரே வழியில் சென்று பழக்கப்பட்ட வண்டி மாடு, வண்டிக்காரன் ஓட்டாமலேயே சரியான பாதையில் செல்வது போல, அவனுடைய கால்கள் அவனை எங்கோ இழுத்துச் சென்றன.

பெரிய கட்டடங்கள் உள்ள பகுதியில் இருந்துவிலகி, வீடுகள் உள்ள பகுதிக்கு அவன் சென்றான்.

வரிசை வரிசையாக ஒரே மாதிரி பங்களாக்கள் தெரிந்தன. அவற்றில் கடைசி பங்களா, மற்றவற்றைவிடச் சற்று சிறியதாகவும், செடி கொடிகளுடனும் காட்சி அளித்தது.

அந்த பங்களாவை நோக்கி அவன் கால்கள் அவனை இழுத்துச் சென்றன.

அந்தச் சமயத்தில் ஒரு கார் 'விர்' ரென்று அவனைத் தாண்டிச் சென்று, அந்த பங்களாவிற்குள் நுழைந்தது. காரின் பின் சீட்டில் ஒரு பெண் உட்கார்ந்திருந்தது, கண்ணாடி வழியாகத் தெரிந்தது.

ராஜுவும் அந்த பங்களாவுக்குள் நுழைந்தான். போர்டிகோவில் நின்ற காரிலிருந்து, அந்தப் பெண் இறங்கிக் கொண்டிருந்தாள். அப்போது கூட அவள் முகம் அவனுக்குத் தெரியவில்லை.

காரிலிருந்து இறங்கியதும், அவள் டிரைவரிடம் ஏதோ சொன்னாள். அப்போது அவள் முகம் ராஜுவுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

அவள் –

மல்லிகை மோகினிதான்!

ஆனால் வித்தியாசம்!

மல்லிகை மோகினி பதினேழு வயதுப் பருவப்பாவை. இவளுக்குக் கூடுதலாகப் பதினெட்டு வயது இருக்கலாம். ஆயினும் தோற்றத்தைக் கொண்டு பார்த்தால், இருபத்தைந்து வயதுக்கு மேல் மதிக்க முடியாது. வயது சற்றுக் கூடினாலும், முகத்திலும், உடலிலும் கன்னிப்பரவக்களை, கொடிகட்டிப் பறந்தது.

டிரைவர் காரை கிளப்பிக் கொண்டு எங்கோ சென்றான். ராஜு மெதுவாகத் தயங்கித் தயங்கி போர்டிகோவில் கால் வைத்தான்.

அவள் ராஜுவைக் கவனிக்கவில்லை. கையில் வைத்திருந்த பழக்கூடையுடன் உள்ளே நுழைந்தாள். "ரேகா" என்று கத்தவேண்டும் போலிருந்தது, ராஜுவுக்கு. "ரே..." என்று ஆரம்பித்தபோதே, நாக்கு சுருண்டு கொண்டது.

ஏதோ சத்தம் கேட்பதை உணர்ந்து அவள் திரும்பிப் பார்த்தாள்.

ராஜுவின் கண்களும், அவள் கண்களும் சந்தித்துக் கொண்டன. அவள் கண்கள் வியப்பினால் விரிந்தன. ஏதோ அதிசயத்தைக் கண்டவள் போல் அவள் தயங்கி நின்றாள்.

பிறகு தன்னைச் சமாளித்துக் கொண்டு, "நீ..." என்று இந்தியில் ஏதோ பேசத் தொடங்கியவள், மேற்கொண்டு பேச முடியாமல் தயங்கினாள்.

உடனே ராஜு, "நான் மதராசில் இருந்து வருகிறேன். எனக்கு இங்கு ஏதோவது வேலை கிடைக்குமா ?... என்று சரளமாக இந்தியில் பேசினான்.

அந்தக் குரலைக் கேட்டதும், அவள் மேனி ஏனோ சிலிர்த்தது. சற்று யோசித்தவளாக, "என்ன வேண்டும் ? வேலைதானே ?" என்று கேட்டாள். அவள் குரலில் இன்னும் தடுமாற்றம் போகவில்லை.

"ஆமாம் நீங்கள் என்ன வேலை கொடுத்தாலும் செய்கிறேன். எஸ்.எஸ்.எல்.சி. படித்திருக்கிறேன். குமாஸ்தா போன்ற உத்தியோகம் கொடுத்தால் நன்றாக இருக்கும், அல்லது வீட்டு வேலையோ, தோட்ட வேலையோ எது வேண்டுமானாலும் செய்வேன். சமையல் கூட எனக்குத் தெரியும்" என்றான் ராஜு.

"மதராசி என்கிறாய், தெளிவாக இந்தி பேசுகிறாயே! உன் பெயர் என்ன ?" என்று கேட்டாள் அவள்.

"ராஜு!"

"ராஜு ?"

வியப்பினால் அவள் கண்கள் விரிந்தன. ஏதோ கனவு காண்பது போல் அவள் முகத் தோற்றம் மாறியது.

சற்று நேரம் மவுனத்தில் ஊர்ந்தது. பிறகு ஒரு நீண்ட பெரு மூச்சுடன், "உன் பெயரைக் கேட்டதும் எனக்கு ஏதேதோ பழைய ஞாபகங்கள் வந்து விட்டன. காலஞ்சென்ற என் கணவரின் பெயர் ராஜேஷ்!" என்றாள் அவள்.

"தெரியும் எனக்கு" என்று கத்த வேண்டும் போலிருந்தது ராஜுவுக்கு. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான்.

அவனுக்குள் ஒரு சந்தேகம். விதவையான பின் அவள் தனிமையாகவே இருக்கிறாளா அல்லது மறுமணம் செய்து கொண்டாளா ?

அவளைக் கூர்ந்து நோக்கினான். கழுத்தில் ஒரு மெல்லிய சங்கிலி தொங்கியது. ஆனால் அது தாலியா என்று உறுதியாக அனுமானிக்க முடியவில்லை. நெற்றியில் சிறு குங்குமப் பொட்டு மின்னியது. கூந்தலில்கூட ... ஆ, மல்லிகைப் பூ!

அப்படியானால் இவள் மறுமணம் செய்து கொண்டுவிட்டாளா ?

இந்தக் கேள்வி எழுந்த அதே நேரத்தில், ராஜுவுக்கு இன்னொரு உண்மையும் புலப்பட்டது.

அவள் கூந்தலில் இருந்து லேசான மல்லிகை மணம் காற்றில் மிதந்து வந்த

உங்கள் கடமையைச் செய்ய முயலுங்கள், அப்போது உங்கள் தகுதியை உடனே அறிந்து கொள்ளலாம்.

- கெதே

போதிலும், அவள் நினைவுகள் தடுமாறவில்லை. அந்தப் பெண்ணின் முகம் மாறவில்லை...

"அவள்தான் இவள்.. இவள் தான் அவள், சந்தேகமே இல்லை" என்று மனத்துக்குள் கூறிக் கொண்டான் ராஜு.

"இந்தச் சின்ன வயதிலேயே நீங்கள் கணவனை இழந்து விட்டீர்களா ? மிகவும் வருத்தப்படுகிறேன்... பிறகு மறுமணம் செய்து கொண்டீர்களா ?" என்று கேட்டான் ராஜு.

ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த அவள், 'மறுமணம்', என்ற சொல்லைக் கேட்டு திடுக்கிட்டு ராஜுவைப் பார்த்தாள்.

"மறுமணமா ? சுத்த நான்சென்ஸ்! யார் அப்படிச் சொன்னது ?" என்று கேட்டாள். அவள் குரலில் கொஞ்சம் கோபம் தொனித்தது.

"மன்னியுங்கள். உங்கள் நெற்றியில் குங்குமமும், கூந்தலில் மல்லிகையும் இருந்ததால், அப்படி நினைத்தேன்" என்றான் ராஜு.

"எனக்கு மூடப் பழக்க வழக்கங்களில் நம்பிக்கை கிடையாது. அதிலும், நல்ல நாள் – நட்சத்திரம் – ஜாதகப் பொருத்தம் எல்லாம் பார்த்துக் கல்யாணம் செய்து கொண்டு, ஒரே நாளில் கணவரை இழந்தபின், சம்பிரதாயங்களில் கொஞ்சம் இருந்த நம்பிக்கையும் போய்விட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக இன்னொரு காரணம் இருக்கிறது."

"என்ன அது ?"

"அவருக்கு மல்லிகைப் பூ என்றால் ரொம்ப ஆசை. குங்குமப் பொட்டு என்றாலும் பிடிக்கும். அதனால் தான், அவைகளை வைத்துக் கொள்கிறேன்" என்றாள்.

சற்று நேரம் மவுனம்.

பிறகு, "நீ வேலை வேண்டும் என்று கேட்டாய் அல்லவா ? அதை விட்டுவிட்டு ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறேன். எனக்கென்னவோ உன்னைப் பார்த்ததும் உன்னை எப்போதோ பார்த்திருப்பது மாதிரி தோன்றுகிறது. அதனால்தான் இவ்வளவு மனம் விட்டுப் பேசினேன். பொதுவாக யாருடனும் பேச மாட்டேன்" என்றாள்.

"எனக்கும் அதே மாதிரிதான். உங்களை ஏற்கெனவே பார்த்திருப்பது போல ஒரு நினைப்பு. அதனால்தான் இவ்வளவு

உரிமையோடு பேசிக் கொண்டிருக்கிறேன்" என்றான் ராஜு.

இதைக்கேட்டு, அவள் கலகலவென்று சிரித்தபடி, "பூர்வ ஜென்ம வாசனையோ என்னவோ!" என்றாள். பிறகு, "ரொம்ப நேரம் உன்னை நிற்க வைத்தே பேசிக் கொண்டிருக்கிறேன். உள்ளே வா!" என்று அழைத்துக் கொண்டு போனாள்.

அந்த வீட்டிற்குள் நுழைந்த ராஜுவுக்கு அங்கு வருவது, அது முதல் தடவை அல்ல என்று தோன்றியது. மாட்டியிருந்த படங்களை உற்றுப் பார்த்தான். இயற்கைக் காட்சிகளைச் சித்தரிக்கும் படங்களின் நடுவே திருமணப் படம் ஒன்று மாட்டப்பட்டிருந்தது.

முத்துப் பல் தெரியப் புன்சிரிப்புடன் தோற்றமளித்த மணமகள்.

ஆம்–மல்லிகை மோகினிதான்! அதே இளமை மாறாத தோற்றம் – காந்தக் கண்கள் – அழகு ஆர்ப்பரிக்கும் கன்னிப் பருவம்.

அருகே மிடுக்குடன் நின்று கொண்டிருந்த அரும்பு மீசைக்காரன் –

அவன்தான் கனவில் ராஜு கண்ட ராஜேஷ்.

"என்ன அப்படிப் பார்க்கிறாய்? அது என் திருமணப் படம். அவர்தான், திருமணமான மறுநாளே என்னைப் பிரிந்த என் கணவர்" என்றாள் அவள்.

சற்று நேரம் அவளும் அந்தப் படத்தைப் பார்த்தபடி நின்றாள். கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

அவள் கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்று ராஜுவுக்கு அடங்காத ஆவல் தோன்றியது. மிகவும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான்.

அவள் கூறினாள்: "ராஜு! உன்னை யார் என்றே எனக்குத் தெரியாது. ஆனால் உன்னைப் பார்த்ததுமே இனம் தெரியாத பாசம் என் மனத்தில் அலை மோதுகிறது. காரணம், உன்னைப் பார்க்கும் போது எனக்கு அவருடைய நினைவு வருகிறது. உனக்கு கண்டிப்பாக வேலை தருகிறேன். உன்னைப் பார்க்கும் போது எனக்கு மன ஆறுதல் ஏற்படும்".

ராஜு அவளுக்கு நன்றி தெரிவித்தான்.

"உனக்கு எவ்வளவு சம்பளம் வேண்டும்?" என்று சிரித்தபடி கேட்டாள் அவள்.

"அது உங்கள் விருப்பம். தங்குவதற்கு இடமும், சாப்பாட்டு வசதியும் செய்து கொடுத்தால் போதும்!"

"ஊரில் உனக்கு யார், யார் இருக்கிறார்கள்? அப்பா, அம்மா, தங்கை..."

"அம்மா மட்டும் தான். அப்பா இறந்து விட்டார். நான் ஒரே பிள்ளை..."

"அடடா! என்னைப் போல்தான் நீயும். எனக்கு அம்மா மட்டுமே இருக்கிறாள்!"

"உங்கள் அம்மா எங்கே?"

"கோயிலுக்குப் போயிருக்கிறாள். அவளை அழைத்து வரத்தான் காரை அனுப்பி இருக்கிறேன்!" என்று அவள் கூறிக் கொண்டிருக்கும்போதே, வாசலில் கார் வந்து நின்றது.

அவளுடைய தாயார், கையில் 'சுவாமி பிரசாதத்துடன் இறங்கி வந்தாள்.

"ரேகா! இதோ பிரசாதம்!" என்று அவள் நீட்டினாள்.

"ரேகா" என்ற பெயரைக் கேட்டதும், ராஜுவின் உடல் சிலிர்த்தது.

"ஆம்; நிச்சயம் அவள்தான்" என்று தனக்குள் கூறிக் கொண்டான்.

பிரசாதத்தை வாங்கிக் கொண்ட ரேகா," இந்தப் பையனை பார்த்தாயா அம்மா? மதராசில் இருந்து வருகிறான். வேலை வேண்டும் என்று கேட்டான். உன்னைக் கேட்டு விட்டுச் சொல்வதாகக் கூறினேன்" என்றாள்.

ரேகாவின் தாயார் அவனை மேலும் கீழுமாகப் பார்த்தாள். பிறகு," நமக்குத்தான் நிறைய வேலைக்காரர்கள் இருக்கிறார்களே! இவன் எதற்கு? என்றாள்.

ராஜுவுக்கு மனம் படபடவென்று அடித்துக் கொண்டது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய் விடுமோ என்று அஞ்சினான்.

ஆனால், ரேகா 'அபயம்' அளித்தாள்.

"வீட்டு வேலைக்கு ஆட்கள் இருந்தாலும், வரவு–செலவுக் கணக்குகளைக் கவனிக்கவும், வீட்டு வாடகை வசூலிக்கவும் ஆள் இல்லையே! நீயும், நானும்தான் கஷ்டப்பட வேண்டி இருக்கிறது. ஆகவே, இவனை நம் செகரட்டரியாக நியமித்தால் என்ன."

ரேகாவின் தாயாருக்கு அது அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்றாலும், மகளின் பேச்சை அதற்கு மேல் மறுத்துக் கூற துணிவில்லை. "உன் இஷ்டம்!" என்று கூறிவிட்டு உள்ளே சென்று விட்டாள்.

"அம்மா எதற்குமே முதலில் தயங்குவாள். பிறகு என் விருப்பத்துக்குக் குறுக்கே நிற்க மாட்டாள். அவள் குணம் அப்படி!" என்றாள் ரேகா.

பிறகு,"ஓகே ராஜு! உனக்கு ஒரு அறை ஒதுக்கிக் கொடுக்கிறேன்! இங்கேயே தங்கிக் கொண்டு வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொள். சாப்பாடு, துணிமணி எதற்கும் கவலை வேண்டாம். இவை போக,கையில் மாதம் இருநூறு ரூபாய் கொடுக்கிறேன். உன் செலவுகள் போக, வீட்டுக்கு நூறு ரூபாயாவது அனுப்பு" என்றாள்.

அன்றே ராஜு அந்த வீட்டின் அங்கத்தினன் ஆனான்.

ஒரு வாரம் சென்றது.

இந்த ஒரு வாரத்தில், ராஜு அங்கே எல்லோரையும் கவர்ந்து விட்டான். ரேகாவின் தாயார்கூட,'ரொம்பப் புத்திசாலி; நேர்மையானவன்' என்று ராஜுவுக்கு சர்ட்டிபிகேட் கொடுத்தாள்.

ஒவ்வொரு நாளும் மாலை ஐந்து மணி எப்போது வரும் என்று ஆவலோடு எதிர்பார்ப்பான் ராஜு. ஏனென்றால், அப்போது தான் "ராஜு!" என்று ரேகா தன் அமுதக்குரலில் அழைத்து அவனுக்குத் தேனீர் கொடுப்பாள்.

ராஜு வேலைகளை அத்துடன் முடித்துக் கொண்டு அவளுடன் பேசிக்கொண்டிருப்பான். சில நேரம் பேச்சு இரண்டு மூன்று மணி நேரம் நீடிக்கும். பள்ளிக் கூடத்தில் படிக்கும் போது பொது அறிவில் தன் வயதையும் மீறிய வளர்ச்சியை அடைந்திருந்தான், ராஜு. அரசியலா, இலக்கியமா, கலையா –எந்தத் துறையும் அவனுக்குத் தண்ணீர் பட்டபாடு.

"அடேயப்பா! பதினெட்டு வயதுக்குள் எவ்வளவு விஷயங்கள் கற்று வைத்திருக்கிறாய்!" என்று ஆச்சரியப்படுவாள், ரேகா.

சில சமயம், அவன் பேசுவதையே திறந்த வாய் மூடாமல் கேட்டுக்கொண்டிருப்பாள்.

அடிக்கடி, நெற்றியில் புரளும் சிகையை அலட்சியமாக ஒதுக்கி விட்டுக்கொண்டு, தனது தெற்றுப்பல் தெரிய, கலீர்ச் சிரிப்பு சிரிப்பான், ராஜு.

அப்போது எல்லாம் ரேகா ஏதேதோ பழைய நினைவுகளில் மூழ்கியவள் போலக் காணப்படுவாள். அடிக்கடி பெருமூச்சு விடுவாள்.

ஒரு பிற்பகல் மூன்று மணி இருக்கும்.

ராஜு தன் அறையில் உட்கார்ந்து, வரவு – செலவுக் கணக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆறு மாதங்களாக ஒருவர், வீட்டு வாடகை செலுத்தாமலிருந்தார். அவருக்கு வக்கீல் நோட்டீஸ் கொடுக்கலாமா என்று யோசித்தான்.

ரேகாவின் தாயார், உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தாள். எனவே ரேகாவிடம் இது பற்றிக் கேட்டுவிடலாம் என்று, மாடியில் உள்ள அவள் அறைக்குச் சென்றான்.

பொதுவாக அந்த நேரத்தில் ரேகா ஏதாவது புத்தகங்கள் படித்துக் கொண்டிருப்பாள். அல்லது பின்னல் வேலைசெய்து கொண்டிருப்பாள். அன்று என்னவோ கட்டிலில்படுத்திருந்தாள்.

முகத்தை ஒரு புறம் சாய்த்தபடி அவள் குப்புறப்படுத்திருந்ததால், தூங்குகிறாளா, விழித்திருக்கிறாளா என்று தெரியவில்லை. ராஜு மெல்ல நடந்து அவள் அருகே சென்றான்.

ரேகா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். அவள் தூங்குகிறாள் என்பதைத் தெரிந்து கொண்டதும் அங்கிருந்து போய்விடத்தான் ராஜு எண்ணினான். ஆனால் அவன் கால்கள் ஏனோ நகர மறுத்தன.

ராஜு மீண்டும் அவளைப் பார்த்தான். தலை நிறைய மல்லிகைப் பூ சூடி இருந்தாள் அவள். அவளுடைய அழகிய அகன்ற முதுகின் மீது நீண்ட – கரிய கூந்தல் புரண்டு கொண்டிருந்தது.

மல்லிகை மணம் அவனைக் கிறுகிறுக்க வைத்தது. அங்கிருந்து ஓடி விடலாமா என்று எண்ணினான். ஆனால், ஆணியால் அறையப் பட்டவை போல, அவன் கால்கள் நகர மறுத்தன.

மீண்டும் அவளைப் பார்த்தான்.

நீல நிறச் சோளியும், அதே நிறத்தில் சேலையும் அவள் அணிந்திருந்தாள்.

*சோளிக்கும், சேலைக்கும் இடையே அவளுடைய பொன் நிற மேனி மின்னியது. சோளி சற்றே நெகிழ்ந் திருந்ததால்அதை ஒட்டிய அவள் மேனி, அதிக வெண்மையுடன் பிரகாசித்தது.*

*ஆகா... இந்தச் சோளிக்குள் அல்லவா அழகிய மச்சங்கள் மறைந்து கொண்டிருக்கின்றன! நீல வானத்தில் நட்சத்திரங்கள் இறைந்து கிடப்பது போல், பொன் நிற மேனியில் சிறிதும் பெரிதுமாக கருநீல மச்சங்கள் எவ்வளவு அழகாகச் சிதறிக் கிடந்தன!*

*ராஜுவின் மூச்சு, அவனையே தகித்தது. உடம்பே பற்றி எரிவது போன்ற உணர்ச்சி. மல்லிகை மணத்தின் கிறுகிறுப்பு வேறு அவனை மதி மயங்கச் செய்து கொண்டிருந்தது. அவனை அறியாமல், அவன் கரங்கள் நீண்டு, சோளியைத் தொட்டன. நடுங்கும் கரங்கள், 'பிரஸ் பட்டன்'களைத் தொட்டன.*

*திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள் ரேகா.*

*அவளுடைய முதல் பார்வையிலேயே ராஜு சிக்கிவிட்டான்.*

*அவள் கண்கள் வியப்பினால் விரிந்தன.*

*"ராஜு! நீயா? இங்கு ஏன் வந்தாய்?"*

*ராஜு பதில் ஏதும் சொல்லாமல் நின்றான். 'வாடகை கொடுக்காதவனுக்கு நோட்டீஸ் அனுப்பலாமா என்று கேட்க வந்தேன்' என்று சொல்லலாம். ஆனால் அதை அவள் நம்ப வேண்டுமே! ராஜு நிலை, அதற்கு எதிராகச் சாட்சி கூறுமே! எனவே தலை குனிந்து சும்மா இருந்தான்!*

*"ராஜு! இது என்னுடைய படுக்கை அறை என்பது உனக்குத் தெரியாதா? இங்கு வர உனக்கு உரிமை கிடையாது!" என்றாள், ரேகா.*

*அவள் குரலில் கண்டிப்பு இருந்தது. ஆனால் கனல் பறக்கவில்லை.*

*ராஜு அவள் முகத்தை நோக்கினான். அதில் வெறுப்புத் தெரியவில்லை. பரிதாப உணர்ச்சியே தென்பட்டது.*

*ராஜு குனிந்த தலையுடன் திரும்பினான். அவன் ஒரு அடி எடுத்து வைத்தபோது, "ராஜு! நில்!" என்ற ரேகாவின் குரல் கேட்டது.*

*ராஜு அசையாமல் நின்றான்.*

*"ராஜு! இப்படி வா" என்று ரேகா அழைத்தாள்.*

*ராஜு மெல்ல நடந்து அவள் எதிரே போய் நின்றான்.*

*"அப்படி உட்கார்!" என்று எதிரே கிடந்த நாற்காலியைக் காட்டினாள்.*

*ராஜு பேசாமல் உட்கார்ந்தான்.*

*"ராஜு! நிமிர்ந்து என்னைப் பார்த்துப் பதில் சொல். எதற்காக என் அறைக்கு வந்தாய்? ஏன் என்னைத் தொட்டாய்? என்று கேட்டாள்.*

*ராஜுவின் அதரங்கள் துடித்தன. ஏதேதோ சொல்ல அவன் மனம் தவித்தது. ஆனால், அவன் அந்த உணர்ச்சிகளை எல்லாம் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான்.*

*"வாடகைப் பாக்கியை வசூலிப்பது பற்றி உங்கள் ஆலோசனையைக் கேட்க வந்தேன். தூங்கிக் கொண்டிருந்தீர்கள், தொட்டு எழுப்ப நினைத்தேன்..."*

*"பொய் சொல்லாதே, ராஜு! எழுப்புவதற்காக நீ என்னைத் தொடவில்லை. உண்மைதானே?"*

*"........"*

*"ஏன் மவுனமாக இருக்கிறாய், ராஜு! எவ்வளவோ விஷயங்கள் கற்றிருக்கிறாய், வயதை மிஞ்சின அறிவு... தப்பான எண்ணங்கள் தோன்றலாமா? ஆனால் ராஜு உன்னைக் காணும் போதெல்லாம் எனக்கு ஏதேதோ பழைய நினைவுகள் தோன்றுகின்றன. இப்போது கூடப் பார்! உன் மீது கோபம் வரவில்லை!" என்றாள்.*

*ராஜு அவளை நிமிர்ந்து பார்த்தான்.*

*"எனக்குக் கூடத்தான் ஏதேதோ நினைவுகள் வருகின்றன..."*

*"உன்னைப் பார்க்கும்போது,*

மலருக்கோ தோட்ட வளம் தேவை. மாலைக்கு மலர் தேவை. அரசுக்கு அழகுதர மக்களின் ஒழுக்கம் தேவை. மக்கள் ஒழுக்கமுள்ளவர்களாக வாழ சமதர்ம முறையில் அமைந்த வாழ்க்கைப் பாதை தேவை.

- அறிஞர் அண்ணா

*இறந்துபோன என் கணவரின் நினைப்பு வருகிறது. இருவருடைய தோற்றமும் ஒரே மாதிரி தோன்றுவது அதற்குக் காரணமாக இருக்கலாம். ஆனால், என்னைப் பார்த்ததும் உனக்கு என்ன நினைவுகள் தோன்றுகின்றன? அது எப்படிச் சாத்தியம்?" என்று கேட்டாள் ரேகா.*

*"எனக்குப் புரிந்ததை உங்களுக்குப் புரிய வைப்பதால் ஒரு பலனும் இல்லை. நடந்த சம்பவத்துக்கு என்னை மன்னித்துவிடுங்கள்..."*

*"இல்லை... தூய உள்ளம் படைத்த உன் மனத்தில் ஏன் சலனம் ஏற்பட வேண்டும்? உன்னை விட எனக்கு எத்தனை வயது அதிகம் தெரியுமா?"*

*"இல்லை... என்னை ஒன்றும் கேட்க வேண்டாம்..."*

*மனத்தில் உள்ளதைக் கூறிவிடு. இல்லாவிட்டால் நிம்மதி இல்லாமல் தவிப்பேன்.*

*"நான் கூறுவது அந்த நிம்மதியையும் கெடுத்து விட்டால்?"*

*"இல்லை. குழப்பமான எண்ணங்களே நிம்மதியைக் கெடுக்கும் தயங்காமல் கூறிவிடு."*

*ரேகா இவ்வாறு கூறியதும், ராஜு எழுந்து நின்றான்.*

*"இந்த அறைக்குள் நுழைய எனக்கு உரிமை இல்லை என்றீர்கள். உண்மைதான். இன்று எனக்கு அந்த உரிமை இல்லை. ஆனால் பதினெட்டு வருடங்களுக்கு முன் அந்த உரிமையுடன் நான் இந்த அறைக்குள் வந்திருக்கிறேன்...*

*"ராஜு! என்ன சொல்கிறாய் நீ...!"*

*"ராஜு இல்லை. ராஜேஷ்" கலகலவென்று சிரித்தான் அவன்.*

*"ஆம், ரேகா! பதினெட்டு வருடங்களுக்கு முன்பு இதே அறையில் நான் நுழைந்தேன். இப்போது உட்கார்ந்திருக்கும் இதே இடத்தில்தான் அப்போதும் நீ உட்கார்ந்திருந்தாய். நான் அங்கு வந்ததும் உன்னைப் பற்றுகிறேன். நேரங்கள் இனிமையாக நகருகின்றன. 'போதும் தூங்குங்கள்' என்கிறாய் நீ. நான் மறுக்கிறேன். அந்த விளக்கையாவது அணையுங்கள்' என்கிறாய் நீ. அப்போது நான் சொன்ன பதில் நினைவிருக்கிறதா உனக்கு?" என்று கேட்டு நிறுத்தினான் ராஜு.*

பதில் பேசவும் சக்தியற்றவளாய்ச் சிலையாய் அமர்ந்திருந்தாள் ரேகா.

*"உனக்கு நினைவு இருக்கிறதோ என்னவோ! எனக்குப் பசுமையாக நினைவு இருக்கிறது. விளக்கு வெளிச்சத்தில் விடிய விடிய உன் அழகைப் பார்த்துக் கொண்டிருக்க விரும்புவதாகக் கூறுகிறேன். நீ வெட்கத்தால் முகம் சிவக்கிறாய். ஆயினும் என் விருப்பத்தைத் தடுக்கவில்லை... உன் பொன் மேனியின் அழகை அணுஅணுவாக ரசிக்கிறேன். உன் முதுகின் மீது நட்சத்திரக் கூட்டம் போல மச்சங்கள் இறைந்து கிடக்கின்றன... அவற்றை எண்ணுகிறேன்... நினைவு இருக்கிறதா, ரேகா!"*

*ராஜு நிறுத்தினான்.*

*ரேகாவின் கண்கள் திறந்திருக்கின்றன. செவிப்புலன்கள் அவன் கூறுவதை எல்லாம் கேட்டுக்கொண்டு தான் இருக்கின்றன. ஆனால் நினைவுகள் எங்கெங்கோ பறந்து செல்கின்றன.*

*"நேற்று நடந்ததுபோல் நினைவு இருக்கிறது ரேகா! உன் முதுகில் ஐந்து மச்சங்கள் இருந்தன. அது சரிதானா?" என்று கேட்ட ராஜு, "அந்த சந்தேகத்தைப் போக்கிக் கொள்ளவே நான் முயன்றேன். அதற்குள் நீ விழித்துக் கொண்டாய். உன் சந்தேகத்தைப் போக்கிவிட்டேன். நீ என் சந்தேகத்தைப் போக்கிவிடு!" என்றவாறு அவள் அருகே அமர்ந்தான்.*

*ரேகா இவ்வுலக நினைவையே இழந்தவளாக இருந்தாள்.*

*ராஜுவின் கரங்கள் அவளைச் சுற்றி வளைத்தன. விரல்கள் பரபரப்புடன் அங்கும் இங்கும் அலைந்தன. "ஆ... இதே மச்சங்கள் தான்! ஐந்து இருக்கிறதா என்று பார்த்துவிடுகிறேன்... ஒன்று... இரண்டு... மூன்று... நான்கு... ஐந்து! சரியாக ஐந்து மச்சங்கள்! நீ ரேகா தான்! என்னுடைய ரேகாதான்!" என்று பரவசத்துடன் கூவினான் ராஜு!*

*ரேகா நிமிர்ந்து அவனை நோக்கினாள்.*

அவள் கண்கள் இனம் புரியாத மோன மொழி பேசின.

"ராஜு!"

அவள் இதழ்கள் மெல்ல அசைந்தன.

"ராஜு அல்ல; ராஜேஷ்!" என்றான் ராஜு.

அவள் மீண்டும் அவளை நோக்கினாள். அணு அணுவாகப் பார்த்தாள்.

ராஜுவின் தோற்றம் வினாடிக்கு வினாடி வளர்வது போல் அவளுக்குத் தோன்றியது.

அரும்பு மீசைப் பருவத்தில் இருந்த ராஜு மறைந்து, முறுக்கு மீசையுடன் ஆஜானுபாகுவான ராஜேஷ் தோன்றினான்.

ராஜுவும் அவளை நோக்கினான். கண் இமைக்கும் நேரத்தில ரேகாவின் தோற்றம் மறைந்தது. மல்லிகை மோகினியின் தோற்றத்தில் அவள் வடிவெடுத்தாள்.

"ராஜேஷ்!"

"ரேகா!"

இரு துருவங்களின் சந்திப்பில், புதிய யுகம் ஒன்று கண நேரம் தோன்றி மறைந்தது.

மல்லிகையின் கிறுகிறுப்பின் போது ராஜு கண்ட கடந்தகாலக் கற்பனைக் கனவுகள், நிகழ்கால உண்மைகளாயின.

அவன் இதழ்கள் அனுபவித்த ஊமைச் சுகங்கள், இக பர இன்பங்களாயின.

மல்லிகை மணத்தின் கிறு கிறுப்பில், உச்சமான கட்டம்...

இனம் தெரியாத இன்ப மயக்கம்...

ஒட்டி நெருங்க அவன் முயன்றபோது –

"ராஜு! வேண்டாம்."

ரேகா தன்னை விடுவித்துக்கொண்டு எழுந்தாள்.

"நான் ராஜு அல்ல! ராஜேஷ்!"

"எனக்குத் தெரிகிறது ராஜேஷ்! ஆனால் ஊரும் உலகமும் அதை நம்பாதே!"

"ஊருக்கும் உலகத்துக்கும் பயப்படுகிறாயா?"

"பயப்படவில்லை. என்னைப் பொறுத்தவரை நீங்கள் இனி ராஜேஷ் தான்! ஆனால் ஊராரின் கண்களுக்கு ராஜுவாக நடந்து கொள்ளுங்கள்!"

"ரேகா!"

"நீங்கள் என்னை இப்படி அழைப்பதற்கு ஒரு நேரம் உண்டு! இப்போது அம்மா வரும் நேரம்!"

"அப்படியானால்..."

"ராஜேஷ் முதன் முதலாக ரேகாவைச் சந்தித்த நேரம் நினைவு இருக்கிறது அல்லவா? அந்த நேரத்தில் தான் ராஜு ராஜேஷாக மாற வேண்டும்... ராஜேஷுக்காக ரேகா காத்திருப்பாள்."

மந்தகாசமாகப் புன்னகைத்தாள் ரேகா.

அன்றிரவு.

தன் அறையில் படுத்தபடி, எதிரே தெரிந்த மாடிப்படிகளைப் பார்த்துக் கொண்டிருந்தான் ராஜு.

மாடி அறையில் கதவு சாத்தியிருந்தபோதிலும், உள்ளே விளக்கு எரிந்து கொண்டு இருப்பதை வெளியே லேசாக தெரிந்த வெளிச்சத்திலிருந்து உணர முடிந்தது.

ரேகா இன்னும் தூங்கவில்லை.

மணி பதினொன்று அடித்தது.

மாடி அறையில் விளக்கு பட்டென்று அணைந்தது.

வழக்கமாக விளக்கு அணைந்ததும் உட்புறம் தாளிடப்படும் சத்தம் இலேசாக கேட்கும். அன்று அந்தச் சத்தம் கேட்கவில்லை.

ராஜு மெல்ல எழுந்தான்.

ரேகவின் தாயார் உட்புற அறையில் படுத்திருந்தாள். பத்து மணிக்கே அவள் கண் அயர்ந்திருப்பாள் என்பது நிச்சயம்.

ராஜு அடிமேல் அடி வைத்து மாடிப்படிகளில் கால் வைத்தான்.

அவன் மனம் படபடவென்று அடித்துக் கொண்டது. பலவித உணர்ச்சிகள் – மயக்கங்கள் நெஞ்சில் பொங்கின.

ஒவ்வொரு படியாக நிதானமாக ஏறினான்.

கடைசிப் படியை அடைந்த அவன், கதவை மெல்லத் திறந்தான்.

உள்ளே எரிந்து கொண்டிருந்த சிறு விடிவிளக்கு. லேசான வெளிச்சத்தை வாரி இறைத்தது.

கட்டிலில் பதுமை போல் உட்கார்ந்திருந்தாள் ரேகா.

அவள் கூந்தல் நிறையப் பூத்துக் குலுங்கிய மல்லிகை மலர்கள், அவனை நோக்கிச் சிரித்தன.

கட்டிலில் தூவப்பட்டிருந்த மல்லிகைப் பூக்களும் இதழ் விரித்துப் புன்னகை புரிந்தன.

அதே சமயத்தில் ரேகாவும் அவனை நோக்கினாள். இதழ்கள் முறுவலித்தன.

காற்றில் மிதந்த மல்லிகை மணம், ராஜுவைக் கிறுகிறுக்கச் செய்தது.

ரேகாவின் தோற்றம் கொஞ்சம் கொஞ்சமாக மாறி, முதன் முதலாக அவளை ராஜேஷ் சந்தித்தபோது எப்படி இருந்தாளோ, அப்படித் தோன்றினாள்.

ராஜுவும் அணு அணுவாக வளர்ந்து பழைய ராஜேஷ் ஆக மாறினான்.

ரேகா வசீகரப் புன்னகையைச் சிந்தியபடி தன் இரு கரங்களையும் நீட்டினாள்.

ராஜு தன் இரு கரங்களையும் நீட்டியபடி ஒரு அடி எடுத்து வைத்தான்.

அடுத்த கணத்துக்காக இரு இதயங்கள் ஏங்கின.

கண்மூடி கண் திறப்பதற்குள் –

இதென்ன இந்த அறையே ஏன் தலைகீழாகச் சுழல்கிறது!

ரேகாவின் முகம் ஏன் இப்படி மாறுகிறது? அவள் ஏன் நிலை தடுமாறி விழுகிறாள்?

கீழே விழுந்தது ரேகா அல்ல, தான் என்பதை ராஜு உணருவதற்கு முன் நினைவிழந்தான்.

ஆஸ்பத்திரியில் ஸ்பெஷல் வார்டில் படுத்திருந்தான் ராஜு.

அவன் தலையில் பெரிய கட்டுப் போடப்பட்டிருந்தது.

பிழைப்பானோ, மாட்டானோ என்று டாக்டர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்த காலக் கட்டம் தாண்டி, அவன் அதிசயமாகப் பிழைத்துக் கொண்டான்.

கடவுளை வணங்குவது கூட மூடத்தனம் என்ற அளவுக்கு விரக்தி கொண்டிருந்த ரேகா கூட, தினமும் கோயிலுக்குச் சென்று, ராஜுவுக்கு உயிர்பிச்சை கேட்டாள்.

அவளுடைய பிரார்த்தனை பலித்துவிட்டது.

நான்கு நாட்கள் நினைவிழந்து – உணர்விழந்து கிடந்த ராஜு, கண்விழித்து பேசுகிறான் என்று டெலிபோன் வந்ததும், காரில் பறந்து சென்றாள்.

ராஜு அருகே உட்கார்ந்த ரேகா, தன் உணர்ச்சிகளை எல்லாம் முகத்தில் தேக்கி, அவனை ஊடுருவிப் பார்த்தாள். அவள் இதழ்கள் படபடத்தன. இதழ்கள் துடித்தன. ஆனால் உள்ளத்தில் பொங்கிய மிதமிஞ்சிய ஆனந்தத்தால், பேசும் சக்தியை அறவே இழந்துவிட்டாள்.

ராஜு மெல்ல அவளைப் பார்த்து சிரித்தான். ஆனால், வாய் திறந்து எதுவும் பேசவில்லை.

நர்ஸ் அங்கு இருக்கிறாள் என்பதால், ராஜு பேசாமல் இருக்கிறான், தன் உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டிருக்கிறான் என்று ரேகாவுக்குத் தோன்றியது.

"நர்ஸ்! நான் டாக்டரைப் பார்க்க வேண்டும். அவர் எங்கிருக்கிறார் என்று பார்த்து வருகிறாயா?" என்று கேட்டாள்.

நர்ஸ் சென்றாள்.

ரேகா, விவரிக்க முடியாத உணர்ச்சியுடன், ராஜுவின் கைகளைப் பற்றி, "ராஜேஷ்! நான் கொடுத்து வைத்தவள். பிழைத்துக் கொண்டீர்கள். இரண்டாவது முறையாக உங்களை இழந்திருந்தால் அந்த வேதனையை என்னால் தாங்கி இருக்க முடியாது!" என்றாள்.

ராஜு ஒரு கணம் அவளைக் கூர்ந்து பார்த்தான்.

பிறகு, "அம்மா! என் பெயர் ராஜேஷ் அல்ல, ராஜு! நீங்கள் யார்?" என்று கேட்டான்.

"ஐயோ ராஜேஷ்!"

ரேகாவின் இதயத்திலிருந்து வெடித்துச் சிதறிய குரல், அந்த அறையின் நான்கு சுவர்களிலும் மோதி எதிரொலித்தது.

- 'மல்லிகை மோகினி'
கதைத் தொகுப்பிலிருந்து.

வெளியீடு :
அம்மன் பதிப்பகம்,
சென்னை – 15.

* * *



# Raja Travels & Tours

**(A Division of Raja Agencies)**

**25 J&K St.Patrick's Complex,**
**West Car Street, (Near VGS School)**
**Tuticorin - 628 002.**

**Tel : 321965**
**320747**

**Cell : 98430-52360**
**98421-21965**

**Telefax : 91461-321965**
**E-mail : rajatt@sancharnet.in**
**Web : tutynet.com/rajatravels**

*Agent for :*

**Indian Airlines, Jet Airways,**
**Air Sahara**


## உங்களுக்கு இடம் இல்லை

பென்சிலின் என்ற மருந்தைக் கண்டுபிடித்து எண்ணற்றவர்களுடைய உயிர்களைக் காப்பாற்றிய அலெக்ஸாண்டர் ஃப்ளெமிங், பெல்ஃபாஸ்ட் என்னும் இடத்தில் சொற்பொழிவு செய்ய ஒத்துக்கொண்டார்.



சுகாதார இலாகாவைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் அவருடைய பேச்சைக் கேட்க விரும்பினார்கள். அவர்கள் இலண்டனிலிருந்து பெல்ஃபாஸ்ட் செல்லும் விமானத்தில் உள்ள இருக்கைகள் அனைத்திற்கும் பணம் கட்டி முன் பதிவு செய்துகொண்டுவிட்டார்கள்.

ஃப்ளெமிங் இலண்டன் விமான நிலையத்திற்கு சென்று பெல்ஃபாஸ்ட் செல்லுவதற்கு பயணச் சீட்டு கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார்.

விமான நிலையத்தைச் சேர்ந்த அதிகாரி, "'ஃப்ளெமிங் என்பவருடைய பேச்சைக் கேட்க சுகாதார இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் அனைத்து டிக்கெட்டுகளையும் வாங்கிப் பதிவு செய்து கொண்டு விட்டார்கள். இடம் காலியில்லை" என்று கூறி விட்டார்.



# தமிழ் வளர்த்த சங்கம்

– டாக்டர் கே.கே. பிள்ளை எழுதிய "தமிழக வரலாறு மக்களும், பண்பாடும்" நூலிலிருந்து...

வெளியீடு: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

வரலாற்றின் உயிர்நாடி காலக்கணிப்பாகும். இன்ன ஆண்டில், இன்ன திங்களில், இன்ன நாளில் இன்னது நிகழ்ந்தது என்று கூறுதல் வரலாற்றின் இலக்கணமாகும். பண்டைய தமிழக வரலாற்றில் பல நிகழ்ச்சிகளுக்குக் காலங்கணித்தல் எளிதாகத் தோன்றவில்லை. மன்னர்களைத் தம் பாடல்களில் குறிப்பிடும் பழந்தமிழ்ப்புலவர்கள் அம்மன்னர்கள் வாழ்ந்திருந்த காலத்தைத் தெரிவிப்பதில்லை. அவர்களுடைய செய்யுள்களில் விளக்கப்படும் சில நிகழ்ச்சிகளைக் காலங்கணிக்கப்பட்ட வேறு நிகழ்ச்சிகளுடன் தொடர்புறுத்தி அவற்றின் காலத்தை ஒருவாறு அறுதியிட வேண்டியுள்ளது.

பண்டைய தமிழகத்தின் வரலாற்றை அறிவதற்குத் துணை புரியும் புறச்சான்றுகள் வெகு சிலவே. எனவே, அகச் சான்றுகளை நாடும் தேவை நேரிடுகின்றது. இவ் வகைச் சான்றுகள் அத்தனையும் சங்க இலக்கியங்களுக்குள் கிடைக்கின்றன. எட்டுத் தொகை, பத்துப்பாட்டு என்னும் தொகைகளில் சேர்க்கப்பட்டுள்ள இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள் எனப் பெயர் பெற்றுள்ளன. தொல்காப்பியம், பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் சில, மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகியவற்றையும் சங்க இலக்கியங்களாகவே சேர்த்து எண்ணுவதுண்டு.

பண்டைய தமிழகத்தில் தமிழ்ப் புலவர்கள் கூடித் தலை, இடை, கடை என மூன்று சங்கங்கள் கூட்டி அவற்றில் அமர்ந்து தமிழ் வளர்த்தார்கள் என்று கூறுவது மரபாக இருந்து வருகின்றது. கடைச்சங்க காலத்தில் எழுந்தவையே எட்டுத் தொகை, பத்துப்பாட்டு நூல்கள் எனக் கொள்ளுவதும் தமிழகத்தில் வழக்கமாய் இருந்து வருகின்றது. பொதுவாகச் சங்கம் என்னும் சொல்லானது கடைச் சங்கத்தையே குறித்து நிற்கும்.

சங்கம் என்னும் சொல் தமிழ் அன்று என்றும் வடமொழிச் சொல்லின் மரூஉ என்றும் கூறுவர் சிலர். எனவே, தமிழ்நாட்டில் வடமொழி இடங்கொண்ட பிறகே சங்கம் தோன்றியது என்றும் அவர்கள் கருதுகின்றனர். இக்கருத்துப் பிழைப்பட்டதாகும். இதற்குப் போதிய சான்றுகள் இல. பண்டைய காலந்தொட்டுத் தமிழகத்தில்

நேர்ந்துள்ள மொழிப் புரட்சிகள் பண்பாட்டுப் புரட்சிகள் பலவற்றினால் பல தமிழ்ப் பெயர்கள் சிதைந்தும் மறைந்தும் போய்விட்டன. அவற்றுக்கேற்ப வடமொழிச் சொற்கள் அமையலாயின. ஆரிய நாகரிகம் தமிழகத்தில் வேரூன்றிப் பரவி வரும்போது ஏற்பட்ட விளைவு இது. ஆகவே, சங்கம் என்னும் சொல் பிற்காலத்தைய தொன்றாக இருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. இதற்கு நேரான தமிழ்ச் சொற்கள் உண்டு. கூடல், அவை, மன்றம் ஆகியவை சங்கத்தைக் குறிக்கும் தமிழ்ச் சொற்களாம். தமிழ் சங்கம் அல்லது கூடல் வளர்ந்த இடமாகிய மதுரையானது கூடல் என்னும் பெயராலும் வழங்கி வருகின்றது. இஃது இடவாகு பெயர். தமிழ் வளர்ந்த கூடலைத் 'தமிழ் கெழுகூடல்' என்று புறப்பாட்டு ஒன்று குறிப்பிடுகின்றது. சங்கம் என்னும் பெயர் ஏற்படுவதற்கு முன்பு கூடல் என்னும் சொல்லே வழங்கியிருக்க வேண்டும். சமணரும் பௌத்தரும் தத்தம் சமயங்களை வளர்ப்பதற்காகச் சங்கங்கள் நிறுவினார்கள். மதுரையில் நடைபெற்று வந்த கூடலை முதன்முதல் அவர்களே சங்கம் என்று பெயரிட்டழைத்திருக்கக்கூடும். வைதிக ஆரியமும், சமணரும், பௌத்தரும் தமிழகத்தில் நுழைந்த பிறகு ஏற்பட்ட ஆயிரக்கணக்கான பெயர் மாற்றங்களுள் இஃதும் ஒன்றாக இருக்க வேண்டும்.



சங்க இலக்கியம் ஒன்றிலேனும் 'சங்கம்' என்னும் சொல் காணப்படவில்லை என்பது உண்மையே. இதற்குத் தக்கதொரு காரணமும் உண்டு. அக்காலத்தில் நூல் இயற்றும் ஆசிரியர் ஒருவர் 'நான் இந்நூலை, இன்ன இடத்தில், இன்ன பல்கலைக் கழகம் நிகழும் பொழுது ஆக்கினேன்' என்று கூறித் தம்மை அறிமுகப் படுத்திக் கொள்ளும் மரபு இல்லை. இச்செய்திகளை நாம் அறிய வேண்டுமாயின் நூல் அச்சிடப் பட்ட ஊர், காலம் இவற்றைக் காட்டும் ஏட்டைத் திருப்பிப் பார்க்க வேண்டும். பண்டைய புலவர்களும் இம்முறையைப் பின்பற்றி வந்தனர். தனிப் பாடலாசிரியரோ, நூலாசிரியரோ தொகுப்பாசிரியரோ இன்ன ஊரில், இன்ன காலத்தில் தாம் தம் பாட்டையோ, நூலையோ, தொகுப்பையோ படைத்ததாகக் குறிப்பிடும் வழக்கத்தை மேற்கொண்டிலர். இக்காரணத் தினாலேயே சங்கம், கூடல் மன்றம் என்னும் சொற்கள் சங்க இலக்கியத்தில் காணப்படவில்லை. அன்றி, இப்பெயர் அடங்கியிருந்த பாடல்களோ, நூல்களோ அழிந்து போயிருக்கக் கூடும். அல்லது அழிக்கப் பட்டிருக்கவும் கூடும்.

தமிழ்ச் சங்கத்தைப்பற்றிய குறிப்புகள் இறையனார் களவியல் உரையிற்றான் முதன்முதல் காணப்படுகின்றன. தலை, இடை, கடைச் சங்கங்களின் வரலாற்றை அவ்வுரை சுருக்கிக் கூறுகின்றது. அவ்வரலாற்றைப் பிற்கால உரையாசிரியர்களான பேராசிரியரும் அடியார்க்கு நல்லாரும் ஒப்புக் கொண்டுள்ளனர். மூன்று சங்கங்கள் பல்வேறு காலங்களில் மதுரையில் தமிழ் வளர்த்த வரலாற்றைப் பல புராண ஆசிரியரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். திருவிளையாடற் புராணத்தின் ஆசிரியர் பரஞ்சோதி அடிகள் தம் நூலில் தமிழ்ச் சங்கத்தைப்பற்றிப் பாடியுள்ளார். வில்லிப்புத்தூரார் 15-ஆம் நூற்றாண்டினர். அவர் தாம் பாடிய பாரதத்தில், 'நன்றறிவார் வீற்றிருக்கும்

நன்மாடக்கூடல்,' என்று மதுரையைப் புகழ்கின்றார். தமிழ் வளர்க்கும் சீரிய நோக்கத்துடன் பண்டைய காலத்துப் பாண்டிய மன்னர்கள் தமிழ் புலவர் பலரையும் ஒன்று கூட்டித் தமிழ்ச் சங்கங்களை நிறுவித் தமிழுக்கு ஏற்றம் புரிவித்தார்கள் என்பதும், இவ்வாறே சங்கம் தோற்றுவிக்கப்பட்டது என்பதும், இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் கூறும் செய்தியாகும். அஃதுடன் அவர் மேலும் சில விளக்கங்களையும் அளிக்கின்றார். அவையாவன: கடல்கொண்ட தென்மதுரையில் முதற் சங்கம் நடைபெற்று வந்தது. சிவபெருமான், அகத்தியனார், முருகக் கடவுள், முரஞ்சியூர் முடிநாகனார், குபேரன் முதலாய ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர் அதன்கண் அமர்ந்து தமிழ் வளர்த்தனர். அச்சங்கத்துடன் தொடர்பு கொண்டிருந்த புலவர்களின் தொகை மொத்தம் 4,449 ஆகும். அவர்கள் பரிபாடல்கள் பலவற்றையும், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை என்ற நூல்களையும் இயற்றினார்கள். இத் தலைச்சங்கம் தொடர்ந்து 4,440 ஆண்டுகள் நடைபெற்று வந்ததாகக் கூறப்பட்டுள்ளது. காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாகப்பாண்டிய மன்னர் எண்பத்தொன்பதின்மர் இச்சங்கத்தைப் புரந்து வந்தார்கள். அவர்களுள் எழுவர் தாமே பெரும் புலவர்களாகவும் திகழ்ந்தவர்கள், அக்காலத்தில் வழங்கிய இலக்கண நூல் அகத்தியம் ஒன்றேயாம்.

இடைச் சங்கம் தோன்றி வளர்ந்தது கபாடபுரத்தில், தென் மதுரை கடல்கோளுக் குள்ளாயிற்று; கபாடபுரம் பாண்டி நாட்டுக்குத் தலைநகரமாயிற்று. இடைச்சங்கம் அங்கு

> **"தலைச்சங்கம் தொடர்ந்து 4,440 ஆண்டுகள் நடைபெற்று வந்ததாகக் கூறப்பட்டுள்ளது. காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாகப்பாண்டிய மன்னர் எண்பத்தொன்பதின்மர் இச்சங்கத்தைப் புரந்து வந்தார்கள். அவர்களுள் எழுவர் தாமே பெரும் புலவர்களாகவும் திகழ்ந்தவர்கள், அக்காலத்தில் வழங்கிய இலக்கண நூல் அகத்தியம் ஒன்றேயாம்."**

நிறுவப்பட்டது. வெண்டேர்ச் செழியன் முதலாக, முடத்திருமாறன் ஈறாக ஐம்பத்தொன்பதின்மர் பாண்டிய மன்னர்கள் இச்சங்கத்தின் புரவலர்களாய் பணியாற்றினார்கள். அவர்களுள் ஐவர் தாமே புலவர்களாகவும் அச்சங்கத்தில் அமர்ந்திருந்தனர். அகத்தியனார், தொல் காப்பியனார், இருந்தையூர்க் கருங்கோழியார், மோசியார், வெள்ளூர்க் காப்பியனார், சிறுபாண்டரங்கனார் திரையன் மாறனார், துவரைக் கோன், கீரந்தையார் முதலாய ஐம்பத்தொன்பதின்மர் இச்சங்கத்தில் அமர்ந்து தமிழாராய்ந்தார்கள். இந்தக் கூடலில் வீற்றிருந்த புலவர்கள் மூவாயிரத்து எழுநூற்றுவர், கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை அகவல் முதலிய நூல்களை அவர்கள் பாடினார்கள். அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசை நுணுக்கம், பூதபுராணம் ஆகிய இலக்கண நூல்களை அவர்கள் பயன்படுத்தி வந்தார்கள். இச்சங்கம் மூவாயிரம் ஆண்டுகள் நடைபெற்றதெனவும் கூறப்பட்டுள்ளது. பிறகு கபாடபுரத்தையும் கடல்கொண்டு போய்விட்டது. இக்காரணத்தினால் கடைச் சங்கம் உத்தர மதுரையில் கூடிற்று, இப்போது பாண்டி நாட்டிலுள்ள மதுரை இதுதான். இச்சங்கத்தில் அமர்ந்து தமிழ் வளர்த்த புலவர்கள் நாற்பத்தொன்பதின்மர். இவர்களுள் மூவர் பாண்டிய மன்னர், சேந்தம்பூதனார், அறிவுடையரனர், பெருங்குன்றூர் கிழார், இளந்திருமாறன், மதுரையாசிரியர் நல்லந்துவனார், மருதனிளநாகனார், கணக்காயனார் மகனார் நக்கீரனார் ஆகியவர்கள் ஏனைய புலவர்களில் சிலர், இந் நாற்பத்தொன்பதின்மர் பாடிய பாடல்கள் நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு, புறநானூறு, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, கலி நூற்றைம்பது, பரிபாடல் எழுபது, கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை முதலியன. கடைச்சங்க காலத்தில் வழங்கிய இலக்கண நூல்கள் அகத்தியமும் தொல்காப்பியமுமாம். இச்சங்கம் 1,850 ஆண்டுக் காலம் நீடித்ததாகவும் கூறப்பட்டுள்ளது. இக்கடைச் சங்கத்தை மதுரையில் நிறுவியவன் பாண்டியன் முடத்திருமாறன் என்பான். இதன் இறுதியாண்டுகளில் அரசாண்டவன் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி.

கடைச் சங்கத்தின் தோற்றத்தைப்பற்றிய செய்தியை இறையனார் களவியல் உரையாசிரியரே அன்றித் திருவிளையாடற்புராணம் எழுதிய பரஞ்சோதியடிகளும் தம் நூலில் விரித்துரைக் கின்றார். அவர் கூறுவதாவது: முன்னொரு காலத்தில் வங்கிய சேகர மன்னன் என்பவன் பாண்டி நாட்டை ஆண்டு வந்தான். அப்போது வாரணாசியில் பிரமதேவன் பத்து அசுவமேத யாகங்களை முடித்துக்கொண்டு கங்கையாற்றில் தன் மனைவியர் சரசுவதி, காயத்திரி, சாவித்திரி ஆகிய

மூவருடன் நீராடச் சென்றான். கந்தருவப் பெண் ஒருத்தியின் இன்னிசையில் தன் உளத்தைப் பறிகொடுத்த சரசுவதிதேவி சற்றுப் பின் தங்கினாள். அவளை மானிடப் பிறவி எடுக்குமாறு பிரமன் சபித்தான். கலைமகள் தன் பிழையை மன்னித்துத் தனக்குச் சாப விடுதலையளிக்கும்படி தன் கணவனிடம் மன்றாடினாள். நான்முகக் கடவுளும் உளமிரங்கி அருள்சுரந்து தன் சாபத்துக்குக் கழுவாய் ஒன்று கூறினான், அஃதென்னவெனின், கலைமகளின் உடல் ஐம்பத்தொரு எழுத்தால் ஆனது. அவற்றுள் 'ஆ' முதல் 'ஹக' வரையிலான நாற்பத்தெட்டு எழுத்துகள் உலகில் புலமை மிக்க சான்றோர்களாய்ப் பிறப்பார்கள். அவ்வெழுத்துகள் யாவற்றினுள்ளும் ஊர்ந்து நின்று அவற்றைச் செலுத்தி வருகின்ற 'அகரம்' போன்றவனான சிவபெருமான் நாற்பத்தொன்பதாம் புலவராக வீற்றிருந்து அப்புலவர்கட்குப் புலமையை வளர்த்து முத்தமிழையும் நிலை நிறுத்துவான். இவ்வாறு கூறிப் பிரமன் கலைமகளைத் தேற்றினான்.

'இறையனார் களவியல்' என்னும் அகப் பொருள் இலக்கணம் இயற்றப்பட்ட வரலாறு பின்வருமாறு: பாண்டி நாட்டில் பன்னிரண்டு ஆண்டுகள் மாபெரும் பஞ்சம் ஒன்று தோன்றி மக்கள் அவலப்பட்டனர். உணவின்றிப் பசியினால் வாடினர். அவர்களுடைய துன்பத்தைக் கண்டு உள்ளமுடைந்த பாண்டியன் கேட்டுக்கொண்ட படியே அவனுடைய அவைப் புலவர்கள் அனைவரும் பாண்டி நாட்டைத் துறந்து சென்று தத்தமக்கு விருப்பமான ஊர்களில் தங்கிக் காலங்கழித்து வந்தனர். பன்னிரண்டாண்டுகள் கழித்துப் பாண்டி நாட்டில் நன்மழை பெய்தது. பயிர்கள் செழிப்புற்றன. மக்களும் நல்வாழ்வு எய்தினர். மன்னனும் உளமகிழ்ந்து புலவர்கள் அனைவரையும் தேடித் தன் அவைக்கு மீண்டும் அழைத்து வருமாறு பல இடங்களுக்கும் ஆள் போக்கினான். ஆள்கள் பல்வேறு இடங்களிலும் தேடித் திரிந்து புலவர்களைத் திரட்டிக் கொண்டு வந்து சேர்த்தனர். ஆனால், திரும்பி வந்த புலவர்கள்



அனைவரும் எழுத்து, சொல் இலக்கணங்களில் மட்டும் வல்லுநராகக் காணப் பட்டனரேயன்றிப் பொருள் இலக்கணத்தில் தேர்வுடையவர் அவர்களுள் ஒருவரேனும் இலராயினர். மன்னன் பெரிதும் கவன்றான். பொருளை யாய்ந்து வாழக்கையிற் பயன் பெறுவதற்காகவே எழுத்தும் சொல்லும் உள்ளன. எனவே, பொருளை உணர்த்தும் இலக்கணத்தை மீண்டு மக்கள் யாரிடம் கற்றுப் பயன் பெறுவர் என்று மன்னன் ஏங்கி நின்றான். அவனுடைய கவற்சிக்கு இரங்கியவனாய் ஆலவாய்க் கடவுள் அகப்பொருளை விளக்கும் அறுபது சூத்திரங்களை மூன்று செப்பேடுகளின் மேல் பொறித்துக் கோயிற் கருவறையில் தன் பீடத்தின் கீழ் இட்டு வைத்தான். கோயில் அருச்சகன் அவ்வேடுகளைக் கண்டெதது மன்னன் கைகளில் சேர்த்தான். அவற்றைப் பெற்று அளவற்ற மகிழ்ச்சியில் ஆழ்ந்த பாண்டியன் அச்சூத்திரங் கட்கு உரைகாண முயன்றான். நக்கீரனார் அவற்றுக்குச் சிறப்பானதொரு உரையை இயற்றிக் கொடுத்தார். முருகப் பெருமானின் கூறான உருத்திரசன்மன் என்பான் இவ்வுரையை அரங்கேற்றக் கேட்டு மகிழ்ந்தான். இறையனார் அகப்பொருள் நூன்முகம் தெரிவிக்கும் வரலாறு இது. இவ்வரலாறு கல்லாடத்தின் மூன்றாம் பாடலிலும் குறிப்பிடப் படுகின்றது.

தமிழ்ச் சங்கங்கள் மூன்றும் தோன்றி வளர்ந்த வரலாறும், இறையனார் அகப்பொருளும் அதன் உரையும் எழுந்த வரலாறும், தெய்வீக நிகழ்ச்சிகள், அளவைக்கு ஒவ்வாத கால வரைகள் ஆகியவை கலந்துள்ளன என்பது உண்மை. எனினும், அவற்றை முற்றிலும் கற்பனை என்று புறக்கணித்தலாகாது. 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்பது நியதி, எனவே, இப்புராண வரலாறுகளை நன்கு ஆய்ந்து அவற்றுள் உண்மை காணலே பொருத்தமாகும்.

பரஞ்சோதியடிகளின் காலம் இன்னதெனத் திட்டமாக அறிய முடியவில்லை. இவரன்றிப் பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பவரும் ஒரு திருவிளையாடற் புராணம் பாடியுள்ளார். இவர் 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பரஞ்சோதியடிகள் காலத்தால் இவருக்குப் பிற்பட்டவர். தமிழ்ச் சங்கத்தைப்பற்றிக் கூறும் புராணங்கள் இவை இரண்டுதாம். மன்னர்களின் பரம்பரை வரிசையிலும், அறுபத்து நான்கு திருவிளையாடல் களின் வைப்பு முறையிலும் இவ்விரண்டு புராணங்களும் ஒன்றோடொன்று முரண்படுகின்றன. இறையனார் களவியல் உரை இவை இரண்டுக்கும் முற்பட்டதாகும். இப்புராணங்களின் கூற்றுக்கும், களவியல் உரையாசிரியர் தரும் செய்திகளுக்குமிடையே பல வேறுபாடுகள் உண்டு. எனவே, புராண ஆசிரியர் இருவரும், களவியல் உரையாசிரியரும் அவ்வக் காலங்களில் தத்தமக்குக் கிடைத்த குறிப்புகளைக் கொண்டு தமிழ்ச் சங்கங்களைப் பற்றிய செய்திகளைத் தத்தம் நூல்களில் சேர்த்திருக்க வேண்டும். பல்வேறு காலங்களில் தமிழ்ச் சங்கங்களைப் பற்றிய செய்திகள் மறைந்து போகாமல் செவிவழித் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன என்று ஊகிக்க இடமேற் படுகின்றது. கற்பனைக் கதைகளும், செய்தித் தாள்களும் செய்திகளைத் திரட்டித்தராத ஒரு காலத்தில் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் ஒரு வரலாற்றை முற்றிலும் கற்பனை என்று புறக்கணித்துவிடல் பேதைமையாம். எனவே, தமிழ்ச் சங்கங்களைப்பற்றிய செய்திகட்கு ஓர் அடிப்படை இருந்திருக்க வேண்டும் என்று உறுதியாகக் கூறலாம்.

**தொல்காப்பியர் இரண்டாம் சங்கக் காலத்தில் வாழ்ந்தவர். தொல்காப்பியத்தில் பல நூற்பாக்களில் 'என்ப, 'மொழிப', 'என்மனார் புலவர்', 'பாங்குற உணர்ந்தோர் பன்னுங் காலை' என்று கூறித் தமக்கு முற்பட்டிருந்த இலக்கண ஆசிரியர்களின் முடிபுகளின் மேல் தொல்காப்பியனார் தம் முடிபுகளைச் சார்புறுத்துகின்றார்.**

தமிழ்ச் சங்கங்களைப் பற்றிய வரலாறுகளில் வரும் மன்னர்கள், புலவர்கள் ஆகியவர்களுள் பலர் இயற்றிய பாடல்கள் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. அதனால் அப்புலவர்கள் உயிருடன் வாழ்ந்திருந்தவர்கள். புனை பாத்திரங்கள் அல்லர் என்பதை மறுக்க முடியாது. பாண்டிய மன்னர் அவையின் பல புலவர்கள் வீற்றிருந்த வரலாற்றை வேள்விக்குடிச் செப்பேடுகளும் குறிப்பிடுகின்றன. கற்பனை வளம் செறிந்தவர்கள் உண்மை வரலாற்றுடன் பல பொய்க் கதைகளையும் சேர்த்துத் திரித்து வெளியிட்ட செய்திகள் பண்டைய நூல்கள் பலவற்றுள் இடம் பெற்றுவிட்டன. எனவே, தமிழ்ச் சங்கம் என்று பிற்காலத்தில் பெயரெய்திய கூடல் அல்லது மன்றம் ஒன்று பாண்டிய மன்னர் தலைமையில் இயங்கி வந்த வரலாற்றை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் ஐயமில்லை.

(அடுத்த இதழில் முடியும்)




Tel : 04562-22422, 27244
Fax : (04562) 27655, 22056
E-mail : asia56@vsnl.com

**ASIA MATCH COMPANY LIMITED**

*Best Match for all seasons*

PIONEER ASIA

**BOOPATHY BUILDINGS**
Post Box No.222,
Sivakasi - 626 123


# இன்சுலின்

இது கணையத்தில் (Pancreas) 'லாங்கர் ஹான்ஸ் தீவுகள்' என்ற திசுக்களால் சுரக்கப்படும் ஹார்மோன் ஆகும். இது நேராக இரத்தத்தில் கலக்கிறது. உட்கொள்ளும் கார்போ ஹைட்ரேட்டு என்னும் உணவுப் பொருளின் வளர் சிதைவு மாற்றத்தை (Metabolism) கட்டுப்படுத்தும் ஹார்மோன்களில் ஒன்று.

சர்க்கரை கார்போஹைட்ரேட்டு வகையைச் சேர்ந்தது. நம் உடலிலுள்ள இரத்தத்தில் சுமார் 5 கிராம் சர்க்கரை காணப்படுகிறது. இச்சர்க்கரை கல்லீரலால் இரத்தத்தில் சேர்க்கப்படுகிறது. மேலும் சர்க்கரையைக் கிளைக் சோஜனாக மாற்றி கல்லீரல் தன்னிடத்தே வைத்துக் கொள்ளுகிறது. ஆற்றலைப் பெற திசுக்கள் இரத்தத் திலுள்ள சர்க்கரையை ஆக்சிஜனேற்றம் செய்கின்றன. இம்மூன்று பண்புகளையும் நிருணயிப்பது இன்சுலினே.

உட்கொள்ளும் சர்க்கரையின் அளவு அதிகரித்தால் கணையத்தில் இன்சுலின் அதிகமாகச் சுரக்கும். சுரப்பி பழுதடைந்து விட்டால் போதுமான இன்சுலினைச் சுரக்காது; சுரக்கும் இன்சுலினும் சரிவர வேலை செய்யாது. இதனால் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரிக்கும். திசுக்களும் சர்க்கரையை ஆற்றலாக மாற்றும் இயல்பை இழக்கும். இந்நோயை 'இனிப்பு நீரிழிவு' (Diabetes mellitus) என்பர். இந்நோயைக் கண்டுபிடிக்க சிறுநீரைப் பரிசோதித்து, சர்க்கரை இருக்கிறதாவென்று பார்க்க வேண்டும். இரத்தத்தையும் பரிசோதித்து சர்க்கரை குறித்த அளவுக்கு மேல் இருக்கிறதாவென்றும் பார்க்க வேண்டும். அப்படி இருந்தால் பிராணிகளின் கணையத்திலிருந்து எடுக்கப்பட்ட இன்சுலினை அவ்வப்போது மாத்திரைகள் மூலமோ அல்லது ஊசியின் மூலமோ தேகத்தினுள் செலுத்தி சர்க்கரை அளவைக் குறைத்துக் கொள்வது நல்லது. இல்லாவிடில் உட்கொள்ளும் கார்போ ஹைட்ரேட்டுகள் பயனற்று சிறுநீர் மூலம் வெளியேற்றப்படும். இதனால் பலவீனம், மயக்கம், புத்திசுவாதீனமின்மை முதலியவை ஏற்பட வாய்ப்புண்டு.

• • •

# புற்றுநோயைத் தடுக்கும் காய்கறிகள்

பேராசிரியர் சோ. மோகனா

இன்று புற்றுநோய் சிகிச்சை வல்லுநர்கள், புற்றுநோய்க் கிருமியை எதிர்க்கும் பல வேதியல் பொருள்கள் இயற்கையாகவே நம் உணவில் கலந்துள்ளதை கண்டு பிடித்துள்ளனர். இதில் வியப்பான செய்தி என்னவெனில், மூக்கைத் துளைக்கும் இந்தியச் சமையலின் மூல காரணிகளான மசாலாப் பொருட்களும், முட்டைக்கோஸ், காலிஃப்ளவர்,பீன்ஸ் போன்ற காய்கறிகளும், பயறு மற்றும் மீன் ஆகியவற்றிலுள்ள செலீனியம் போன்ற தாதுப் பொருட்கள்தான் புற்றின் தாக்குதலைத் தடுக்கின்றன.

திருவனந்தபுரம் மற்றும் மும்பையிலுள்ள புற்றுநோய் ஆராய்ச்சி மைய மருத்துவர்களான கங்காதரன் மற்றும் கிரீஷ் முடுரூ, "நிச்சயமாய் நமது உணவு வகைகள் புற்று நோயைத் தடுப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. அத்துடன் சில பொருட்கள் புற்றுநோயை உண்டாக்குவதையும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும் என்கின்றனர்". உலகப் புற்றுநோய் ஆவண நிதியம் உணவு, சத்துணவு மற்றும் புற்றுநோய் தடுப்பு பற்றிய ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது. உலகளவிலான கணக்கெடுப்பின் மூலம்,கிட்டத்தட்ட 30–40 சதம் புற்றுநோய்கள் நாம் உண்ணும் உணவின் மூலமும், நமது பழக்க, வழக்கங்கள் மற்றும் உடல் எடையுடன் நேரடித் தொடர்புடையன. எனவே, இதனை அறிந்து அதனைத் தடுக்க தேர்ந்தெடுத்த உணவு மற்றும் வாழ்க்கை முறையுடன் புகை பழக்கமும் இல்லாவிடில் 60–70 சதம் புற்று நோய்களைத் தடுத்துவிட முடியும் என்று ஐயமறத் தெரிவிக்கின்றனர்.



9 நாடுகளிலுள்ள விஞ்ஞானிகள், சுமார் 4000 பேர்களிடம் நடத்திய ஆராய்ச்சி மற்றும் கணக்கெடுப்பின்படி, புற்றுநோய் வரவும், நமது உணவும் நேரடித் தொடர்புடையன என்பது தெளிவாகிறது. இருந்தாலும் கூட குறிப்பாக எந்த உணவிலுள்ள என்ன வகை வேதிப் பொருள்கள், எந்தப் புற்று நோயை எப்படித் தடுக்கிறது என்பதைத் துல்லியமாக கண்டு பிடிப்பதில் ஈடுபட்டுள்ளனர். விஞ்ஞானிகள் தக்காளி மிகச் சாதாரணமாய் எல்லா குடும்பங்களிலும் பயன்படுத்தும் காய்கறி ஏழைகளின் ஆப்பிள் மட்டுமல்ல, அமிர்தமும் கூட. இதில் லைகோபீன் (lycopene) பி, குமூடரிக் அமிலம் (P-Coumaric acid) மற்றும் குளோர்ஜெனிக் அமிலம் (Chlorgenic acid) போல் கிட்டத்தட்ட 10,000 வகை தாவர வேதிப்பொருட்கள் உள்ளன. இவை நம்மை புற்றுநோயின் கோரப் பிடியிலிருந்து பாதுகாக்கின்றனவாம். ஆனால், எந்த வேதிப்பொருள் செல்களுக்கு, அதிக பாதுகாப்பைத் தருகின்றன என்பது மட்டும் துல்லியமாய் அறியப்படவில்லை. மேலும் புற்று நோய்க்கு, வயது மற்றும் பரம்பரையும் காரணிகளாக இருப்பதால் தக்காளியின் எப் பொருள் புற்றைத் தடுக்கிறது என கணிப்பதும் கடினமாய் இருக்கிறது.

புற்று நோயின் முதல்கட்டத்தில், செல்களின் பரம்பரைப் பொருட்களான டி.என்.ஏ.( DNA) வின் அமைப்பு மற்றும் செயல்பாடுகளில், புற்றுநோய்க் கிருமிகள் அடிப்படை மாற்றத்தை உண்டு பண்ணுகின்றன. அப்போது செல்கள் வேகமாய்ப் பிரிந்து பரவுகின்றன. ஜீன்கள் அடங்கியுள்ள டி.என்.ஏ.வைச் சிதைக்கும் துரோகிகள் நாம் உண்ணும் உணவு, நீர் மற்றும் ஆக்ஸிஜன் மூலமே உடலுக்கு நுழைகின்றன. நாம் உண்ட உணவு செரித்து உட்கிரகிக்கப்பட்டு, உடல் பொருளாய் மாறும்போது நடக்கும் ஆக்கச் சிதைவின் போது வெளிவரும் தனி அயனிகள் (Free radicals) செல்களின் மீது மோதி, எலெக்ட்ரான்களைத் தூண்டிவிட்டு, டி.என்.ஏ. வைச் சிதைக்க வழி செய்கிறது. மேலும், சில உணவுப் பொருட்களில் புற்று நோயைத் தூண்டும் வேதிப் பொருட்கள் உள்ள. புகையிலையிலுள்ள பொருட்கள், இறைச்சி அதிக வெப்பம் மற்றும் அழுத்தத்தில் வேகும்போது வெளிப்படும் வேதிப்பொருளான ஹெட்டிரோ சைக்ளிக் அமைன் (Heterocyclicamine) மற்றும் கெட்டுப்போன உணவுப் பொருளிலிருந்து வரும் என் நைட்ரோசோ (N-Nitroso) பொருட்கள் போன்றவை உடலினுள் நுழையும் போது மிகவும் சாதுவாக எந்தத் தீங்கும் தருவதில்லை.

பின்பு டி.என்.ஏ.வுடன் ஒட்டிக் கொண்டு தொங்குகின்றன. அப்போது செல்கள் அசாதாரணமாய், அதிவேகமாய் பிரிவதுடன், சிதைக்கப்பட்ட நகல்பதிமங்களையும் உண்டுபண்ணுகின்றன. இதன்மூலம் புற்றுச் செல்களை உருவாக்குவதுதான் புற்றுநோயின் இரண்டாம் கட்டம். இந்த நிலையிலும் உடலின் பாதுகாப்பு எந்திரங்கள் இவற்றை மீட்க பெரும் போராட்டம் நடத்துகின்றன. ஆனாலும், போராடும் செல்களுக்கு, புற்றுநோய்செல்களுக்கு இணையான

போதுமான இரத்தமும், ஆக்ஸிஜனும் போதாததால், இப்போரில் காக்கும் படைச் செல்களால் வெற்றிபெற முடியாமல் போகிறது. புற்றுநோய் செல்கள் பெருகியதும், இவை சின்னச்சின்ன புற்றுக்கட்டிகளாய் மாறுகின்றன. அபரிதமாய் வளர்கின்றன. இவைகட்கும் புதிய புதிய இரத்தக்குழாய்கள் கிளைத்து இரத்தமும் ஆக்ஸிஜனும் தரப்பட்டு போஷாக்குடன் வளர்கின்றன. இச்சமயத்தில் புற்றுநோய்க் கட்டிகள் இடம் பெயர்ந்து, ஒரு இடத்தைவிட்டு உடலின் பல்வேறு பகுதிக்கும் பரவத் தொடங்குகின்றன. இது புற்றுநோயின் மூன்றாவது கட்டமும், நோய் முற்றிய நிலையுமாகும்.





தாவர வேதிப் பொருட்கள் புற்றுநோய் கட்டிகளுக்குச் செல்லும் இரத்தக் குழாய்களின் கழுத்தைநெறித்து, இரத்த ஓட்டத்தை தடை செய்கின்றன என்று பல சோதனைகள் மூலம் தெரிய வந்துள்ளது. காரட்,திராட்சை மற்றும் சோயா மொச்சையில் உள்ள கோக்ஸ்–2 (COX-2) என்ற வேதிப் பொருள் புற்றுநோய் கட்டிக்கு இரத்தம் செலுத்தும் இரத்தக் குழாய் களுக்குத் தொல்லை தந்து நிறுத்து கின்றது. கோக்ஸ்–2 மூலம் புற்றுக்கட்டிகள் வெடித்து சிதறுகின்றன என்பது நிரூபிக்கப் பட்டுள்ளது. பழங்களிலும், காய்கறிகளிலும் எதிர்–ஆக்ஸிகரணிகளிலும், வைட்ட மின்களிலும், பீட்டா கரோட்டீன்களும் கோக்ஸ்–2 அதிகம் உள்ளது. இதுதான் டிஎன்ஏ வைத்தாக்கும் தனி அயனிகளைக் கிடுக்கிப்பிடி போட்டு நெருக்கி செயல்பட விடாமல் தடுத்து நம்மை புற்றுநோயிலிருந்து காப்பாற்றும் ஆபத்பாந்தவன்.

**புற்றின் வளர்ச்சி நிலை**

**துவக்க நிலை :** வெளி அல்லது உள் காரணிகள் உள்ளே நுழைந்து செல்லின் பாரம்பரிய கட்டமைப்பில் மாற்றத்தைத் தூண்டி செல்களைச் சிதைத்து புற்றுச் செல்கள் வளரத் துவங்குகின்றன

**உணவின் பங்கு :** அதிக வெப்பத்தில் வேக வைத்த மாமிசத்தில் உள்ள ஹெட்டிரோ சைக்ளின், வேக வைத்த உணவில் உள்ள பாலிசைக்னிக் அரோமேட்டிக் ஹைடிரோ கார்பன் (Polycyclic Arometic Hydrocarbon) மற்றும் கெட்டுப்போன உணவில் உள்ள என் நைட்ரோசோ ஆகியவை உடலில் புற்றுக் கிருமிகளின் (Carcinogen) எண்ணிக்கையை அதிகப் படுத்துகின்றன.

நாம் உட்கொள்ளும் காய்கறி மற்றும் பழங்கள், உடலுக்குள் புற்றுக் கிருமிகளைக் கொல்லும் நொதிகளை உருவாக்குகின்றன. முட்டைக் கோசு, காலிப்ளவர் போன்றவற்றில் உள்ள டைதியோல் தையேன்ஸ் (Dithiol Thiones) என்னும் வேதிப்பொருள் புற்றுநோய் காரணிகளை இயக்கும் நொதிகளைத் தடை செய்து விடுகின்றன.

**புற்று நோய் செல்கள் அதிகரித்தல்:** செல்களின் எண்ணிக்கை அதிகரிப்பு என்பது புற்றின் இரண்டாம் கட்டமாகும். செல்கள் விரைந்து பரவி தான் யார் என்பதை மற்ற செல்களுக்கு இனம் காட்டி விடும்.

**உணவின் பங்கு :** செலீனியம் மற்றும் வைட்டமின் டி உள்ள உணவுப் பொருட்கள், புற்றுக் கட்டிகள் பரவுவதைத் தடுக்கின்றன. பருப்பு வகைகள், மீன், மாமிசம், ஈரல் மற்றும் கடல் உணவுகளில் உள்ள தாதுப் பொருளான செலீனியம், தானாக எதிர் ஆக்ஸிகரணியாகச் செயல்படாது. ஆனால், செல்கள் அழிந்து போவதைத் தடுக்கும் குளூடாதியோன் பர் ஆக்சிடேஸ் (Glutahinone peroxidase) என்னும் நொதியுடன் இணைந்து செயல் பட்டு புற்று பரவுவதைத் தடுக்கிறது.

**புற்று முற்றிய நிலை :** இது புற்றுநோயின் இறுதிக் கட்டமாகும். செல்லினுள் ஏற்பட்ட சிதைவு, கூட்டம்கூட்டமாக உடலின் மற்ற செல்களுக்கும் பரவும். டிஎன்ஏ முழுவதும் அழிந்த நிலையில் இருக்கும். இந்த நிலையில் புற்றுக் கட்டிகள் கூட்டம் கூட்டமாக உடலின் பல பாகங்களுக்கும் வேகமாகப் படையெடுக்கும். இந்த நிலை மெட்டாஸ்டேட்டிஸ் (Metastatis) எனப்படும்.

**உணவின் பங்கு :** பச்சைக் காய்கறிகள், இலைகள் உள்ள காய்கறிகள் மற்றும் முழுத் தானியங்கள் ஆகியவை டிஎன்ஏ வின் அழிவைத் தடுக்கின்றன. பழம் மற்றும் காய்கறிகளில் உள்ள கரோட்டினாய்டு என்ற நிறமிகள் எதிர் ஆக்ஸிகரணிகளின் தன்மைகளைக் கொண்டுள்ளன. காரட்,சர்க்கரை வள்ளி, மாமபழம், புதினா, ஆரஞ்சு நிறப் பழங்கள் மற்றும் காய்கறிகளில் பீட்டா கரோட்டின் அதிகமாக உள்ளது.

*நன்றி : மருத்துவ அறிவியல் மலர்*

# தரிசு நிலங்கள் பண்ணைத் தோட்டங்களாக மாற்றம்

– மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தினை மிகப் பெரிய அளவில் செயல்படுத்துகின்ற வகையில் ஒரு மாபெரும் திட்டத்தினை அறிவித்துள்ளார்கள்.

## புதிய திட்டம்

இந்தத் திட்டத்தின்படி 20 இலட்சம் ஹெக்டேர் பரப்புள்ள வறண்ட பயன்படுத்தப்படாத தரிசு நிலம், முற்றிலும் மேம்படுத்தப்பட்டு பண்ணைத் தோட்டங்களாக மாற்றியமைக்கப்படும். ஒவ்வொரு வருடமும் 4 இலட்சம் பரப்பளவுள்ள தரிசு நிலம், இந்த திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு, 5 ஆண்டுகளில் இந்தத் திட்டம் நிறைவு செய்யப்படும். தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வேளாண்மைத்துறை செயல்பாடுகள் குறித்த பணி ஆய்வு குறித்து நடத்திய ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின்னர் இந்த முடிவினை எடுத்துள்ளார்கள். இத்திட்டத்தின்படி 200 அடிகளுக்கு ஆழமான துளைக் கிணறுகள் மற்றும் குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு அவை சொட்டுநீர் பாசன முறையுடன் இணைக்கப்பட்டு பயன்படுத்தப்படும்.

## தோட்டப் பண்ணைகளில் வசதிகள்

இந்த மாபெரும் பண்ணைத் தோட்ட மேம்பாட்டு திட்டத்தின்படி, தற்போது தரிசாக உள்ள நிலம், 200 ஏக்கர் முதல் 1000 ஏக்கர் வரை பரப்பளவு கொண்ட பண்ணைகளாக உருவாக்கப்படத் திட்டமிடப் பட்டுள்ளது. இத்தகைய தோட்டப் பண்ணைகள் ஒவ்வொன்றும் உணவுப் பொருள்கள் பதப்படுத்தும் வசதிகள், குளிர்சாதன வசதிகள் மற்றும் இதர அடிப்படை கட்டுமான வசதிகளையும் கொண்டிருக்கும். மேலும், அவை உள்நாட்டுச் சந்தை மற்றும் வெளிநாட்டு ஏற்றுமதி சந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் அமைக்கப்படும். இதற்காக தேவையான நில சீர்திருத்த நடவடிக்கைகளும் கொண்டு வரப்படும். அரசு இந்தத் திட்டத்தினை தனியார் தொழில் முனைவோர், அரசு சாராத் தொண்டு நிறுவனங்கள், கிராமப்புற மக்கள் ஆகியோரது பங்கேற்புடன் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக, ஊரகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு மிகப் பெரிய ஊக்கம் அளிக்கப்பட்டு, அதன் விளைவாக கிராமப் புறங்களிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

இந்தத் திட்டம் ஊரக பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோடு, தரிசு நிலங்களிலிருந்து கிடைக்கக் கூடிய கூடுதல் வருவாய், அவர்களுடைய வாழ்க்கை தரத்தையும், அவர்களது வாங்கும் சக்தியினையும் அதிகரிக்கச் செய்யும். பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப் படாமலேயே தரிசாக விடப்பட்டிருந்த 20 இலட்சம் ஹெக்டேர் பரப்பிலான நிலத்தில், இந்தத் திட்டத்தின் மூலமாக வேளாண் மற்றும் தொழில் துறை சார்ந்த நடவடிக்கைகள் நிறைய அளவில் மேற்கொள்ளப் பட்டு, அவை வளர்ச்சி மையங்களாக மாற்றப்படும். இதன் வாயிலாக பின்தங்கிய பகுதிகள், வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் அடைந்த பகுதிகளாக மாறும். இந்தத் திட்டத்தினுடைய அனைத்து விவரங்களும் வரவிருக்கின்ற நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்படும்.



# தொழில் முதலீட்டாளர்களுக்கு உதவிட

# டிட்கோ இணைய தளம்

தலைமைச் செயலகத்தில், உலகம் முழுவதிலும் உள்ள தொழில் முதலீட்டாளர்களுக்கு உடனடி தகவல் அளிக்கும் வகையிலான www.tidco.com என்னும் இணைய தளத்தை 19.7.2001 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) அமைத்துத் தந்துள்ள இந்த இணைய தளத்தின் மூலம் தமிழ்நாட்டில் முதலீட்டாளர்களுக்கான வாய்ப்புகள் மற்றும் வசதிகள் முதலியவற்றை அறிந்து கொள்ளலாம்.

இந்திய அரசின் தொழில் மற்றும் வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கைகள், அடிப்படை வசதிக் கொள்கைகள், ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கை (EXIM) வெளிநாட்டில் வாழும் இந்தியர்களின் முதலீட்டு வாய்ப்பு, அன்னிய செலாவணி விதிமுறைகள் (FEMA), சுற்றுச்சூழல் சட்டங்கள், தொழில்களுக்கான வெளிநாட்டு வணிகக் கடன்கள் பெறுவது குறித்த விவரம் போன்ற பல்வகை தகவல் விவரங்களை "டிட்கோ" இணைய தளம் அளிக்கிறது. இந்திய அரசு சமீபத்தில் வெளியிட்டுள்ள தகவல்களையும் இந்த இணைய தளம் அளிக்கிறது.

தமிழ்நாட்டின் பொருளாதாரம் மாநில அரசின் கொள்கைகள், அடிப்படை வசதிகள், தொழில் பூங்காக்கள், டிட்கோ நிறுவனம் அதன் நடவடிக்கைகள், ஏனைய நிறுவனங்களின் உதவி, ஒற்றைச் சாளர முறை முதலியன குறித்த தகவல் விவரங்களையும் டிட்கோ இணைய தளம் அளிக்கிறது.



இந்திய அரசு நிதி உதவி நிறுவனங்கள், இந்தியத் தூதரகங்கள், பலதரப்பு நிறுவனங்கள், தமிழக மற்றும் மத்திய அரசு அமைப்புகளின் அனைத்து இணைய தளங்கள் முதலியன உட்பட 2000 இணையதளங்கள் இந்த இணையதளத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

டிட்கோ இணையதளத்தில் தேடுதல் (Search Facility), மற்றும் பரிமாற்ற வசதி (Interactive Facility), செய்யப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இதில் அடிக்கடி கேட்கக்கூடிய வினாக்கள், அவற்றிற்கான பதில்கள் பெறுகின்ற (FAQ), வசதிகள் உள்ளன. இதன் மூலம் முதலீட்டாளர்களிடமிருந்து 300க்கும் மேற்பட்ட சாத்தியமான வினாக்களுக்குப் பதில்கள் பெறலாம். தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகள், அதன் அனுகூலங்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய தகவல் படங்களும் இதில் இடம்பெற்றுள்ளன. தொழில்நுட்பம், வெளிநாட்டு முதலீட்டைப் பெற ஏதுவாக இந்த இணையதளத்தில் தகவல் பரிமாற்ற வசதி ஒன்றையும் டிட்கோ அறிமுகப்படுத்தியுள்ளது. தொழில் ஒத்துழைப்பைக் கோருகிற தொழில்கள், தகுதி வாய்ந்த பங்குதாரர்களைக் கண்டறிய இந்த பரிமாற்ற வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த இணையதளம் www.tidco.com மிகவும் விரிவான இணையதளமாகும். இதில் 132MB தகவல் அடங்கியுள்ளன. இந்த இணையதளத்தில் கொடுக்கப்பட்ட தகவல்களின் பிரதி 6000 பக்கங்களுக்கும் கூடுதலாகும்.

15 நாட்களுக்கு ஒரு முறை டிட்கோ இந்த இணையதளத்தை அந்தந்த காலத்திற்கேற்ப மேம்பாடு செய்வார்கள். எத்தனை முறைகள், எந்தெந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் இந்த இணையதளத்தை பயன்படுத்தியுள்ளனர் என்பது போன்ற விவரங்களையும் பெற இயலும்வகையில் இந்த இணையதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்ப விஞ்ஞான வளர்ச்சியை உறுதுணையாகக் கொண்டு உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களைப் பெருமளவில் ஈர்த்து, தொழிற் துறையில் தமிழ்நாட்டை முதல் நிலைக்குக் கொண்டு வர அயராது பாடுபட வேண்டும் என்ற நோக்கத்திற்கு இணங்க தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இப்புதிய இணைய தளத்தைத் தொடங்கி வைத்துள்ளார். இந்த நிகழ்ச்சியை ஒட்டி தமிழக முதலமைச்சர் அவர்கள் வாழ்த்துச் செய்தியை அளித்துள்ளார்.





# முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்குத் தாராளமாக நன்கொடை வழங்க தமிழக முதலமைச்சர் வேண்டுகோள்

இந்த அரசு பதவியேற்ற நாள் முதல் ஏழை எளிய மக்களின் துயர் துடைப்புப் பணிகளை நிறைவேற்ற முழு மூச்சுடன் செயல்பட்டு வருகிறது. சமுதாய மேம்பாட்டிற்கான பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றுதல், சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல் போன்றவற்றோடு மனிதநேய அடிப்படையில் பல்வேறு சமூகநலத் திட்டங்களையும் துயர்துடைப்புப் பணிகளையும் செயலாக்குவதை இந்த அரசு இலட்சியமாகக் கொண்டு கடைப்பிடித்து வருகிறது.

கடுமையான நோயினால் பாதிக்கப்பட்ட நலிந்தோர்க்கு உயர் மருத்துவ அறுவை சிகிச்சைக்கு உதவிடவும், இயற்கைச் சீற்றங்கள் மற்றும் விபத்துக்களால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி செய்யவும், நலிந்த தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளித்திடவும் மற்றும் பல்வேறு காரணங்களால் சமூகத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிடவும் முதலமைச்சர் பொது நிவாரண நிதி முக்கிய பங்காற்றுகிறது.

முதலமைச்சர் பொது நிவாரண நிதி, மனித நேயம் கொண்ட பெருமக்கள் தாராளமாக வழங்கும் நன்கொடைகளையே முக்கிய ஆதாரமாகக் கொண்டு இயங்கி வருகிறது. முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு வருமான வரிச் சட்டத்தின்படி முழு வருமான வரிவிலக்கு உண்டு.

பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்டு அவதியுறும் நலிந்தோருக்கு தொடர்ந்து உதவிடும் வண்ணம் மனித நேயமும், கருணை உள்ளமும் கொண்ட பொதுமக்கள் அனைவரும் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்குத் தாராளமாக நன்கொடை வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நிதி வழங்க விரும்புவோர் "முதலமைச்சர் பொது நிவாரண நிதி" என்ற பெயரில் காசோலை/வரைவோலைகளை,

**அரசு துணைச் செயலாளர் மற்றும் பொருளாளர்**
**"முதலமைச்சர் பொது நிவாரண நிதி"**
**நிதித்துறை, தமிழ்நாடு அரசு,**
**தலைமைச் செயலகம், சென்னை–9**

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்  நிதியிலாதவர் காசுகள் தாரீர்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தேவ. ஜோதி ஜெகராஜன், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906

உங்களின் நீண்டநாள் கனவை நனவாக்கும் புதிய திட்டம்.

### கோ-ஆப்டெக்ஸின்

# பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்.

உங்கள் மனங்கவர்ந்த பட்டுப்புடவை ஒன்றை வாங்கவேண்டும் என்று நீண்டநாட்களாக நினைத்திருப்பீர்கள். ஆனால் அதன் விலையை நினைத்து வாங்காமல் இருந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களின் ஆசையை நிறைவேற்றவே, கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்துகிறது, **"பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்"**.

மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை முதல் 9 மாதங்களுக்குச் செலுத்தினால் 10-வது தவணையை கோ-ஆப்டெக்ஸ் ஏற்று மொத்தத் தொகையின் மதிப்பில், அரசு தள்ளுபடியுடன் பட்டுப்புடவையை பெற்றுக்கொள்ளலாம்.

குறைந்த செலவில் தங்களின் நீண்டநாள் கனவு நனவாகும் ஓர் அரிய வாய்ப்பு!

**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை !**

| வ.எண் 1 | மாதச் சந்தா ரூ. 2 | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை ரூ. 3 | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. 4 | கூடுதல் தொகை (3+4) ரூ. 5 | அரசு தள்ளுபடி * ரூ. 6 | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. 7 |
|---|---|---|---|---|---|---|
| 1. | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4. | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5. | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

* அரசு தள்ளுபடியானது தற்பொழுது நடைமுறையில் உள்ள 20%க்கு ஏற்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது. திட்டத்தின் முதிர்வு காலத்தில் அரசால் வழங்கப்படும் தள்ளுபடி சதவீதம் கணக்கிட்டு வழங்கப்படும்.

இந்த வசதி தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, பட்ட[illegible]ளை, குறளகம், வானவில் - சென்னை, கோ-ஆப்டெக்ஸ் மகாராணி - கோயம்புத்தூர், கோ-ஆப்டெக்ஸ் அங்கயற்கண்ணி - மதுரை, கோ-ஆப்டெக்ஸ் பவளம் - ஈரோடு, கோ-ஆப்டெக்ஸ் அமுதசுரபி - திருச்சி, கோ-ஆப்டெக்ஸ் பட்டு மாளிகை - தஞ்சாவூர், தங்கம் பட்டு மாளிகை - சேலம் மற்றும் இதர பெருவிற்பனை நிலையங்களில் மட்டுமே கிடைக்கும்.

**இன்றே இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்.**



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

பாரம்பரியத்தின் பெருமை. காலத்திற்கேற்ற ரசனை.

தமிழரசு
R.N.I.No. 21446/70
Licence No.G/TN/CPMG/190, WPP-130

